சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி 23 உ (7-1-68) சனி ஷவ்வால் 6 — புத்தகம் 22 இதழ் 19




# அடுத்த உலகத் தமிழ் மாநாடு இலங்கையில் நடைபெறும்?

## சென்னை மாநாடு இவ்வாரம் முடிவுசெய்யும்

உலகத் தமிழாராய்ச்சிமன்றத்தின் மூன்றாவது மகாநாடு 1970-ம் ஆண்டு ஈழத்தில் நடைபெறவேண்டும். இவ்வாறு கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சென்னையில் தற்போது நடைபெற்றுவரும் தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது வற்புறுத்துவாரென்று தெரிகிறது. அமைச்சர் திருச்செல்வமும் இதே கருத்தைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முதலாவது மாநாடு 1966ல் கோலாலம்பூரில் நடைபெற்றது தெரிந்ததே. இரண்டாவது மாநாடு தமிழின் தாயகமாகிய தமிழ் நாட்டின் தலைநகரில் தற்போது கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

அடுத்த — மூன்றாவது — மாநாடு, அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழும் இலங்கையில் நடைபெறவேண்டும் என்று ஈழத் தமிழ் மக்கள் பெருவிருப்புக் கொண்டுள்ளனர். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் இந்த எண்ணத்தை இப்போது நடைபெறுவரும் மாநாட்டில் கிளிநொச்சி பா. உ. பண்டிதர் இரத்தினம் எடுத்துக்கூறுவாரென்று தெரிகிறது.

அடுத்த மாநாடு பாரிசில் நடைபெற வேண்டும் என்று சிலர் கருத்து வெளியிட்டுள்ளதை திரு. இரத்தினம் ஆட்சேபிப்பாரென்றும், 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இலங்கையிலேயே அடுத்த மாநாடு நடைபெற வேண்டும் என்றும் திரு. இரத்தினம் சுட்டிக்காட்டுவாரென்று தெரிகிறது. சில துறைகளில் தமிழ் மொழி தமிழகத்திலும் பார்க்க எமது ஈழநாட்டில் வளம் பெற்றிருப்பதை உள்ளூராட்சி அமைச்சர் மாநாட்டில் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே அடுத்த மாநாடு ஈழத்தில் நடைபெறுவது பொருத்தமே.

தற்போது சென்னையிலிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வமும் இதே கோரிக்கையை விடுப்பாரென்று அறியப்படுகிறது. மாநாட்டு வட்டாரங்களில் இந்தக் கருத்துக்கு ஆதரவு இருப்பதாக நமது சென்னை நிருபர் அறிவிக்கிறார்.

சென்னை மாநாட்டுக்கு பார்வையாளர்களாக தமிழரசுப் பா. உ.களான திருவாளர்கள் செ. இராசதுரை, க. துரைரத்தினம், இராசமாணிக்கம் தம்பதிகள், அமிர்தலிங்கம் தம்பதிகள் ஆகியோர் சென்றுள்ளனர்.

அடுத்த மாநாட்டை, 1970ல் இலங்கையில் நடத்த வேண்டுமென்று, இ. தி. மு. க.வைச் சேர்ந்த திரு. மணவைத் தம்பியும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கு ஒரு அவசரத் தந்திமூலம் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றாலும் பரவாயில்லை தமிழரசு தோற்க வேண்டுமாம்!

எதிர்வரும் கல்முனை இடைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றாலும் எமக்கு கவலையில்லை. ஆனால் தமிழரசுக்கட்சி வெற்றி பெறக் கூடாது. அதற்காகவே மாஜி செனட்டர் மாணிக்கம் இடைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளார்.' இவ்வாறு கல்முனை இடைத் தேர்தலில் ஓர் வேட்பாளராக போட்டியிடப் போவதாக கூறப்படும் மாஜி செனட்டர் மாணிக்கத்தின் சகாவொருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

திரு மாணிக்கத்தின் நெருங்கிய நண்பரான அவர் மேலும் தெரிவித்ததாவது:—

'இவ்விடைத்தேர்தலில் திரு. மாணிக்கம் போட்டியிட முன்வந்திருப்பது, தமிழரசு வேட்பாளருக்கு வெற்றி பெறும் வாய்ப்பை ஏற்படாமல் செய்யத்தான். தமிழரசுக் கட்சி தேர்தலில் வெற்றி பெற கூடாது என்பதே எமது முக்கிய நோக்கம்.'

திரு. மாணிக்கம் போட்டியிடுவது கல்முனையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக துவேஷத்தை கக்கி வரும் சுதந்திரக்கட்சி வெற்றி பெறுவதற்கு வழி வகுத்து கொடுப்

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் விலை குறைப்பு

விலை வாசிகள் அதிகரித்து அன்றாட வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துவிட்ட காரணத்தினால், 25 சதம் கொடுத்து வாரா வாரம் சுதந்திரனை வாங்குவது கஷ்டமாக இருக்கிறதென்றும், இதனால் சுதந்திரன் விலையைக் குறைக்கும்படியும் பல வாசகர்கள் நமக்கு எழுதியுள்ளனர். குறிப்பாக மலையக வாசகர்களிடமிருந்து இக்கோரிக்கை பெருமளவில் வந்துள்ளது.

சுதந்திரன் உங்கள் பத்திரிகை. எனவே உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய சுதந்திரன் முன்வருகிறது. ஆம் பெப்ரவரி முதல் வாரத்திலிருந்து சுதந்திரனை நீங்கள் குறைந்த விலையில் பெற முடியும்.

அதே நேரத்தில் எமது அச்சக உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளன. அதனால் சுதந்திரனை உங்களுக்கு குறைந்த விலையில் தருவதற்காக பெப்ரவரி முதல் வாரத்திலிருந்து சில பக்கங்களைக் குறைக்க வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும் உங்களுக்கு வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

எனினும் சுதந்திரன் வழமைபோல சகல அம்சங்களுடன் வெளிவரும்.

வாசகர்கள் இதற்குக்காட்டும் உற்சாகத்தைப் பொறுத்து, சுதந்திரனை வாரம் இருமுறை வெளியிடுவது பற்றியும் ஆலோசிக்கப்படும் என்பதையும் மகிழ்வுடன் கூறி வைக்க விரும்புகிறோம்.

—நிர்வாகி.

## "மலையகத் தமிழர் ஈழத் தமிழரல்லர்"

—சுந்தரலிங்கம்

மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் அல்லர்; அவர்களுக்காக நாம் ஏன் போராட வேண்டும்? இப்படி அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கிறார் முன்னாள் வவுனியா எம். பி. திரு சி. சுந்தரலிங்கம்.

(9-ம் பக்கம் பார்க்க)

"மெய்கண்டான்"

| | | |
|---|---|---|
| 1. A ஆபீஸ் கலண்டர் (5''X7¼'') ......... (அழகிய வெள்ளை பாங்க் காகிதத்தில் அச்சிடப்பட்டது) | | 5-75 |
| 2 B ஆபீஸ் கலண்டர் (5''X7¼'')......... (சாதாரண வெள்ளை நியூஸ்காகிதத்தில் அச்சிடப்பட்டது) | | 4-75 |
| 3. ஆபிஸ் கலண்டர் (தேதி பிளக்கின் அளவு 5''X7¼'' நியூஸ் காகிதத்தில்) | | 4-75 |
| 4. திருக்குறட் கலண்டர் | No 1 ஸ்பெசல் B | 2-40 |
| 5. நன்மொழிக் கலண்டர் | No. 2 | 1-40 |
| 6. மாதக்கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | | -85 |
| 7. சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | | 2-15 |
| 8. ரேபின் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | | 5-50 |
| 9. தகரப்படம் (அழகிய பல மாதிரிகள்) | | 2 75 |
| 10. No. 1 பிளாஸ்ரிக்தமிழ்டயறி (பிளாஸ்ரிக்கவருடன்) | | 2-75 |
| 11 No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி | ,, | 2-20 |
| 12 No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க டயறி | ,, | 3-60 |
| 13. No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி | ,, | 2-20 |
| 14. No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி | ,, | 1·75 |
| 15. No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி A (பக்கம் 1 நாள்) | | 3-85 |
| 16. No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி B (பக்கம் 2 நாள்) | | 3-30 |
| 17 No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | | 3-55 |
| 18. பிளாஸ்ரிக் சிங்கள டயறி | ,, | 2-20 |
| 19. பேர்ஸ் சிங்கள டயறி | ,, | 3-30 |
| 20. பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | | 5 50 |
| 21. No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ்சகிதம் WithPurse) | | 3-70 |
| 22. No. 2 பேர்ஸ் திருக்குறள டயறி | ,, | 3-15 |
| 23. No 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி | ,, | 3-15 |
| 24 No. 5 பேர்ஸ் இங்லிஸ் டயறி | ,, | 2-75 |
| 25. No. 6 பேர்ஸ பிஸ்னஸ் டயறி A (பக்கம் 1 நாள்) | | 4-95 |
| 26. No 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி B (பக்கம் 2 நாள்) | | 4-40 |
| 27. No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | | 5-25 |
| 28. வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | | 6-50 |
| 29 ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்றிக் | | 1 85 |
| 30. ஜெம் பேர்ஸ் டயறி (Gem purse Diary) | | 2-75 |
| 31 புரொபெஷனல் பிளாஸ்ரிக் (Appointments) டயறி மிகப் பெரிது 7¼x9¼ அளவுள்ளது | | 7·00 |
| 32. புரொபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | | 4-15 |
| தங்கநிற (Rolled Gold) பூட்டுடன் கூடிய பேர்ஸ டயறிகள் | | |
| No. 2 திருக்குறள் டயறி (பூட்டுடன் பேர்ஸ்) | | 4-25 |
| No. 2 திருக்குறள் சினிமாடயறி | ,, | 4-75 |

இன்னும் பல உண்டு.

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
போன்: 79141
கொழும்பு-11

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதத்தின் சுயசரிதம்

நான்தான் கடிதம்; ஆரம்பகாலத்தில் ஓலைச் சட்டை போர்த்தியிருந்தேன். இப்போது காகிதச்சட்டை அணிந்துள்ளேன் முன்புஎழுத்தாணியால் குத்தி கொடுமை செய்யபபட்டேன். இப்போ கண்ணுக்கினிய வண்ண மைகளால் மேனி மினுக்கி வருகின்றேன்.

என் வரவை எதிர்நோக்கி இருப்போர் தொகை அதிகம். சிலர் என்னைக் கண்டதும் சிரிப்பார்கள், சிலர் தம் கைபட என்னை கண்ணில் ஒற்றிக் கொள்வார்கள் இதற்கு மாருக சிலர் கண்ணீர் சிந்துவார்கள் சிலர் கடுஞ்சினம் கொண்டு என்னை கசக்கியும் எறிவார்கள்! இவ்வளவும் நடைபெறும் என் வரவினுல்.

ஒரு காலத்தில் நான் பறவைகள் கழுத்தில்கட்டப்பெற்றே, காதம்பல கடந்துள்ளேன். பின்னர் சிலநாள் குதிரைகள் மீதும் சென்றுள்ளேன். ஆட்கள் தோள்மேல்துண்டுகிடந்து தொலைநாடுகளை அடைந்துள்ளேன். மாட்டு வண்டில்களிலும் வெய்யிலிலும் மழையிலும் படாமல் பக்குவமாகப் பயணம் செய்த காலமும் உண்டு, அதெல்லாம் பழங்காலக்கதை; இப்போதைய என்பயணத்தைபற்றி சுருங்கி சொல்கின்றேன் கேட்கவும்.

எழுதும் இடத்தையும், எழுதும் நாளையும் ஒருகோடியிலும் எழுதுவோர் பெயரையும் முகவரியையும் மற்ருெரு கோடியிலும் என்மீது தலைப்பில் எழுதிவிடுகிருர்கள். பிறகு என் முதுகில் நான் தாங்கி நிற்கும் செய்தி சேரவேண்டியவர் களது விலாசத்தையும் எழுதுகின்ருர்கள். பிறகு என்எடைக்குரிய கூலியைக் கொடுத்து ஓர் அஞ்சல் தலையை வாங்கி என் மேல் ஒட்டிவிடுகிருர்கள். சிலர் பசை தடவி ஒட்டுவார்கள். பண்புதெரியாத பலர் எச்சிலைத் தடவிவிடுவதும் உண்டு. அப்போது என் உடல் எவ்வளவு நாணும் தெரியுமா? அதைக்கூறி என்னபயன்? என் குறை யார்காதில் விழப்போகிறது.

இவையெல்லாம் முடிந்த பின்னர், என்னை ஒரு அஞ்சல் பெட்டியில் போட்டு விடுகிருர்கள். எழுதியவர் வேலை அத்தோடு முடிந்தது. அஞ்சல் நிலைய அலுவலர் எனக்கு அப்பெட்டியலருந்து விடுதலை அளிக்கிருர். அய்யோ! விடுதலையா அது. வெளியில் எடுத்ததும் முத்திரை என்று சொல்லி ஓங்கி ஒரு குத்து வைக்கிருர். என் உடல் எல்லாம் ஒடிந்து விடுகிறது. ஓ என்று அழுவோமா என்று தோன்றும்; ஆனுல் நாங்கள் தான் அழக்கூடாது என்பது இயற்கை விதியாயிற்றே; அழமுடியுமா? மௌனமாகஅதைத் தாங்கிக் கொள்வேன். அத்தோடு விடடதா? பிறகு என்னை ஒரு பெரிய பையில் போட்டு காற்று புகாதபடி இறுக்கிக்கட்டி அரக்கு முத்திரை இட்டுவிடுகிருர்கள்! மூச்சுத்திணற மெய்வியர்க்க எப்போது வெளியில் விடுகிருர்களோ என்ற ஏக்கத்தோடு அடைபட்டிருப்பேன். பையோடு என்னை எங்கோ எடுத்துச் செல்வார்கள். சில இடங்களில் தூக்கி எறியப்படுவேன் சில இடங்களில் பஸ்ஸில் செல்வேன், சில இடங்களுக்கு புகை வண்டிகளில் செல்வேன் வாய்ப்புக் கிடைத்தால் ஆகாய விமானத்திலும் செல்வேன்.

கடைசியில் என் வருகைக்காகக் காத்திருப்பவர் ஊர் வந்துசேர்வேன். அங்குஎனக்கு விடுதலை கிடைக்கும். ஆனுல் வெளியில் வந்தேனே இல்லையோ மீண்டும் என் முதுகில் ஒரு குத்து விழும் மெல்லத் தாங்கிக்கொள்வேன். சிலர் என்னை அஞ்சலகத்துக்கேவந்து வரவேற்று எடுத்துச் செல்வதும் உண்டு. சிலர் நம் வீடு தேடி வரட்டும் என்று வாளா இருந்து விடுவதும் உண்டு. அவர்கள் வீட்டை அஞ்சலகப் பணியாளர் துணையால் அடையாளம் கணடு செல்வேன். இவே என் வரலாறு.

மக்கள் வாழ்க்கையை மலர வைக்கும் என் வாழ்க்கை எத்தனை இன்னலுக்கு உட்பட்டது என்பதை சிறுவர்களாகிய நீங்களேனும் உணர்ந்து என் பொருட்டு இரங்குவீர்கள் என எண்ணுகின்றேன். என்னை ஒருபோதும் மறவாதீர்கள் நன்றி.

இரா. கைலைநாதன்

மட்டக்களப்பு.

# மாணவர் அரங்கு

இனிய உளவாக இன்னுத கூறல்

கனியிருப்ப

காய் கவர்ந்தற்று

## மனிதன் ஓர் உயிர்ப் பொம்மை!

மனிதன் நாகரிகத்தின் முகட்டிலே நின்று கொண்டிருக்கிருனும் அதோ அந்தப்பேச்சு காற்றில் கலந்து வருகிறதே!

அழுகின்ற கண்களைத் துடைத்துவிட வேண்டுமென்ற எண்ணமில்லை. துடிக்கின்ற வயிற்றுக்கு ஒரு பிடி சோருவது கொடுக்கவேண்டுமென்ற துடிப்பில்லை அருள், அன்பு, காதல் எதுவுமே இல்லை! இப்படிப்பட்ட மனிதனை, தன்னலமும், கரவு மனப்பான்மையும் அழுக்காறும் புழுத்துக்கிடக்கும் சாக்கடை உள்ளமுடைய மனிதனை இன்று நாகரிகத்தின் முகட்டிலே நிற்பவனுகச் சொன்னுல்...... சிரிப்புத்தான் நெஞ்சை உழுகின்றது.

இன்றைய மனிதன் 'வளர்ச்சி! வளர்ச்சி!' என்று பிதற்றுகிருன். அவன் குறிப்பிடுகின்ற வளர்ச்சி உடலைப் பொறுததா? உள்ளத்தைப் பொறுத்ததா?

ஞல் உண்மையிலேயே அவன் 'வளர்ந்துவிட்டவன்தான்!'

மொழியறிவு நிறைந்தவனுக மனிதன் முன்னேறி நிற்கிருனுமே! 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பது பழைய வழக்கு; ஆனுல் மொழியறிந்தவன் மற்றொருவனுக்கும் உயிரனைய மொழியுண்டென்பதை அறிய வேண்டாமா? தன் மொழியைக் கட்டித் தழுவ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டல்லவா! அந்த உரிமையும் தவருக்கப்படுமென்றல் மனிதன் தன்னறிவை உறங்கவைத்துக் கொண்டானென்று பொருள். பிறமொழியைத் தன் மொழியென ஏற்பவனை எப்படி மொழியறிவு நிறைந்த மனிதனென ஏற்பது?...

அதோ மனிதன் வானவெளியைச் சுற்றி சுற்றி வருகிருன். அறிவியலின் வளர்ச்சியென்று உலகைக் கண்டு சிரிக்கிருன்.

மனிதன் வானவெளியில் எவ்வளவுதான் உயரப் பறந்

### "கல்முனைப் பூபால்"

இரண்டினையும் பொறுத்ததென்கின்ருனு? சேச்சே!...... என்ன கயமை!... 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்பது அவனுக்குத் தெரியும். ஆனுல் அதன்படி 'வாழ' அவனுல் முடியவில்லை; 'வாழ' அவனும் விரும்பவில்லை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' இது எவ்வளவு பெரிய மனதின் பண்பட்ட வளர்ச்சி. இந்த மன வளர்ச்சியோடு வாழ்வதுதானே உண்மையான மனித வாழ்க்கை; வாழ விடுவதுதானே பண்பட்ட மனிதனின் கடமை!

ஆனுல் டாழும் மனிதன் இன்று தன்னலத்தை வளர்த்துக் கொணடான். மண்ணுசைக்குள் இறுதியில் மண்ணுகும் மனிதன் கிடந்து புரள்கிருன். அதோ அவனுடைய வெறிக் கூச்சல் கேட்கிறதே!

''எல்லைத் தகராறு; என் மண்ணு? உன் மண்ணு?''

'நில் துப்பாக்கி ரவை நீதி உரைக்கட்டும்!'

இந்த வெறிக் கூச்சலையே மூச்சாக்கிக்கொண்ட மனிதன் தான் நாகரிகத்தில் வளர்ந்துவிட்டேன் என்கிருன். இன்றைய மனிதன் காட்டுமிராண்டித் தன்மையைத்தான் நாகரிகம் என்கிருனு? அப்படியா

தாலும் அவனுள்ளம் மட்டும் ஆண், பெண் என்னும் கருத்தற்று ஆடையின்றி காட்டு வழிகளில் அலைந்து திரிந்த அந்த நிலைக்கே மிக மிக விரைந்துகொண்டு செல்கிறது; தாழ்ந்து தாழ்ந்து இறங்கிக் கொண்டிருக்கிறது என்பது தானே உண்மை. அன்பில்லா வாழ்வும் ஒரு வாழ்வா? பட்டமரம் தளிர் விடவா செய்கிறது.

அதோ! அணு குண்டுகளை வீசி வீசி எறிகிருன்; கடலின் பரப்பெல்லாம் நச்சுப்புகை கவிந்துகிடக்கிறது. இதைக் கண்ட மற்றவனும் தன்னிடமிருக்கும் குண்டுகளை மூத்தவனுக்குப் போட்டியாக வீசி எறிந்து வெடிக்கின்ருன். உலகமோ நச்சுக்காற்றுள் மறைகின்றது. பெண்மையின் வயிற்றில் கிடக்கும் பிஞ்சுக்கருவின் வளர்ச்சியில் காலில்லை; கையில்லை; கண்ணில்லை; காதில்லை ஐயையோ...! முகமே இல்லை!

இப்படிப்பட்ட பிறப்பின் வகைகள்! பிறகு இவையே பிறப்பின் முறைகள்!

மனிதஉடல்களைக் குறைத்து விட்டோமென்று அறிவியற் கூறுகள் சிரிக்கின்றன... மனித உடல்கள் குறைக்கப்பட்டுவிட்டனவேயென்று அழிவுக்குள்ளானவர்கள அழுகிருர்கள்! அழிவை ஏற்படுத்தியவனே அறிவியல் முன்னேற்றமென்று இதைச் சொல்லித் திரிகின்ருன்.

மனிதன் தான் பெற்ற குழந்தையை முத்தமிட்டுக் கொஞ்சுகின்ருன். அந்தப் பிஞ்சு உள்ளத்திற்கு கரவும், கயமையும், அழுக்காறும், தன்னலமும் இன்னேரன்ன பிறவும் தெரியாது. ஆனுல் பிஞ்சுக் குழந்தை. பெரிய குழந்தையாக வளர்ந்துவிட்டால் ...... சேச்சே! என்ன மாற்றம்!

மனிதன் உலகத்தை மாற்றிவிட்டேன் என்கின்ருன்; உலகமோ மனிதனை கணத்துக்குக் கணம் மாற்றிவைத்து வேடிக்கை காட்டுகின்றது.

பிறக்கும்போது எதனைக் கொண்டுவந்தான் மனிதன்?

இறக்கும்பொழுது எதனைக் கொண்டு செல்லப் போகின்ருன்? ஒன்றுமில்லை!...

செத்தவுடன் அழுகை... ஒப்பாரி; பிறகு நெருப்புப் படுக்கை; இறுதியில் பிடிசாம்பலாகிப் போகின்ற நிலை! மனித வாழ்வின் இந்த நிலையை மனிதனே நாளும் பார்க்கிருன்; தானும் ஒருநாள் இப்படித்தான என்பதை உணரவும் செய்கின்ருன். இருந்தாலும் ஆசை அவனை விடவில்லை.

பாவம் மனிதன்!

தெரியாமற் பிறந்து, புரியாமல் வாழ்ந்து அறியாமல் மறைந்துவிடும் உயிர்ப் பொம்மை!

## இலங்கையின் புராதன நகரங்கள்

இலங்கையின் பெயர் உலகத்திலே ஒரு புராதன நகராய் மிளிர்கின்றது. பண்டைய மன்னர்கள் தங்கள் ராஜதானியாகக் கொண்டிருந்த தலைநகரங்களே தற்போது இலங்கையின் புராதன நகரங்களாக மிளிர்கின்றது. அன்னியரின் ஆசையைக் கிளறி தன்னிடத்தே இழுத்துக்கொண்டிருக்கும் காந்த சக்தி வாய்ந்தது எங்கள் இலங்கைநாடு. எங்கள் மணித்திருநாடு தன்னிடத்தே அநேக புராதன நகரங்களை அடக்கியுள்ளது. பாடசாலை மாணவர்களும், வெளிநாட்டாரும் பிரதான நகரங்களின் வேலை நுணுக்கங்களையும், பண்டைய மன்னர்களின் பெருமையையும் கண்டு களிப்பதற்காக இங்கு வந்து பல நாட்கள் தங்கிச் செல்வதை நாம் காண முடிகின்றது.

இவ்வாறு அங்கு பார்க்கக் கூடிய பொருள் என்ன இருக்கினறது. அங்கு எல்லோரையும் கவரும் சக்தியென்ன? என்று சிலர் எண்ணக் கூடும். ஆனுல் அப்படி எண்ணுபவர்கள் முட்டாள்கள். கிணற்றுத் தவளைகள் என்று தான் கூற வேண்டும். இந் நகரங்களுக்குச் சென்று இந்த நகரங்களின் அழியாப் புகழ் பெற்ற சித்திரங்களையும். வனப்பு மிகுந்த நுட்பங்களையும், சந்திர வட்டக் கற்களையும், கவர்ச்சி மிகுந்த நுண்ணிய வேலைப்பாடுகளையும் கண்டாற்தான் இதன் பெருமையும், பண்டைய அரசர்களின் கலை உணர்ச்சிகளையும் நம்மால் நன்கு அறிய முடியும்.

இலங்கையின் புராதன கட்டிடங்களில் பார்த்து மகிழ வேண்டியவை பல. அவற்றுள் பிரதானம் வாய்ந்தவை. அனுரதபுரி, சிகிரியா, கண்டி, பொலநறுவை, தம்புலா, மிகுந்தலை, மின்னேரி, கந்தளாய், நயினுதீவு போன்ற இடங்களில் கானும் நகரங்களேயாம். அனுரதபுரமும், பொலநறுவையும் சிங்கள அரசர்களின் புராதன இராசதாணிகளாய் விளங்கியது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அனுரதபுரி மடியிலே தவழும் ஆயிரங்கால் மண்டபம், ரூவான் வெலிச் சமாதி இவை ஒவ்வொன்றும் பார்ப்போர் உள்ளத்தில் அற்புதமான சிந்தனைகளை எழுப்புகின்றது.

தமையனுக்கு பயந்து சிகிரியாவை தலைநகராய்க் கொண்ட காசியப்பன் வணப்பு வாய்ந்தவற்றைக் கண்டு மகிழும் தன்மையுடையவன் என்பதை அவனது சித்திரங்களிலிருந்து அறிய முடிகின்றது. பாறையின் மேற்தளத்தில் செங்கற்களால் அமைக்கப்பெற்றதுமான நித்திரை செய்யும் சிங்கவுருவம் அக் காலத்தில் பார்த்தோர் மனதை அழியாது பதிந்திருக்குமெனலாம். காணப்படும் அச் சிங்கவுருவத்தின் நகங்கள் அவ்வுருவம் இப்போதும் மிகப்பிரமாண்டமான தென்பதைக் காட்டுகின்றது.

அடுத்து பொலனறுவையில் உள்ள சிவன் கோவில் சோழ மன்னர்களின் சிற்பம், ஓவியம் ஆகியவற்றின் சிறப்பை பிரதிபலித்துக் காட்டுகின்றது. தற்கால தொழில் நுட்ப மேதைகள் கூட வியக்கும்படி பராக்கிரம சமுத்திரம் கட்டப்பட்

### சிங்களவாடி மூர்த்தி

டிருக்கின்ற, தம்புலா மலையிலுள்ள கற்குகைக் கோயில்களும், நமக்கு எவ்வளவோ படிப்பினையைக் கொடுக்கின்றது. அதைப் போன்று தேவேந்திர திணையில் உள்ள மிகப் பழமையான விஷ்னு ஆலயமும் காடுகளின் மத்தியிலும் அழிந்த நிலையிலுள்ள புராதன இலங்கையின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையை ஆண்ட பண்டைய சிங்கள அரசர்கள் புத்தமதம் வளர மிகவும் பாடுபட்டார்கள் என்பதை கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறியலாம். பொலனறுவையிலுள்ள இலங்காதிலக விகாரையும், கல்விகாரையென அழைக்கப்படும் புத்தராமா விகாரையும் மிகச் சிறந்ததெனலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த நகரங்களை பல தேசத்தவர்களும் வந்து பார்த்து மகிழ்ந்து போற்றுகின்றனர். இத்தகைய அழகிய ஓவியம் நிறைந்த மலைகளும், கலை நுட்பங்களும், குளங்களையும் படிகளிலே பொறிக்கப்பட்டிருக்கும் சிறந்த சிற்ப வேலைகளையும் கண்டு பிரமிக்கின்றனர். இத்தனையும் நிறைந்த புராதன நகரங்கள் நம் இலங்கைத் தீவில் இருப்பதையிட்டு பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறோம்.

(மட்டுநகர்)

## அணில்

—(லிங்கதாசன்)—

தாவித் தாவிக் கொம்புகளில்
தத்திப் பாயும் அணிலே!— நீ
கேவிக் கேவிக் கத்துவதேன்?
கேட்கும் கேள்வி என்னவோ?

மாம்பழம் ஒன்று தாராயோ?
மதிப்புக் குறிய பழராஜ உன்
—ா
சர்ம்பல் யேணி யழ கிற்துச்
சந்தனம் பூசித் தருவேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: காங்கிரசின் வருங்காலத்தைக் கூறுவீரா?

ப: ஆனைப்பந்திக் காங்கிரசைப்பற்றிக் கேட்கிறீரா? அது தன் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. காரணம் அஞ்ஞாதவாசம் எப்பொழுதும் சைபில் தயாராக இருப்பதே.

கே: யாராவது ஒரு பா. உ. வுக்கு முத்துமாலை அளிக்க விரும்புகிறேன். யாருக்குக் கொடுப்பது?

ப: தங்கப்பவுண் மாலை என்றால் திரு. பொன்னம்பலத்துக்கு அணிவிக்கலாம். முத்து மாலை என்றால் .................... ............... எதற்கும் அவரை அணுகிக் கேட்டுப்பாருங்கோ!

ஃ

டி. எஸ். திலகம்,
கொம்பு—7

கே: 'மினி' சாரி இன்னும் இந்தியாவுக்கு வரவில்லை என்று நடிகை வைஜயந்திமாலா கூறுகிறாரே.

ப: அது ஈழத்து மங்கையர் திலகங்கள் கண்டு பிடித்த 'பாஷன்'. அதனை இங்கிருந்து தான் இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில் பாரிசிலிருந்து 'பாஷன்'கள் இந்தியாவில் இறக்குமதியாயினவாம். இப்பொழுது கொழும்பிலிருந்துதான் அங்கு இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஃ

ஆர். சுப்பிரமணியம்,
கல்முனை

கே: கல்முனை இடைத் தேர்தலில் ஒரு தமிழர் போட்டியிடப் போவதாக இங்கு வதந்திகள் அடிபடுகின்றன. உண்மையா?

ப: உண்மையா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் தமிழரசு வேட்பாளருக்குத் தமிழ் வாக்குகள் கிடைப்பதைத் தடுப்பதற்காக, சுதந்திரக் கட்சி தனது வேட்பாளருடன் சேர்த்து, ஒரு தமிழரையும் வேறு ஒரு 'லேபலில்' போட்டியிடச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதாக கொழும்பில் வதந்தி அடிபடுகிறது.

ஃ

வாசுகி,
மன்னிங்பட்டினம்

ப: தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படித்தால்தான் அரசாங்க உத்தியோகம் கிடைக்குமா?

ப: கிடைக்காது. அதற்குதான் சிங்களப் பிள்ளைகள் இருக்கிறார்களே. சிங்களம் படித்தாலும் படிக்காவிட்டாலும் தமிழர் இனி உத்தியோக ஆசையை அறவே கைவிட்டுவிட வேண்டியதுதான்.

ஃ

சொல்லின், செல்வன்,
கொட்டடி

கே: குயுக்தியாரே! 1967-ல் நடந்த சம்பவங்களில் தங்களால் மறக்க முடியாத சம்பவம் யாதெனச் செப்புவீரா?

ப: தி. மு. க. ஆட்சிக்கு வந்தது.

கே: 'சுதந்திரன்' வாசகர்களாகிய எங்களுக்கு புது வருடத்தினை முன்னிட்டுத் தாங்கள் அளிக்கவிருக்கும் பரிசு யாது?

ப: சுதந்திரன் விலையை 15 சதமாகக் குறைப்பது.

கே: உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் நாவலருக்குச் சிலை எழுப்புமாறு அண்ணாவைக் கேட்கும் திரு. பொன்னம்பலம் தானே ஒரு சிலை செய்வித்து கொடுத்தால் என்ன?

ப: அதற்காகும் செலவை நீங்கள் கொடுப்பதானால் அவர் சிலை செய்வித்துக் கொடுக்கத் தயாராம்.

ஃ

தாழையூர் நாகராஜன்,
தாளங்குடா

கே: நான் குசினிக்குள் மா [illegible] என் காதலி கண்டு கொண்டாள். அன்று தொடக்கம் என்னுடன் பேசுவது இல்லை! காரணம் என்ன?

ப: நீங்கள் ஒரு மாவன்னு பேர்வழி என்பது அவளுக்கும் தெரிந்துவிட்டதோ.

கே: ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் ராணியின் பார்வை......?

ப: நிச்சயம் உங்கள் பக்கம் அல்ல.

கே: ஒரு அழகியை கண்டேன். சிரித்தேன். அவளிடமிருந்து ஒரு காதல் கடிதம் கிடைக்குமா?

ப: கிடைக்காது. அதற்குப் பதிலாகக்கிடைக்கும் 'பளார்'!

ஃ

செல்வி அல்லிமுத்துலிங்கம்,
கம்பளை

கே: ஒரு நாட்டுக்கு வீரன் தேவையா அறிஞன் தேவையா?

ப: வீரமில்லாத அறிஞனும் வேண்டாம்—அறிவில்லாத வீரனும் வேண்டாம்.

ஃ

ஜே. அப்புஹாமி,
கருக்குப்பனை

கே: ஓய் குயுக்தியாரே, உமது உண்மையான பெயர் என்ன?

ப: 'யார்' இல்லாத வெறும் குயுக்தி.

ஃ

ஆர். கண்ணன்,
முன்னேஸ்வரம்

கே: கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா என்றால் என்ன அர்த்தம்?

ப: மாணிக்கக் கல்லெல்லாம் கல்லாகாதென்று அர்த்தம்.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னூர்

கே: நான் ஒரு கன்னிப் பெண்ணைக் காதலிக்கிறேன் அவள் என்னைக் காதலிக்கவில்லையே? ஏன்?

ப: உங்களின் 'அழகு' அவளுக்கு சாதல் எண்ணத்தை தூண்டவில்லையோ?

ஃ

நடராஜா,
ஒவிலிகந்தை

கே: ஒரு வீட்டில் 6 சகோதரர்கள். ஒருவரும் இன்னும் திருமணம் முடிக்கவில்லை. ஆனால் கடைக்குட்டியோ தனக்குத் திருமணம் செய்துவைக்காவிட்டால், ஒரு முழம் கயிறுக்கு தான் இறையாவேன் என்கிறான். இதற்கு வழி என்ன?

ப: அந்த ஒரு முழக் கயிற்றை ஒரு பெண்ணின கழுத்தில் கட்டச் சொல்லுங்கள்.

கே: சீனாவில் நடைபெறும் 'றெட் காட்' புரட்சி பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: 'புரட்சி' புஷ்வாணமாகி நீண்ட காலமாச்சே!

கே: செஞ்சட்டைத் தோழர்களுக்கு மா சே துங் கடவுளானது ஏன்?

ப: சீனா சுவர்க்கமாகிவிட்டதால்!

ஃ

................
வேம்பிராய் சந்தி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் சம்மதமும் பெற்றுவிட்டேன். ஆனால் அவளுடைய மாமன் மகன் சதிகாரன் என்று சொல்லி என்னுடன் சண்டைக்கு வருகிறானே?

ப: நேற்று வந்த நீங்கள் அடித்துக்கொண்டு [illegible] காத்திருந்த அவா சண்டைக்கு வராமல் வரவேற்பா [illegible] பார்?

சோ. குணரத்தினம்,
ஊரிக்காடு

கே: இந்த உலகில் பிறக்கும் எல்லோரும் ஒரு நாள் இந்த மண்ணுக்கு இரையாகின்றனர். இதை மனிதன் எப்போது உணர முடியும்?

ப: இரையாகும் போது.

ஃ

பொ. இ. இரத்தினம்,
கொழும்பு

கே: தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச கோரிக்கைகளையாவுதல பொன்னம்பலம் கட்சியினால் 3 வருடத்தில் பெற்றுதர முடியுமா?

ப: 3 வருடங்கள் முடிய இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றன். இதுவரை எந்தக் கோரிக்கையையும் பொ. கட்சி பெற்றுக் கொடுக்கவில்லையே!

ஃ

பி. குஞ்சு,
கைதடி.

கே: தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கை தமிழ் மக்களுக்கு பயன் அளிக்குமா?

ப: ஒருசில அடிப்படைக் கோரிக்கைகளைப் பெறுவதற்காக சமரசப் பாதையைக் கையாள்வதுடன், அவசியமும் கட்டாயமும் ஏற்படும்போது நேரடி நடவடிக்கையிலும் இறங்கவேண்டிய நிலை ஏற்படலாம். எனவே அது மக்களுக்கு இறுதியில் பயனளிப்பதாகவே இருக்கும்.

ஃ

வாசுகி,
மன்னிங்பட்டினம்.

கே: வடபகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படும் வெள்ள நிவாரணம் ஒருசிலருக்கு மட்டுமே கிடைக்கின்றது. ஏன் சமமாகப் பகிர்ந்தளிப்பதில்லை.

ப: பால் உணவு 'டின்'களையே சரியாக விநியோகிக்க முடியவில்லை. நிவாரண உதவிகளை எப்படி சரியாக விநியோகிக்க முடியும்?

கே: வெள்ள நிவாரணத்துக்கு ஆயிரம் ரூபா கொடுத்தால் அதை உடன் பேப்பரிலும்போட்டு விளம்பரம் தேட வேண்டுமா?

ப: விளம்பரம் பெறுவதற்காகவே பண உதவி கொடுக்கப்பட்டது என்பது அதிலிருந்து அம்பலமாகிறதல்லவா?

ஃ

ப. ஜெயகுமாரன்,
பருத்தித்துறை.

கே: உங்களுக்குச் சுவீப் அடித்தால் இந்த வேலையை யாரிடம் ஒப்படைப்பீர்?

ப: குயுக்தி மாமியிடம்.

ஏ. ஆர். ஏ. வதூத்,
கம்பளை

கே: திமிர் நடை, ஆடம்பரச் சிரிப்பு, அதிகாரப் பேச்சு இவ்வளவும் நிறைந்த ஒருத்தரின் வாழ்வு என்னவாகும்?

ப: தனிப் பெருந் தலைவரின் வாழ்க்கை போன்று அடிக்கடி அரசியல் அஞ்ஞாத வாசம் செய்யவேண்டியதேற்படும்.

ஃ

கோ. சுதந்திரபாலன்,
வேலணை

கே: 'கூட்டுக் கல்வி நாட்டுக்கு ஏற்றதா?'

ப: ஆண்—பெண் கூட்டு நாட்டிலே இருக்கும் வரை ஏற்றதே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

# "ஏழை வயிற்றிலடித்தவருக்கு தக்க பாடம் படிப்பிப்போம்"

கல்முனை விவசாயிகளிடம் ரூபா எட்டுக்கு ஒரு புசல் நெல்லை வாங்கி அரசாங்கத்திற்கு 12 ரூபாய்க்கு விற்று கொள்ளை லாப மடிப்பதற்கு தனது மகனுக்கு வழி வகுத்துக் கொடுத்த ஒரு நபர் கல்முனை இடைத் தேர்தலில் போட்டியிடப் போகிறாராம். அப்படி அவர் போட்டியிட்டால், கல்முனையிலுள்ள ஏழை விவசாயிகள் அவருக்கு தக்க பாடம் படிப்பிக்க தவற மாட்டார்கள்' என்று ஆத்திரத்துடன் சுதந்திரன் நிருபரிடம் கூறினார் கல்முனை தொகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர்.

அவர் மேலும் கூறியதாவது கல்முனை ஏழை விவசாயிகளிடம் ஒரு புசல் ரூபா 8க்கு ஏமாற்றி வாங்கி ரூபா 12க்கு அரசாங்கத்துக்கு விற்று குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதற்கு தமது மகனுக்கு வழி சொல்லிக்கொடுத்த ஒருவர், கல்முனை இடைத் தேர்தலில் போட்டியிடப்போவதாக கூறப்படுகிறது.

"இந்தப் பிரமுகர் ஏழை மக்களின் வயிற்றிலடிக்கும் குறித்த நெல் 'பிஸ்னெஸ்' செய்வதற்காக மகனுக்கு மக்கள் வங்கியிலும் கடன் வாங்கிக் கொடுத்து உதவி செய்திருந்தார் என்று தெரிகிறது.

ஏழை மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்த இவர்கள் தேர்தலில் போட்டியிட்டால் கல்முனை விவசாயி சரியான பாடம் படிப்பிப்பான்."


1968

ஆரம்பமாகிவிட்டது!
லீலாவை வாங்கத்தவறுதீர்கள்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
லீலா டயறி தினுசுகள்

இந்து போற்றிப்
முஸ்லிம் புகழ்ந்து
கிறிஸ்தவர் பாராட்டி
மகிழ்ந்து

வாங்கிப் பாவிக்கின்றனர்

நீங்கள்.....?

பொங்கல் அண்மையில்
500க்கு மேற்பட்ட சித்திரக் கலண்டர்
உங்கள் இல்லங்களை அலங்கரிக்கட்டும்

எங்கும் கிடைக்கும்

கேளுங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!

லீலா ஸ்டோர்ஸ்

249, ஓல்கொட் மாவத்தை,
புறக்கோட்டை
கொழும்பு - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சில் புதிய என். கியூ. டயஸ்?

**பா**துகாப்பு அமைச்சின் தற்போதைய நிரந்தரச் செயலாளர், பற்றொரு என். கியூ. டயசாக உருவாகி வருகிறாரா? இந்தக் கேள்வி பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு காரியமாகச் சென்றிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவர் மேற்கண்ட கேள்வியை நமது நிருபரிடம் கேட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

'திரு. என். கியூ. டயஸ் ஒரு கண்டியெடுத்த வகுப்புவாதி யென்று கூறப்பட்டவர். இனவெறி, மதவெறி இரண்டின் பொத்த உருவம் முன்னுள் நிரந்தர செயலாளர் திரு. என். கியூ. டயஸ் என்று நம்புப்படியாக அவரது செயல்கள் இருந்து வந்தன.

'ஆனல் தேசிய அரசாங்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து திரு. என். சியூ. டயஸ் வெளியேறினர் அவரது இடத்திற்கு திரு. ஜீ. வி. பி. சமரசிங்க பிரதமரால் நியமனம் செய்யப்பட்டார்.

'திரு. சமரசிங்கா எது வித பாரபட்சமுமின்றி நடுநிலைமையில், தனது கடமைகளை யாற்றுவார் என்று பலரும் எதிர்பார்த்தனர். அத்துடன் பாதுகாப்பு அமைச்சரான பிரதமரும் அமைச்சு சம்பந்தப்பட்ட விவகாரங்களை நேரடியாகவே கண்காணித்து வந்தார். இதனல் இனப்பாரபட்சம் தலைதூக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

'ஆயினும் பிரதமர் உணவுற்பத்தி போன்ற முக்கிய இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட நேரிட்டுள்ளதால் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தமான சகல விவகாரங்களையும் நிரந்தர செயலாளரே கவனிக்க வேண்டியேற்பட்டது.

'பாதுகாப்பு அமைச்சில் எனக்கு ஆகவேண்டிய ஒரு காரியத்துக்கு சென்ற நான் அங்கு மீண்டும் பாரபட்சம் தலை தூக்குவது போன்ற உணர்வு ஏற்படுவதை அறிந்தேன்.

'தற்போதைய நிரந்தர செயலாளர் முன்னுள் செயலாளரான என். கியூ டயசின் வகுப்புவாத வழியில் செல்ல முயற்சிக்கிருரோ என்ற ஐயம் என்னுள் எழுந்தது.

'இப்படியான ஒரு போக்கு முளைவிடும் முன்னா ஆரம்பத்திலேயே கிள்ளியெறிந்து விடுவது தேசிய அரசாங்கத்தின் நலனுக்கு மிக அவசிய மாகும்.'

## பெண் டாக்டருக்கு அழகு கூடாது

**பெ**ண் டாக்டர்கள் அழகாக இருக்க வேண்டுமா, இருக்கக் கூடாதா என்ற ஒரு பெரிய பிரச்சினை, ஜெர்மனி நாட்டில் எழுந்தது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண ஜெர்மனிப் பத்திரிகை ஒன்று வாசகர்களுக்கு போட்டி நடத்தியது. அதில் லட்சக் கணக்கான வாசகர்கள் கலந்து கொண்டு, தங்கள் கருத்தை எழுதி அனுப்பினர்கள்.

அவர்களில் 90 சதவீத வாசகர்கள் "பெண் டாக்டர்கள் அழகாக இருக்கக்கூடாது" என்று கருத்து தெரிவித்து உள்ளனர். அதற்கு இரண்டே இரண்டு காரணங்களை அவர்கள் கூறுகின்றனர்:—

ஒன்று, பெண் டாக்டர்கள் அழகாக இருந்தால், அவர்களிடம் சிகிச்சை பெற நோயாளிகளுக்கு — குறிப்பாக இளம் வாலிபர்களுக்கு ஒருவித கூச்சம் இருக்கும்.

இரண்டாவதாக அழகாக இருக்கும் டாக்டர்கள் எந்த நேரமும் தங்களை அலங்கரித்துக்கொள்ள அவர்கள் விரும்புவார்களே தவிர நோயாளிகளை ஒழுங்காக கவனிப்பது இல்லை. இதனல் அவர்களிடம் சேவா மனப்பான்மை குறைந்துவிடுகிறதாம்.

## கொழும்பில் பெண்களுக்கு தனித் தமிழ்ப் பாடசாலை

**கொ**ழும்பு தெற்குப் பகுதியில் பொருத்தமான இடத்தில் காணி கிடைத்ததும், பூரண வசதிகள் அடங்கிய பெண்கள் உயர்நிலைப் பாடசாலையொன்று நிறுவப்படும். இப்பாடசாலை தமிழைப் போதன மொழியாகக் கொண்டதாக இருக்கும். இவ்வாறு கொழும்புப்பகுதி கல்விமா அதிகாரி தம்மைச் சந்தித்த தமிழர் கல்வி முன்னேற்ற சபையின் தூது கோஷ்டியிடம் தெரிவித்துள்ளார்.

தமிழர் கல்வி முன்னேற்றச் சபையின் தூது கோஷ்டியொன்று அண்மையில் கொழும்பு மாவட்ட கல்வி மா அதிகாரியை சந்தித்து, கொழும்பு தெற்குப் பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் தமிழ் வகுப்புகளை மூடிவிட நடக்கும் சதித்திட்டத்தை சுட்டிக் காட்டியதுடன் தமிழ்ப் பிள்ளைகள்படும் அல்லல்களையும் எடுத்து விளக்கினர்.

இக்குழுவில், தமிழரசுத்தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகமும் இடம் பெற்றிருந்தார்.

கல்வி மா அதிகாரி பின்வரும் உறுதி மொழிகளை அப்போது அளித்தார்..

(1) தெகிவளை பிறெஸ்பெட்டேரியன் பாடசாலையிலும்பவுண்ட்லவீனியா பெண்கள் உயர்நிலைப் பாடசாலையிலும், இப்போதுள்ளதுபோல் தொடர்ந்தும் தமிழ் வகுப்புகள் இயங்கி வரும்.

(2) சென்ட் கிளயேஸ் கல்லூரியில் தற்போது இடமில்லாததால் புதிதாகசேரவிரும்பும் மாணவர்கள், தெகிவளை

(12-ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானப் பட்டதாரிகள் இடமாற்ற விவகாரம்

# 'அரசாங்கத்திலிருந்து வெளியேற நேரிடும்'

### — தமிழ் எம். பி.

"**வ**ட பகுதித் தமிழ்ப் பிரதிநிதிகளின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களின் இடமாற்ற விவகாரத்தில் கல்வியமைச்சர் பிடிவாதம் காட்டுவாராஞல், அரசாங்கத்திலிருந்து நாம் வெளியேறக்கூடிய அளவு நிலைமை சிக்கலாகும்" இவ்வாறு வட பகுதி தமிழ் பா. உ. ஒருவர் நமது நிருபரிடம் ஆணித்தரமான குரலில் கூறினர்.

வட பகுதி கல்லூரிகளிலிருந்து திறமை வாய்ந்த பல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய கல்வியமைச்சு திட்டமிட்டிருப்பதும் இதை வட பகுதி பா. உ.களும், பெற்றோர், கல்லூரி அதிபர்கள் போன்ற பல்வேறு பகுதியினரும் கடுமையாக எதிர்த்துவருவது தெரிந்ததே.

இதுபற்றி குறித்த பா. உ. விடம் சுதந்திரன் நிருபர் வினவியபோது அவர் மேலும் கூறியதாவது:—

"வட பகுதி மாணவர்கள் கல்வியறிவில் சிறந்துவிளங்குவதாகவும், இதற்குக் காரணம் அங்கு சிறந்த விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களும், விஞ்ஞான கூடங்களும், நல்ல கல்லூரிகளும் இருப்பதேயென்றும் இதே வசதிகள் சிங்கள மாணவர்களுக்கு கிடைத்தால் அவர்களும் முன்னேறிவிடுவார்கள் என்றும் சில மாதங்களுக்கு முன்னர் கல்வியமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தார்.

"இதைத் தொடர்ந்து, வட பகுதி கல்லூரிகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைத்துக் கொடுப்பதில்லையென்றும் தென்னிலங்கைச் சிங்களக் கல்லூரிகளுக்கு மட்டுமே ஆய்வுக்கூடங்கள் நிறுவிக்கொடுப்பதென்றும் கல்வியமைச்சு முடிவு செய்திருப்பதாக கூறப்பட்டது.

"இதை ஊர்ஜிதம் செய்வது போல யாழ்ப்பணத்திலுள்ள சிங்களப் பாடசாலைக்கு மாத்திரமே சென்ற ஆண்டு விஞ்ஞான ஆய்வுகூடவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

"இப்பொழுது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களையும் பெருந்தொகையாக வடபகுதியிலிருந்து தென்னிலங்கைக்கு மாற்றுவதற்கு முயற்சி நடக்கிறது.

"இதன் நோக்கம், வட பகுதி மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி கிடைக்காமற் செய்து தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதேயென்று தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

"எனவே இவ்விஷயம் பாரதூரமானது. நமது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், கல்வியமைச்சர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள இடமாற்ற விஷயத்தில் தொடர்ந்தும் விடாப்பிடியாக இருப்பாரேயாஞல், அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது பற்றிகூட நாம் சிந்திக்கும் நிலையேற்படும்."

## தமிழரசுக் கட்சி ஆக்கிரமிப்பு செய்யுமாம்

'இலங்கையைத் துண்டாடாதீர்' என்ற தலைப்பின் கீழ் ஜனசத்திய (30-12-67) கீழ்க் காணும் செய்தியை வெளியிட்டுள்ளது:-

'பிரதம மந்திரியின் மாவட்ட சபைமசோதா இன்னும் மக்களுக்கு ஓர் இரகசியமே. ஆனல் தமிழரசுக் கட்சியின் அரசியல் நோக்கம் நாட்டுக்கோர் இரகசியமன்று,

சுதந்திரமான சிங்கள அரசொன்றும், தமிழ் அரசொன்றும் நிறுவுதல் தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும். தங்கள் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிபந்தனைகளின் மீதே தாங்கள் எந்தக் கட்சியுடனும் கைகோத்துக்கொள்ள முடியும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர்.

தமிழரசுக் கட்சியுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை உத்தியோக பூர்வமாக மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கத் தவறியது பிரதமர் செய்த மன்னிக்கமுடியாத அரசியல் தவருகும். 'ஜனசத்திய' ஏடு இந்த இரகசிய ஒப்பந்தத்தை அன்று அம்பலப்படுத்தியது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் நாட்டுக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தை உணர்ந்ததும் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களும், நாட்டுப்பற்று மிகுந்த ஸ்தாபனங்களும் மாவட்டசபை மசோதாவை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின.

(14-ம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவு சமாசத்திலிருந்து ஜனுப் அகமது பதவி நீக்கம்

## தவருன நிர்வாகமே காரணமாம்

**க**ல்முனை முன்னுள் பா. உ.வான திரு. எம். சி. அகமது கரவாகு நிந்தவூர்ப்பற்று ஐக்கிய கூட்டுறவு சமாசத்தின் தலைவர் பதவியிலிருந்து தவருன நிர்வாகத்துக்காக அரசாங்கத்தினல் பலவி நீக்கம் செய்யப்பட்டுள்ளாரென்று தெரிகிறது.

ஜனுப் அகமது கரவாகுநிந்தவூர்ப்பற்று ஐக்கிய கூட்டுறவு சமாசத்தின் தலைவராக கடமையாற்றி வந்தார்.

இச்சங்கத்தில் முறைகேடான செயல்களும், நேர்மையற்ற நிர்வாகமும் நடைபெறுவதாக பொதுமக்கள் புகார் செய்ததைத் தொடர்ந்து, அதுபற்றி விசாரணை மேற்கொண்ட அரசாங்கம், ஜனுப் அகமதுவை தலைவர் பதவியை விட்டு ராஜினமா செய்யும்படி கேட்டுக்கொண்டது என்று தெரிகிறது.

ஜனுப் அகமது ராஜினமா செய்ய முன்வராததால், அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து, ஜனுப் அகமதுவை பதவிநீக்கம்செய்துள்ளதென்று அறியப்படுகிறது.

ஜனுப் அகமது கல்முனை பசார் உப தபால் நிலையத்தில் முன்னர் போஸ்ட் மாஸ்டராக பதவி வகித்தாரென்றும் பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவித்திரி டைரக்ஷனில் நிச்சயம் நடிப்பேன்!

## ஜெமினி சொல்கிறார்




நடிகை சாவித்திரி சின்னரி மனசுலு' என்ற தெலுங்குப் படத்தை டைரக்டு செய்வது தெரிந்ததே.

சாவித்திரி டைரக்டு செய்வதை பற்றி ஜெமினிகணேசன் கூறியதாவது:-

'நானும் ஒரு படத்தை டைரக்டு செய்ய வேண்டும் என்று நினைத்தது உண்டு. ஆனால் எனக்கு முன்பு டைரக்டர் ஆனது சாவித்திரியே! சாவித்திரி டைரைக்ட் செய்வது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

'சாவித்திரி டைரக்ஷனில் நீங்கள் ஏன் நடிக்கவில்லை?' என்று நண்பர்கள் கேட்கிறார்கள்.



'எனக்கு தெலுங்கு தெரியாதே. தெரியாது என்றால் படத்தில் நடிக்கும் அளவுக்கு பயிற்சி போதாது என்று தான் கூறுகிறேன். வீட்டில் கொஞ்சம் பேசிக்கொள்வேன்.

இருந்தாலும் சாவித்திரி டைரக்டு செய்யும் படத்தில் எனக்கும் நடிக்க ஆசைதான். ஆனால் அது தெலுங்குப்படமாக இருக்காது. தமிழ்ப்படமாகவே இருக்கும். இப்போது சாவித்திரி டைரக்ட் செய்யும் படத்தை தமிழிலும் தயாரிக்க திட்டம் இருக்கிறது.

அதில் நான் கண்டிப்பாக நடிப்பேன். என் ஆசையும், ரசிகர்களின் விருப்பமும் நிறைவேறும்!' என்று கூறினார்.

### தூக்கத்தில் அலறினார் மனோரமா

நடிகை மனோரமா தூக்கத்தில் அலறினார்:

'நான் இரண்டு தினங்களுக்கு முன்பு ஒருநாள் இரவில் 'திடீர்' என்று அலறினேன். என்றுமே தூக்கத்தில் அலறாத நான் அலறியதற்கு முக்கிய காரணம் உண்டு.

சஷ்டி பிலிம்சின் 'கற்பூரம்' படத்துக்காக மணிமாலா நடித்த கட்சி ஒன்று படம் ஆக்கப்பட்டது. அதில் மயங்கி விழும் மணிமாலாவைச் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லும் காட்சியே அது.

அந்தக் காட்சியைப் படம் ஆக்கும்போது பார்த்துக் கொண்டே இருந்தேன். அந்த நினைவு தூக்கத்திலும் வந்து விட்டது. நான் மயங்கி விழுவது போலவும் ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லப்படுவது போலவும் கனவு கண்டேன்.

பயந்து "ஆ... அம்மா!" என்று அலறிவிட்டேன். என் அம்மா வந்து முதுகைத் தட்டித் தூக்கத்தைக் கலைத்த பின்பே கனவுதான் என்பது புரிந்தது."

இவ்வாறு நடிகை மனோரமா கூறினார்.

திரை விமரிசனம்:

### தேன் மழை

நடிகர் 'சோ' இருக்கிறாரே, உண்மையிலே அந்த மனிதர் புதுமையான கருத்துக்கள் கொண்டவரென்று கூறினால் அதை மறுப்பீர்களா? உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால், 'தேன்மழை' படத்தை பார்த்துவிட்டு பின்பு நம்புங்கள்!

மனம் ஒரு குரங்கு—சோவின் முதலாவது புதுமைப் படைப்பு—தேன்மழை இரண்டாவது படைப்பு.

தேன்மழை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும்படம். அதே நேரத்தில் கதையில் சஸ்பென்சும் இருப்பதால சோர்வு தட்டாமல் இருக்கிறது.

மனம் ஒரு குரங்கில் புதுவிதமாக டைட்டில் காட்டப்பட்டதுபோலவே தேன் மழையிலும் டைட்டில் காட்டப்படும் போது புதுமை மெருகிடுகிறது.

படம் முடிந்து வெளியே வரும்போது கூட சிரிப்பு அடங்காது!

படத்தின் கதாநாயகன் ஜெமினி கணேசன். கதாநாயகி விஜயா. இருவரது நடிப்பு நன்றாக இருந்தாலும், குறிப்பிட்ட ஒரு இடத்தில் 'ஆபாசமாக' படுகிறது.

சோவும் நாகேஷும் சந்திக்கும் இடங்கள் குடலைப் புண்ணாக்கக் கூடியன.

போதாக்குறைக்கு வீரப்பனும், டி. பி. முத்துலட்சுமியும் ராமராவும் இருக்கிறார்கள்.

சுந்தரராஜனின் வில்லன் நடிப்பு பாராட்டுப் பெறுகிறது. மொத்தத்தில் தேன்மழை இனிக்கிறது!

### தோழிகளாக நடிக்கிறார்கள்!


சரோஜாதேவியும் பத்மினியும் ஒரு படத்தில் தோழிகளாக நடிக்கிறார்கள் இந்தப் படத்தை கஸ்தூரி பிலிம்சார் தயாரிக்கிறார்கள்.

சிவாஜிகணேசன் நடிக்க பி. மாதவன் டைரக்சு செய்கிறார் ஆரூர்தாஸ் வசனம் எழுத, எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்கிறார்.

திரை விமரிசனம்:

### மறக்கமுடியுமா?

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளது மறக்க முடியுமா படத்தின் திரைக்கதை! அப்படியானால் கதையில் உணர்ச்சியைத் தூண்டும் கட்டங்களும், சமுதாயத்திலுள்ள நச்சுத் தன்மையை புட்டுக் காட்டும் கட்டங்களும் நிறைந்திருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா?



பராசக்தி படப் பாணியில் உருவாகியுள்ளது மறக்க முடியுமா திரைக்கதை

தம்பியைத் திருத்துவதற்காக தம்பியின் காமப்பசிக்கு தன்னையே அர்ப்பணிக்க வந்தாள் அருணகிரியின் அக்காள். ஆனால் கருணாநிதி படைத்திருக்கும் தங்கம், குடிபோதையிலிருந்த தம்பி தன்னைக் கற்பழித்து விடக் கூடாதே யென்பதற்காக அரிவாளால் தன்னைத் தானே வெட்டிக்கொண்டு சாகிறாள்.

எஸ். எஸ். ஆர்., சோ இருவரும் அண்ணன் தம்பிகளாகவும், தேவிகா தங்கமாகவும் நடித்துள்ளனர். பெரியவர்களின் நடிப்பை விட சின்னஞ்சிறுசுகளின் நடிப்பு சிறக்கிறது.

'காகித ஓடம்' நல்ல கருத்துள்ள பாட்டு. கருணாநிதியின் வசனங்கள்கருத்தாழம் கொண்டவை.

படம்பார்க்கச் செல்பவர்கள் படம்தொடங்குவதற்கு முன்பே சென்றுவிட வேண்டும். பிந்தினால், கலைஞர் கருணாநிதி திரையில் தோன்றிப் பேசும்காட்சியை காணும் வாய்ப்பை இழந்துவிட நேரிடும்.

——

# சிவகுமாருக்கு தொல்லை தரும் புதிய சிவகுமார்

தியாகராயாநகரில் கிருஷ்ணாராவ் நாயுடு தெருவில் வசிக்கும் நடிகர் சிவகுமாருக்கு அடுத்த வீடு ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது. (அடுத்த வீட்டுக்காரருக்கும் இதே நிலைதான்)

பிரச்சினை இதுதான். அடுத்த வீட்டிலும் ஒரு சிவகுமார் வசிக்கிறார். அவரைத் தேடி வருபவர்கள் அவர் வீட்டிற்கும் சென்று தர்ம சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். சிவகுமாரையும் ஆளாக்கியிருக்கிறார்கள்.

ஒரு நிகழ்ச்சி

'சண் கண்ட தெய்வம்' படத்தில் நடிக்க சிவகுமார் மல்லியம் சென்றிருந்த சமயம் 'திருமால் பெருமை' படத்தில் நடிப்பதற்காக இவரை அழைத்துப் 'போக அக் கம்பெனியைச் சேர்ந்த ஒருவர் இவர் வீடு தேடிவந்திருக்கிறார்.

வந்தவர் நேராக அடுத்த வீட்டிற்குள் நுழைந்து 'சிவகுமார் இருக்கிறாரா?' என்று விளக்கமின்றி, விசாரிக்க வெளியூருக்கு ஒரு திருமணத்திற்குச் சென்றிருப்பதாக வீட்டிலிருப்பவர்கள் பதில் கூற, வந்தவர் விலாசம் வாங்கிக்கொண்டு திரும்பி விட்டார்.

அடுத்த நாள் அயலூரில் இருந்த நடிகரல்லாத சிவகுமாருக்கு '...ம் தேதி படப்பிடிப்பு இருக்கிறது உடனேபுறப்பட்டு வரவும்' எனத்தந்திபறந்திருக்கிறது.

படத்தில் நடிக்க வேண்டும் என்று கனவில் கூட நினைக்காத ஒருவருக்கு அயலூரில் இருக்கும் போது நடிக்க தேதி குறிப்பிட்டு அவசரத் தந்தி மூலம் அழைப்பு வந்தால் அவர் என்ன செய்வார்? திகைத்துப் போனார்!

என்ன செய்வதென்று புரியாமல் அசந்து போனார்!

பிறகு விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்ட அவர், சென்னை திரும்பிய போது நல்ல வேளையாக 'ஒரிஜனல் சிவகுமார்' மகாவிஷ்ணு வேடமேற்று 'திருமால் பெருமையில் நடித்துக் கொண்டிருந்த செய்தி கேட்டு நிச்சயமாகப் பெருமூச்சு விட்டிருப்பார் என்பதில் சந்தேகமென்ன?

### கமலா பிக்சர்ஸின் சிவாஜி—ஜெய்

கமலா பிக்சர்ஸ் தயாரிக்கும் படத்தில் சிவாஜி கணேசன், ஜெய்சங்கரும் நடிக்கின்றனர்.

டி. எஸ். பாலையா, ஏ. கருணாநிதி, நாகேஷ். வாணிஸ்ரீ ஆகியோரும் நடிக்கின்றனர்.

திரைக்கதை உரையாடல்களை எழுதி, ஏ. சி திருலோகசுந்தர் டைரக்ட் செய்கிறார்.

பாடல்களை கண்ணதாசனும் இசையை விஸ்வநாதனும் அமைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரங்கம் அம்பலம்

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு பெற்ற விதம்

தங்களின் முயற்சியின் மீதே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் 30 சதம் உயர்த்தப்பட்டதாக இ. தொ. காங்கிரஸ் மார்தட்டுகிறது. ஏரிக்கரை ஏடுகளும் அதற்கு ஒத்தூதுகின்றன. ஆனல் இரகசியமொன்றை நீண்ட காலத்துக்கு மறைத்து வைக்க முடியாது உண்மை இப்பொழுது அம்பலத்துக்கு வந்துவிட்டது. தோட்டத் தொழிலாளர் தலைவர் திரு. தொண்டமானைத் தோட்ட முதலாளி திரு. தொண்டமான் வெற்றிகொண்டு விட்டார்.

ரூபாயின் மதிப்பு குறைந்ததும் தேசிய அரசாங்கம்தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தைத் திடீரென 15 சதம் கூட்டியது. இது இ. தொ. காங்கிரசுக்கு பேரிடியாகிவிட்டது.

இ. தொ. கா. தலைவர் தன்னை அரசாங்கம் புறக்கணித்துவிட்டதாக எண்ணினர். இ. தொ. கா. வை அரசாங்கம் மதிக்கவில்லை என்று கருதினர்.

### தலைமையின் திட்டம்

தேசிய அரசாங்கம்தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தச் சலுகைகளை வழங்கினலும் அவை இ. தொ கா. மூலமாகவே வழங்கப்பட வேண்டும். அவை இ. தொ. கா.வின் சாதனைகளாகவே தொழிலாளர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்பது இ. தொ. கா. தலைமையின் திட்டம்.

திடீரென் அரசாங்கமே முன்வந்து 15 சதம் சம்பள உயர்வு வழங்கியதும், அது தங்களாலேயே கிடைத்தது என்று அப்பாவி தொழிலாளர்களிடம் சென்று மார்தட்டிக் கொள்வதற்கு இ. தொ. கா. தலைமைக்கு முடியாமற் போய்விட்டதாம்.

உடனே கொதித்தெழுந்தது இ. தொ. கா. தலைமை. தங்களை ஒரு பொருட்டாக மதிக்காமல் புறக்கணித்ததற்காக தேசிய அரசாங்கத்துக்கும் அதன் பிரதமருக்கும் ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று கருதிய அவர்கள் உடனே வேலை நிறுத்தம் செய்யப் போவதாகப் பிரகடனம் செய்தார்களாம்.

இது வெறும் புஷ்வாணம் என்பது தேசிய அரசுக்குத் தெரியும். ஆகவே இ. தொ. கா வின் வேலை நிறுத்த மிரட்டலைக் கண்டு தேசிய அரசு அஞ்சவில்லை.

இதற்கிடையே மற்றொரு எதிர்பாராத பேரிடி விழுந்தது இ. தொ. கா. தலைமையில்.

ஏனைய தொழிற்சங்கங்கள் அனைத்தும் இ. தொ. கா. வுடன் சேர்ந்து வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தன இதைக் கேட்டதும் உண்மையிலேயே வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே என்று இ. தொ. கா. அங்கலாய்த்ததாம்;

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டது தேசிய அரசாங்கத்தை மிரட்டுவதற்காக வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்திருக்க, இப்பொழுது உண்மையாகவே வேலைநிறுத்தம் செய்யவேண்டிய நிலை உருவாகிவிட்டதே!

உடனே இ. தொ. கா. தலைவர்கள் ஓடிச்சென்று பிரதமரிடம் சரணடைந்தார்கள் என்று கூறப்படுகிறது. தாங்கள் பேராபத்தில சிக்கியிருப்பதாகவும், தங்களையும் தங்களின் ஸ்தாபனத்தையும் பாதுகாக்கும்படியும் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்களாம். வேறு ஏதேதோ வாக்குறுதிகளும் கொடுத்தார்களாம்.

ஆகவே பிரதமர் மேலும் 15 சதம் சம்பள உயர்வு வழங்கச் சம்மதித்தார்.

இந்த 15 சதம் மட்டுமே இ. தொ. கா. பெற்றது. முன்பு வழங்கிய 15 சதம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது.

ஆனல் 30 சத சம்பள உயர்வும தாங்களே பெற்றுக் கொடுத்தோமென்று கூறி தொழிலாளரிடம் பிரசாரம் செய்கின்றனர். ஏரிக்கரை ஏடுகளும் 'ஆம், அப்படியே!' என்று தலையை அசைக்கின்றன. 'பெருமாள் மாடுகளைப்' போல.

### இதோ உண்மை

இந்த சம்பள உயர்வால் தோட்ட முதலாளிகளின் பணப்பையிலிருந்து ஒரு சதமும் கொடுக்க வேண்டியதில்லை என்ற இரகசியத்தை இப்பொழுது தொழிலாளர்கள் தெரிந்துகொண்டுவிட்டனர்.

இதோ ஓர் உதாரணம்:—

ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒரு நாளைக்கு எடுக்கும் கொழுந்திலிருந்து ஏறத்தாழ 6 இருத்தல் தேயிலை தயார் செய்யப்படுகிறது. அந்தத் தொழிலாளிக்கு ஒரு நாளைக்குச் சம்பளம் 30 சதம் கூட்டப்பட்டால், 6 இருத்தல் தேயிலையையும் உற்பத்தி செய்யும் செலவில் 30 சதம் கூடுகிறது. அதாவது:- ஓர் இருத்தல்தேயிலைக்கு 5 சதம் மேலதிகமாகச் செலவாகிறது.

ஆகவே அந்த 5 சதத்தை தோட்ட முதலாளி தனது பணப்பையிலிருந்தே கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படியானல் இச் சம்பள உயர்வு தோட்ட முதலாளியான திரு. தொண்டமான் அவர்களின் கையையும் கடிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே அதற்கும் வழிதேடியது இ. தொ. கா. தலைமை. அரசாங்கத்தை வற்புறுத்தி தேயிலை ஏற்றுமதி வரியில் ஓர் இருத்தலுக்கு 5 சதம் குறைப்பதல் இ தொ. கா. வெற்றி பெற்றுள்ளது.

அதாவது:- அந்த தோட்டத் தொழிலாளி உற்பத்தி செய்த 6 இருத்தல் தேயிலையையும் ஏற்றுமதி செய்வதில் தோட்ட முதலாளிக்கு 30 சதம் மீதமாகிறது. அந்த 30 சதத்தைத் தூக்கி எடுத்து சம்பள உயர்வு என்ற பெயரால் அப்படியே தொழிலாளியிடம் கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு தோட்ட முதலாளியின் பணப்பையிலிருந்து ஒரு சதமும் செலவாகாமல், 30 சதம் சம்பள உயர்வை வழங்குவதற்கு இ. தொ. கா. தலைமை வழிவகுத்தது.

எனவே அந்த 30 சத சம்பள உயர்வின் பழு நாட்டுமக்களின் மீது இன்று சுமத்தப்பட்டுள்ளது.

### ஏக காலத்தில் இரு சேவைகள்

இவ்வாறு இ. தொ. கா. தோட்ட முதலாளிக்கும் தோட்டத் தொழிலாளிக்கும் ஏககாலத்தில் சேவை செய்துள்ளது. இதற்குக் காரணம்

(14-ம் பக்கம பார்க்க)

## இலங்கைப் பிரசாவுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டுமா? இதோ மாதிரி மனுப்பத்திரம்

இலங்கை இந்தியச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள் பின் வரும் மாதிரி மனுப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள அம்சங்களை நிரப்புவதற்கு இப்பொழுதே தங்களைத் தயார் படுத்தி கொள்வது அவசியம்.

அநேகமாக பின்வரும் மாதிரி மனுப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள அதே தகவல்களில் பல உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவிருக்கும் மனுப் பத்திரத்தில் வெளியிடப்படலாம். ஆகவே கீழ்க் கண்ட மனுப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள ஆதாரங்கள் உங்களிடமில்லாவிட்டால் அவற்றை சேகரித்துக் கொள்வது நன்று. எப்படி இவற்றைப் பெறுவது என்று உங்களுக்கு தெரியாவிட்டால், உங்கள் பகுதியிலுள்ள இ. இ. தொ. கழகத்தினரிடம் சென்றல் உங்களுக்கு உதவுவார்கள்.

### மாதிரி மனுப்பத்திரம்

அ. 1. முழுப் பெயர்: ....................

2. முகவரி: ..................

3. பிறந்த திகதியும் இடமும்: ..............

4. பிறப்பு பதிவு செய்யப்பட்டதா? ..............

(அப்படியாயின் பிறப்பத்தாட்சி பத்திரத்தை இணைக்கவும்)

5. பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாவிட்டால் வேறு ஆதாரங்கள் (சத்தியக் கடுதாசி முதலியன)

6. தந்தையின் முழுப் பெயர்: ..................

7. தந்தையின் பிறப்பிடமும் பிறந்த திகதியும். ...........

8. தற்போதைய முகவரி: ..................

9. தாயின் முழுப்பெயர்: ......................

10. தாயார் பிறந்த இடமும் திகதியும்: ......................

11. தற்போதைய முகவரி: ..............

12. மனைவியின் முழுப் பெயர்: ..................

13. மனைவி பிறந்த இடமும் திகதியும்: ..............

ஆ. 1. அசையாத சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றின் விபரம்:. ........................

2. பிள்ளைகளின் பெயர்கள், பிறந்த திகதிகளுடன்:— ..............................

இ. 1. விண்ணப்பதாரர் பிறந்த பின்னர், அல்லது முதன் முதலாக இலங்கைக்கு வந்தபின்னர், இந்தியாவுக்கு போனதுண்டா?..........................

2. அப்படி போயிருந்தால், போன திகதி அல்லது திகதிகள். ...................

3. இலங்கை திரும்பிய திகதி அல்லது திகதிகள்: ............

4. போன காரணம். ........................

ஈ. பிறந்த நாள்தொட்டு, அல்லது முதன் முதலாக இலங்கைக்கு வந்த நாட்தொட்டு, இலங்கையில் வாழ்ந்து வந்தால்,

1. படித்த பள்ளிக்கூடங்கள் (படித்திருந்தால்) (ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்)

2. இப்போது வேலை செய்யும்-இடத்தின் பெயர்............ (வேலைசெய்யும் ஸ்தாபனத்தின் முதலாளியிடமிருந்து ஆதாரம்) ஆணைக்கப்பட வேண்டும்.

3. முன்பு வேலை செய்த இடங்களின் விபரங்கள். (ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்;

## கல்விமந்திரி – தேரோ மோதல் மசோதாவை கைவிட மறுப்பு

அரசாங்கக் கட்சியிலிருந்து முதலில் வெளியேறுபவர் கல்வி மந்திரி திரு. இரியகொல்லையா அல்லது வண மாலேவன ஞானிஸ்வர தேரோவா என்ற கேள்வி ஐக்கிய தேசியக் கட்சி அதிகார வட்டாரங்களில் கேட்கப்படுவதாக ஜனசத்திய (30-12-67, கூறுகிறது.

திரு இரியகொல்ல தயாரித்துள்ள பிரிவேனு மசோதாவையும் எண் 4 சுற்றறிக்கையும் ஜனவரி 31ந் திகதிக்கு முன்பு வாபஸ் வாங்காவிட்டால், இந்த அரசாங்கத்துடன் தனக்குள்ள எல்லாத் தொடர்புகளையும் கைவிட்டுவிடுவதாக வண. மாலேவன ஞானிஸ்வர நாயக்க தேரோ திட்டவட்டமாக கூறுகின்றார்.

பிரிவெனு மசோதா வாபஸ் வாங்குவது என்ற பிரச்சினையே கிடையாதென்றும், அதில் எதுவித [illegible] களும் செய்யப்படமாட்டா தென்றும் கல்வி மந்திரி திரு. இரியகொல்ல உறுதியாகக் கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது. மசோதாவைக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிடனுமேயன்றி அதில் செய்யப்படும் எதுவித திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்று வண. நாயக்கதேரோ தெரிவிக்கிறர்' என்று ஜனசக்தி வெளியிட்டுள்ள செய்தியில் [illegible] ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இரத்தப் பிசாசு"

அத்தியாயம்—1

## எலும்புக் கூடு நடனம்

அமாவாசைக் கரும் இருள் வெளி உலகை முற்றுக்கையிட்டிருந்தது. மாசி மாதத்துப் பனி இருளோடு ஐக்கியமாகி அதன் கருமைக்கு மெருகேற்றிக் குமைந்து கொண்டிருந்தது. ஊரெல்லாம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்தின் தென் கிழக்குப் பகுதியான கொழும்புத் துறையில் கிறீஸ்தவ இடுகாடு இருக்கும் வீதியில் ஓர் உருவம் நடந்து கொண்டிருந்தது.

அமைதி நிறைந்த இரவில் அவ்வுருவம் அவசரமாகச் சென்று கொண்டிருந்ததால் ஏற்பட்ட காலரவம் கேட்டு தெரு நாய் ஒன்று விழித்துக் கொண்டது. ஒரு சொறிநாய் மெல்ல உறுமத் தொடங்கியதும் அதைத் தொடர்ந்து அந்த ஊரே அமர்க்களப்பட்டது. நாய்களின் ஊளைச் சபதம் செவிடுபடும்படி ஒலித்துக் கொண்டிருந்தாலும் அதை அலட்சியம் செய்தவாறே நடந்து கொண்டிருந்தது அவ்வுருவம்.

தினசரி அப்படிச் சென்று பழக்கப் பட்டது போலும் யாழ் நகர மின்சார வினியோகத்தில் அடிக்கடி ஏற்படும் கோளாறு காரணமாக தெரு விளக்குகள் அனேகம் அணைந்து போயிருந்தனவே அன்றி அன்று விளக்குகள் ஏற்றப்படாதிருந்தனவோ ஒன்றுமாய் புரியவில்லை. ஆனால் இருளில் சென்று கொண்டிருந்த அவ்வுருவத்திற்கு அந்தச் சூழ்நிலை மிகவும் சந்தோஷத்தை அளித்திருக்க வேண்டும்.

'டேய் சுருளி சாதகமான சூழ்நிலைதான். பயமில்லாத உன் தொழிலில் இன்று போதிய பலன் கிடைக்கப் போகின்றது.' என தனக்குத்தானே வாய்விட்டுக் கூறிக் கொண்டது. அவ்வுருவத்தின் பெயர் சுருளியப்பன் என்பது அவன் தனக்குத்தானேசொல்லிக் கொண்டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இருந்தாற்போல தெரு விளக்குகள் பளிச்சிட்டு எரிய ஆரம்பித்தன. சுருளி இடுகாட்டிற்குள் பிரவேசித்து விட்டான். தெருவிளக்குகளின் ஒளியில் அந்தப் பிணக் குழியை அடையாளம் தெரிந்து கொண்டான். அவன் முகத்தில் ஓர் அலாதியான புன்சிரிப்பு.

மனைவி-மக்கள் இல்லாத, ஊர்-உறவு இல்லாத ஓர் அனாதையான சுருளி, கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு மேலாக இந்த ஊரில் வசித்துவந்தான். பேய் பிசாசு என்பவற்றில் அவனுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் ஓரளவு பயமிருந்தது இரவில் இடுகாட்டில் பிணக்குழி தோண்டி அப் பிணத்துக்கு அணிவித்துள்ள விலையுள்ள பொருட்களை எடுத்து விற்று வயிற்றை நிரப்பி வரும் அவனை அவ்வூர் மக்கள் மந்திரவாதியென்றே நினைத்தனர். அவன் இடுகாடு செல்வதும் - மயானத்திலிருப்பதும் பலருக்கும் தெரியும். ஆனால் அவன் அங்கு ஏன் செல்கின்றான் என்ற விடயம் எவருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.

அவன் கூறும் கட்டுக்கதைகளை நம்பியே அவனை மந்திரவாதி என மக்கள் நினைத்தனர்.

சில நிமிடநேரத் துணிகரச் செயலலினால் அவன் வாழ்க்கை ஓடம் கஷ்டமின்றி ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நாள் இடுகாட்டிலிருந்து வெளியேறும் சமயத்தில் இரவு இரண்டாம் காட்சி சினிமா பார்த்துவிட்டு அவ்வழியே வந்த சிலர் அவனைப் பார்த்துவிட்டனர். இடுகாட்டில் நடமாடும் அவனை சாசு என எண்ணி? அவர்கள் கூக்குரலிட்டுக் கொண்டே ஓடிச் சென்றனர். அவர்கள் கூறிய கதைகளைக் கேட்டு ஊர் மக்கள் பீதியடைந்தனர். அந்தச் செய்தியைப் பலவாருகத் திரித்து மறுநாள் பத்திரிகை நிருபர் ஒருவர் பத்தி பத்தியாய் கதையளந்திருந்ததை தினசரியில் பார்த்தபோது சுருளி தன் பாட்டிலேயே சிரித்திருக்கிறான். அதைப்பற்றிக் கதைத்தவர்களுடன் சேர்ந்து தானும் அப்படியே இரண்டொரு நாள் கண்டதாகக் கூறியுமிருக்கிறான்.

அன்று அவனது அவசரத்துக்குக் காரணமும் இருந்தது. முதல் நாள் ஒரு பருவக்கன்னியின் சடலம் அந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டது. அதை நேரிலேயே பார்த்திருந்தான் சுருளி. அப்பெண்ணின் சிறியதாயார் தன் மூத்தாளின் மகளுக்குரிய ஆபரணங்கள் அத்தனையையும் அப்படியே போட்டு விட்டிருந்தாள். ஊரெல்லாம் இதேகதையாய் மக்கள் கதைத்தனர். மூத்த தாரத்தின் மகளில் அந்தம்மாளுக்கிருக்கும் பாசத்தின் காரணம் தான் அப்படிச் செய்தாள் என்று எல்லோரும் புகழ்ந்தனர்.

அன்று நடுநிசிவரை சுருளியின் மனதில் அமைதியே யில்லை. அவனுடைய ஏழு வருட அனுபவத்தில் இப்படியதிகமான நகையுடன் பிரேதத்தைப் புதைகுழிக்குள் எவரும் வைத்ததை அவன் கண்டதில்லை இளம் கன்னிப் பெண் விஷப்பாம்பு கடித்ததில் ஏற்பட்ட அகால மரணத்தினால் மனமுடைந்த சிற்றன்னையார் அப்படியே நகைகளுடன் பிரேதத்தைப் புதைக்கச் சொன்னாள் என்று பலரும் எண்ணினர். ஆனால் இறந்து போன கன்னிப் பெண் கீதாஞ்சலி உயிர்பெற்றெழுந்தால் சில வேளை சிற்றன்னை தனக்கிழைத்த கொடுமைகளை வரிசைக் கிரமமாகக் கூறுவாள். அவள் செய்த கொடுமைகளை அறியாத உலகத்தார் ஈற்றில் செய்த சில உபசரணைகளைக் கண்டு வானளாவப் புகழ்பாடினர்.

புதைகுழியைத் தோண்டிய சுருளி இடையில் செருகியிருந்த ரோச் விளக்கை எடுத்துப் பார்த்தபோது பிரேதப் பெட்டி நன்கு தெரிந்தது. பின்பு ரோச்சை அணைத்து விட்டு குழிக்குள் இறங்கி பெட்டிக்கு மேலிருந்த மண்ணை நன்கு துடைத்துக் கொண்டான்.

பெட்டியைத் திறக்கு முன்பு தெய்வத்தை நன்கு வணங்கிக் கொண்டான். அதே வேளை விஷகடிக்கு மருந்து செய்யும் டாக்டர் சிவகுமாரை மனமார வாழ்த்தினான். அவர்மட்டும் வீட்டில் நின்றிருந்தால் அந்தப் பெண்ணை நிச்சயம் பிழைக்க வைத்திருப்பார். இப்படிப் பலரை சாவின் பிடியினின்றும் விஷகடிச் சிகிச்சையினால் மீட்ட பெருமை அவருக்குண்டு அன்று அவர் எங்கோ சென்றுவிட்டிருந்ததால் எனக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தப் பிணத்துக்கு போடப்பட்டிருக்கும் நகைகளை ஆறுமாதகால சீவியத்துக்குப் போதுமானது என்று எண்ணிக் கொண்டே பிரேதப் பெட்டியின் மூடியை மெல்லக்கிளப்பினான் அதே வேளையில் தெருவிளக்கு மீண்டும் ஒரு முறை எரிந்து அணைந்தது. அதைத் தொடர்ந்து இடுகாட்டின் ஒரு பகுதியிலிருந்து விசில் சத்தம் மூன்று முறை தொடர்ந்து கேட்டதும் தூங்கிப் போன தெரு நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஊளையிட ஆரம்பித்தன.

சுருளியின் மனதில் இது வரை காலமும் இல்லாத அச்சம் அப்போது லேசாகத் தோன்றிற்று. பயம் என்றால் என்னவென்றே அறியாதவனுடைய வாழ்க்கையில் பயம் என்றால் என்ன என்ற விஷவித்து முளைவிட ஆரம்பித்தது அக்கணமே உடல் எல்லாம் வியர்த்து விட்டன. அப்பொழுதும் மனதைத் தேற்றிக் கொண்டு பிரேதப் பெட்டியைத் திறந்தான். அப்பெட்டிக்குள் விறைத்துப் போன நிலையில் கிடந்த கீதாவின் பிணத்தைப் பார்த்தபோது அவனுடைய மனதில் நிறைந்திருந்த அச்சம் சிறிது சிறிதாக மறைந்து ஆபரணங்களின் மேல் ஏற்பட்ட மோகம் மேலோங்கி நின்றது. கையில் வைத்திருந்த ரோச்சை நிலத்தில் வைத்துவிட்டு பிரேதமாய்க் கிடந்த பெண்ணின் கரங்களைப் பற்றி ஒரு கரத்திலுள்ள வளையல்களை உருவிக் கழற்றினான். அதே வேளையில் முன்பு கேட்ட அந்த விசில் சப்தம் மூன்று முறை தொடர்ந்து கேட்டது. அடங்கிப் போயிருந்த நாய்களின் ஊளைச் சப்தம் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது.

பிரேதத்தின் ஒரு கரத்திலிருந்த மூன்று வளையல்களையும் கழற்றிய சுருளியின் மனதில் விபரீதமான யோசனை ஒன்று உதித்தது. அந்நினைவுக்கு மறுபடியும் இடம் வைக்காதவாறு மீண்டும் விசில் சப்தம் மூன்று முறை ஒலித்தது. இப்போ இடுகாட்டின் நடுவில் கல்லறைகளுக்கு மத்தியில் சுருளிக்கு மிகச் சமீபத்தில் தான் ஒலித்தது. அவன் உள்ளத்திலே உதறல் எடுத்தது. நடுங்கும் கரங்களிலிருந்த வளையல் லேசாக ஒலி எழுப்பியது. நிலத்தில் வைத்திருந்த ரோச்சை எடுப்பதற்காக கையை நீட்டிய சமயம் ஒரு கல்லறைக்கும் பின்புறமிருந்து வானை நோக்கி சிவப்பு நிற வெளிச்சம் தெரிந்தது திடீரென அவ்வொளி மறைந்து பச்சை நிற ஒளி தெரிந்தது. அதுவும் அணைந்து ஊதா நிறத்தில் ஒளி வெள்ளம் பாய்ந்தபோது சுருளியின் இதயம் படக் படக்கென அடித்துக்கொண்டது. புதை குழியைவிட்டு மேலே ஏற முயன்றான். முடியவில்லை. உடல் வியர்த்து விறு விறுத்து நடுங்கிக்கொண்டிருந்தது. கையிலிருந்த வளையல்கள் திரும்பவும் பிரேதப் பெட்டிக்குள் விழுந்துவிட்டன.

ஊர் மக்களுக்கெல்லாம் ஓர் பிசாசாக விளங்கிய சுருளி இதுவரை காலமும் காணாத ஓர் அற்புதத்தை நேருக்கு நேர் பார்த்துவிட்டான் இப்படிப் பல கட்டுக்கதைகளையெல்லாம் ஊர் மக்களுக்கு புழுகியிருக்கிறான். ஆனால் அந்தமிரட்டல்களையெல்லாம் தான் நேரில் கண்டதாகத்தான் தம்பட்டம் அடித்திருக்கின்றான். ஆனால் இப்படி ஒரு பயங்கர அனுபவம் அவனது ஏழு வருட அனுபவத்தில் இதுதான் முதன் முறையாகும்.

மூவர்ணத்தில் மாறி மாறி ஒளி வானத்தை நோக்கி நிலத்திலிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தது திடீரென எல்லாம் அணைந்துவிட்டன. சுருளி ரோச்சை எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிடலாம் என்று எண்ணினான். அந்த எண்ணம் அவன் மனதில் தோன்றிய அதே சமயம் மீண்டும் சிவப்பு நிறஒளி வானைநோக்கி பிரகாசித்தது. விளக்கு விருடி மேடையில் மாறுவது போன்று மூவர்ண ஒளி மாறி மாறி ஒளி விட்டுக்கொண்டிருந்தன, அத்துடன் கிறீச் கிறீச் என்ற ஒலி அந்த இடுகாட்டுக்கே உரித்தான அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒலித்தது. இமைப்பதை மறந்து, வர்ண ஒளி தெரியும் திசையில் கேட்ட ஒலி என்னவாக இருக்குமென பயத்துடன் பார்த்த சுருளிக்கு கண்கள் மேலிமைக்குள் செருகிக் கொண்டன. உடல் கிடு கிடு என நடுங்க மீண்டும் ஒரு முறை விழிகளை வெட்டி உற்று நோக்கினான். வர்ண ஒளிக்கிடையே ஓர் எலும்புக்கூடு நடந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டு மயக்கமுற்றுதடால் என புதைகுழிக்குள் விழுந்தான்.

கே. எஸ். ஆனந்தன்

## புதுமுன்

வாசகர்களே!

கடவுள் என்ற ஒரு நல்ல சக்தி எப்படி உண்டோ அதே போன்று பேய்-பிசாசு என்ற தீயசக்திகளும் இருக்க வேண்டுமென்பது என்னைப் பொறுத்தமட்டில் நம்பிக்கை. அதற்காக மற்றவர்களை நம்பும்படி நான் வற்புறுத்தவில்லை.

பிரபஞ்சத்தில் கோள்களின் சுழற்றி இயக்கம் காரணமாக கால நிலையில் மாற்றம் ஏற்படுதலும் அதனால் இயற்கை நிலைகளில் தாக்கங்களும் அதே போன்று புலனறிவுக்குப் புலப்படும் ஒளி, ஒலி முதலியவற்றை மனிதன் தனது தத்துவ சக்திகளால் விஞ்ஞானிகளைப் போன்று கட்டியாள்வதும் நாம் அறிந்ததொன்று. நம்ப முடியாதவைப் போலத் தோன்றும் சில சம்பவங்கள்

இந்நாவலில் இடம் பெற்றிருப்பினும் விஞ்ஞானத் துறையில் ஏற்பட்டு வரும் புத்தமைப்புகள் காலப் போக்கில் இப்படி நிகழக் கூடியதாய் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆங்கில நாட்டிலும், ஐரோப்பிய நாடுகளிலும் 'ட்ரகுலா' என்ற ஒருவித பேயின் கதையுண்டு. கன்னியர்களை பலி கொள்ளும்

இப்பேயின் பயங்கரக் கதைகளைப் படித்துவிட்டும் ஆங்கில சினிமாக்களில் இவற்றைப் பார்த்து விட்டும் புழுகுவோர் பலரைப் பார்த்திருக்கின்றேன். நமது நாட்டில் பேய், பிசாசு, பெல்லி, சூனியம், ஏவல் பிசாசு போன்ற பற்பல கதைகள் உலாவுகின்றன. அவற்றின் தாக்கத்துக்கு ஆளான பலர் கூறியதையும் கேட்டிருக்கின்றேன்.

இவை யாவையும் வைத்து ஒருகதை உருவாக்க நினைத்தேன் அதன் பலனாக தோன்றியதே 'இரத்தப் பிசாசு'

மேலைநாடுகளைப் போன்று பயங்கரக் கதைகளை வாசிக்கும் ஆவல் நமது நாட்டு வாசகர்களிடையிலும் வளர்ந்து வருகின்றது. 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற லேபலில் வரும் கதைகளைப் போன்று நான் வாசகர்களை ஏமாற்று வித்தை செய்யவில்லை. அதே வேளையில் பயங்கரக் கற்பனை செய்யும் எழுத்தாளன தன்னைத் தானே பயம் காட்டிக்கொள்ளாது வாசகர்களது ஆர்வத்துக்கும் விருந்தளிக்க வேண்டுமென்ற உண்மையை உணர்ந்தவன் நான். ஆகவே இயன்றளவு வாசகர்களுக்கு முற்றிலும புதிய பாணியிலான ஒரு கதையை உருவாக்கினேன். எழுத்தாளர்கள் வாசகர் மத்தியில் இச்சிருஷ்டி ஓர் பரபரப்பை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஆனால் தமிழ் வாசகர்களுக்கு புதிய பாணியிலான ஓர் சிருஷ்டியை வழங்கிய திருப்தி எனக்கு ஏற்படுகின்றது.

கதையை நமது சூழலில் உருவாக்குவதே வாசகர்களது ஆவலைத் தூண்டக் கூடியதாய் இருக்கும் என்ற கருத்தைக் கொண்டு யாழ். நகரிலும் அதையடுத்த சில ஊர்கள் தெருக்கள், இடங்கள், ஸ்தாபனங்கள், இடுகாடு ஆகியவற்றிலும் சம்பவங்கள், நடைபெற்றதாக சித்திரித்துள்ளேன். ஆனால் நாவலில் உள்ளவைக்கும், குறிப்பிட்ட இடங்களுக்கும் எதுவித சம்பந்தமோ—தொடர்போ இல்லை. இதில் உள்ள பெயர்கள் யாவும் யாரையும் குறிப்பனவும் இல்லை. யாவும் என் சொந்தக் கற்பனையே

கே. எஸ் ஆனந்தன்




### இரத்தம் சிவப்புதான்!

கறுப்பு நிற மனிதன் ஒருவனின் சிறு நீர்ப்பை, மரணத் தருவாயிலிருந்த வெள்ளைக் காரப் பெண் ஒருத்தியின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது!

தென்னாப்பிரிக்காவிலுள்ள கேப் டவுன் என்ற நகரில், நீகரோ ஒருவன், சாலை விபத்து ஒன்றில் அடிபட்டு இறந்தான்; அவனது சிறுநீர்ப்பை, பினாக் என்ற வெள்ளைக்கார மாதுக்கு உயிரைக் காப்பாற்றிய உறுப்பாக மாறியது!

'உதவி அளித்தது ஒரு நீக்ரோவின் உறுப்புஎன்பது பற்றி நான் கவலைப்படவில்லை; உதவி கிடைத்ததைப் பற்றி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்' என்று அப் பெண்மணியின் கணவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1—1968 சனவரி மாதம் 7-ந் தேதி

164, ஏ. டண்டார நாயக்க வீதி, கொழும்பு 12.
தொலைபேசி எண்:—3411 த. பெ 1183.

# தமிழ் ஆராய்ச்சி

தமிழகத்தின் தலைநகர் விழாக்கோலம் பூண்டுள்ளது. உலக தமிழ் ஆராய்ச்சி கருத்தரங்கு அங்கு நடந்து கொண்டிருக்கிறது. 32 உலக நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளனர்.

உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெறுவதால் அதன் முக்கியத்துவம் கூடியுள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள கட்சி தமிழகத்துக்கும், தமிழுலகத்துக்கும் பெருமை தேடித் தந்த அறிஞர் அண்ணா தலைமையில் தமிழகத்தில் ஆட்சி புரிகிறது அதனால் இன்று அங்கு நடைபெறும் தமிழ் மாநாட்டின் சிறப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளது. உலகத் தமிழறிஞர்கள் நடத்தும் இம் மாநாட்டுக்கு தமிழ் கூறும் நல்லுலகத்துடன் சேர்ந்து நாமும் வாழ்த்து கூறுகின்றோம்.

தமிழ் பேரறிஞர்கள் தமிழ் மொழி பற்றி தாங்கள் நடத்திய ஆராய்ச்சிகளை இக் கருத்தரங்கில் எடுத்துக் கூறுகிறார்கள். ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கிறார்கள். அவற்றின் மீது விவாதங்கள் நடத்துகிறார்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டுகிறார்கள். அத்திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வர வழிவகைகளைக் காண்கிறார்கள்.

இந்த மகத்தான முயற்சியின் விளைவாக இரு நன்மைகள் ஏற்படும். ஒன்று தமிழ் மொழி ஏற்றங் காண்பது—மற்றொன்று தமிழ் மொழி உலகெங்கும் பரவ பாதை செப்பனிடுவது.

தமிழ் படிப்படியாக வளர்ச்சிபெற்று உலக மொழிகளில் ஒன்று என்ற அந்தஸ்தைப் பெற வேண்டும். சில உலக நாடுகளில் தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, தமிழ் கலை முதலியவை ஏற்கனவே பரவியுள்ளன. மொழியின் வளர்ச்சியையொட்டியே அது ஏனைய நாடுகளுக்கும் பரவும் வாய்ப்பு கிட்டும்.

சுருங்கக் கூறின், தமிழ் ஒரு நவீன மொழியாக வளர்ந்தோங்க வேண்டும். அந்நிலையைப் பெற்றால் ஆங்கிலத்தைப் போல தமிழும் உலக மொழியாகிவிடும். எல்லாத் துறைகளிலும் திட்டமிட்டு வளர்க்கப்பட்டால், தமிழ் உலக அரங்கில் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிப்பதற்கு நீண்ட காலமாகாது.

அத்தகைய வளர்ச்சியைப் பெறுவதற்கு உறு துணையாக அமைவது தமிழில் கலைச் சொல்லாக்கமே. உலகத்தில் தமிழ் வழங்கும் நாடுகளுக்கெல்லாம் ஒருப்பாடு சார்ந்த கலைச் சொற்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவையை ஈழத்து உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் இம்மாநாட்டில் வற்புறுத்தியுள்ளார்.

தமிழ் மொழி நவீன மொழியாக வளர்ந்தோங்கி உலக மொழி அந்தஸ்தைப் பெறுவதற்கு எமது அமைச்சரின் யோசனை இன்றியமையாததாகும் இதனை நன்கு விவாதித்து கருத்தரங்கு ஒரு முடிவு செய்வதுடன், அத்தகைய கலைச் சொல்லாக்கத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகளையும் செய்யும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் ஒரு வளரும் மொழி. அது தோன்றிய காலம் முதல் இன்றுவரை வளர்ந்து கொண்டேயிருக்கிறது. என்றுமே அது தேய்ந்ததுமில்லை— தேங்கி நின்றதுமில்லை.

மாநாடு தமிழின் பண்டையப் பெருமையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமென்று கூறுகின்றனர். இக்கூற்றின் கருத்து பிற்காலத்தில் தமிழ் வளங்குன்றி தேய்ந்துவிட்டது என்பதே. இக்கருத்து முற்றிலும் தவறாகும்.

பண்டைக் காலத்தில் தமிழ் சிறப்புற்று விளங்கியது. இன்று அதனிலும் பன்மடங்கு வளம் பெற்று விளங்குகிறது. வருங் காலத்தில் உலக மொழி அந்தஸ்தைப் பெற்று, உலக அரங்கில் ஆங்கிலத்துடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு மென் மேலும் வளர்ந்தோங்கும் வாய்ப்பும் இருக்கிறது.

ஒரு மொழியின் அந்தஸ்து உயரும் போது பலதுறைகளில் வளர்ச்சி அதற்குத் தேவைப்படுகிறது. கலைச் சொற்கள் அத்தகைய முக்கிய தேவைகளில் ஒன்று. பண்டைக் காலத்தில் தமிழ் மொழிக்குக் கலைச் சொற்கள் தேவைப்படவில்லை. ஆனால் இன்று அது தேவை. இல்லையேல், விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிய நவீன மொழியாக வளம் பெற முடியாத நிலையைத் தமிழ் மொழி எதிர்நோக்கும்.

தமிழின் பண்டையச் சிறப்பு பற்றி பேசுதல் புதிய ஆராய்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என்பது உண்மையே. ஆனால் பழம் பெருமை பேசி, பெருமிதமடைவது மட்டும் போதாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

பாரதத்திலே இந்தி— எதிர்ப்புக் கிளர்ச்சியும், ஆங்கில— எதிர்ப்புக் கிளர்ச்சியும் தீவிரமாக நடைபெறும் சந்தர்ப்பத்திலே இம் மாநாடு நடைபெறுகிறது. எனவே மத்திய அரசின் கண்ணைத் திறப்பதற்கு இம்மாநாடு துணை புரியுமென்பதில் ஐயமில்லை.

தமிழ் ஓர் இந்திய மொழி மட்டுமன்று-அது உலகெங்கினும் பரவி, உலக மொழி அந்தஸ்தைப் பெறும் பொருட்டு துரிதமாக வளர்ந்து வரும் ஒரு மொழியுமாகும் என்பதை மத்திய அரசுக்குச் சொல்லாமல் சொல்லுகிறது இம் மாநாடு.

தமிழ் மொழி வளம் பெறுவதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது ஆனால் பாரதத்தில் அதன் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. இந்தி — ஆங்கிலமும் ஒரு தடைதான். அன்று இந்தி அரசகரும மொழி என்ற உருவத்தில் வந்து தமிழை விழுங்க முயன்றது, இன்று ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற உருவத்தில் வந்து மெல்ல மெல்ல தமிழின் இடத்தைப் பெற முயலுகிறது.

# தமிழ்-ஓர் உலக மொழி

## சென்னை மாநாட்டில் ஜனாதிபதி ஜாகீர் ஹுசேன் ஆற்றிய உரை

'தமிழ் மாண்பு மிக்கது. வடக்கு தெற்கு தொடர்புகளை இணைத்துள்ளது. வெளி நாடுகளிலும் தமிழ் வழங்கப்படுகிறது. அதனால் தமிழ் ஒரு சர்வதேச மொழியாகும்' இவ்வாறு சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசுகையில் இந்திய ஜனாதிபதி டாக்டர் சக்கிர் ஹுசைன் குறிப்பிட்டார்.

டாக்டர் சக்கிர் ஹுசைன் ஆற்றிய உரை வருமாறு:—

"இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன தொடர்பு கொள்வதை ஒரு பேறாக நான் கருதுகிறேன். இந்த மகாநாடு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அத்துடன் நமது கலாசாரத்தின் பலதரப்பட்ட அம்சங்களையும், அதன் ஊடே இழையும் ஒற்றுமையையும் பற்றிய என்னுடைய சொந்த அறிவை ஆழ்ந்ததாக்குவதற்கு எனக்கொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டதாக நான் கருதுகிறேன்.

நம்முடைய மொழிகளிடையே தமிழ் மாண்புமிக்க தொரு இடத்தை வகிக்கிறது. வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை அது இணைத்திருக்கிறது. நம்முடைய நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால் தமிழ் ஒரு சர்வதேச மொழியாகவே இருக்கிறது. தென் கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கால சாரத்தின் ஓர் களஞ்சியமாக தமிழ் விளங்குகிறது.

### தமிழுணர்ச்சியும் தமிழ் நாடும்

தமிழ் நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ் நாடு பரவியிருந்தது.

வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைச கடல்களையும் அந்த கடல்களுக்கு அப்பாலுள்ள நிலங்களையும் அது கண்டது. தமிழர்கள் அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகியவைகளுடன் வர்த்தகம் நடத்தினார்கள். வலிமை மிக்க வர்த்தகச் சங்கங்களின் பெயர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன.

### ஆழ்வார் பாடல் கூறும் உண்மை

மதிப்பரிய வர்த்தக பண்டங்களுடன் கப்பல்கள் தங்கிய பல்லவர்களின் மாமல்லபுரம் துறைமுகத்தைப் பற்றிய வர்ணனை ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றது.

தமிழ் நாட்டிற்கும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குமிடையே செழிப்பான வர்த்தகம் நடைபெற்றது பற்றி சுமத்ராவில் கண்டெடுக்கப்பட்ட 11வது நூற்றாண்டு தமிழ் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. தமிழ் மன்னர்களின் கடற்படை இந்து மகா சமுத்திரத்தை ஆண்டு வந்தது.

### சீனாவுடன் தொடர்பு

புகழ்மிக்க கடற்படையைப் பெற்றிருந்த ராஜேந்திர சோழன், சீனப் பேரரசருடன் ராஜீய வர்த்தக தொடர்பு கொண்டிருந்தான். மேல் திசை நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வதற்காகப் பல நூற்றாண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னன் ஒருவன், ஆகஸ்தஸ் என்னும் ரோமாபுரி பேரரசருக்குத் தூதுவர் ஒருவரை அனுப்பியிருக்கிறான். ஆனால், அந்த சமயத்தில் கற்பு தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டுவதற்காக சேர, மன்னன் ஒருவன் இமய மலையிலிருந்து கல் கொணர்ந்து, கங்கையில் நீராட்டி, அத தெய்வத்திற்குச் சிலை அமைத்த வரலாற்றையும் நாம் அறிவோம்.

### மரபிற்கு அஞ்சலி

தமிழ்மொழி பண்பாட்டைப் பற்றி இங்குகுழுமியுள்ள பேரறிஞர்களை விட அதிகமாக நான் கூற முடியாது. எல்லோருக்கும் தெரிந்தவற்றை நாம் மீண்டும் கூறினால் அது ஒரு மாபெரும் மரபிற்குச் செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு சுமார் 2000 ஆண்டுகளுககு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கிய அவை எனக் கருதப்படும்.

இது சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது. செழித்த பண்பட்ட இந்த இலக்கியம் பல நூற்றாண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியை காட்டுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

பயிற்சி மொழி, நீதிமன்ற மொழி, இணைப்பு மொழி எல்லாம் தமிழகத்தில் ஆங்கிலமாகவே இருத்தல் வேண்டுமென்பதில் டாக்டர் இராமசாமி முதலியார் போன்றோரும், சுதந்திரக்கட்சி போன்ற ஸ்தாபனங்களும் 'தினமணி' போன்ற பத்திரிகைகளும், தொழில் முதலாளிகளும் பெரியார்களும் ஆர்வம் கொண்டுள்ளனர்.

அந்தக் கும்பலுக்கு ஆக்கமளிக்கும் போக்கிலே மாநாட்டு நடவடிக்கைகள் சில அமைந்துள்ளன. தமிழறிஞர்கள் கூடி தமிழ ஆராய்ச்சி நடத்தும் கருத்தரங்கில் ஆங்கிலத்திலே உரை நிகழ்த்துவதென்றால், ஆங்கிலத்திலே ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதென்றால் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு தமிழ் தகுதியற்ற ஒரு மொழி என்பது நிரூபணமாகிவிடுகிறதல்லவா? அத்துடன் இது தமிழின் சிறப்புக்கும் கரிபூசுகிறது.

ரூ. 2லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள மாநாட்டு மலர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டதாக அமைந்திருப்பதைக் காண தமிழபிமானிகளின் உள்ளம் குமுறுகிறது. மலரில் 22 ஆங்கிலக் கட்டுரைகள் இடம் பெறச் செய்து, ஆங்கிலம் மூலமாகவே தமிழை வளர்க்க முடியுமேயன்றி, அதனைத் தனியாக வளர்ப்பதற்கான வளம் அதில் கிடையாதென்பதை மாநாட்டு அமைப்பாளர்கள் சொல்லாமல் சொல்லுகின்றனர். இந்த முயற்சி தமிழை வளர்ப்பதற்காகவா அல்லது ஆங்கிலத்தை வளர்ப்பதற்காகவா என்று ஐயப்பாடு தோன்ற அவர்கள் இடமளித்து விட்டனர். மலரில் தமிழ் மணம் கமழ்வதுடன் ஆங்கில மணமும் கமழ்கிறது. ஏன் இந்த அவல நிலை?

ஆங்கிலமின்றி தமிழ் மொழியை வளர்க்க முடியாதா என்று தமிழாராய்ச்சி நடத்தும் அறிஞர்களைக் கேட்கின்றோம். தமிழ் தெரியாத ஆங்கிலம் படித்தவர்களுக்குத் தமிழ் மொழியின் சிறப்பையும் பெருமையையும் உணர்த்துவதற்கே மலரில் ஆங்கிலக் கட்டுரைகள் இடம் பெற்றன என்று மாநாட்டு அமைப்பாளர்கள் கூறலாம்.

அப்படியானால், தமிழின் சிறப்பை முதலில் தெரிந்து சொல்லவேண்டியவர்கள் ஏனைய இந்திய மாநில மக்களே. தமிழின் பெருமையை உணர்ந்தால் ஒரு காலத்தில் தமிழை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொள்ளுவதற்கும் அவர்கள் விரும்புவார்கள். அத்துடன், தமிழ் மொழி வளர்ந்தோங்கிவரும் அண்டை நாடுகளான ஈழத்திலும் மலேசியாவிலும் தமிழரல்லாத மக்களுக்கு தமிழின் உயர்வை உணர்த்துவதும் அவசியமாகும்.

ஆகவே மாநாட்டு மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை இந்தி உட்பட இந்திய தேசிய மொழிகள் பதின்மூன்று, சிங்களம், மலேயா, ஆங்கிலம் ஆகிய மொழிகளிற் பெயர்த்து, தனித்தனி மலர்களாக வெளியிட்டிருத்தல் வேண்டும். மேனாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தில் கட்டுரைகளை அனுப்பியிருந்தால், அவை ஆங்கில மலரிலும் அவற்றின் மொழிபெயர்ப்பு தமிழ் உட்பட இதரமொழி மலர்களிலும் இடம் பெற்றிருத்தல் வேண்டும் இவற்றைச் செய்வதற்கு மலர் அச்சிடுவதற்காக செலவு செய்யப்பட்ட அதே ரூ. 2 இலட்சம் போதுமானதே.

இப்பணியைச் செய்யாமல், ரூ. 2 இலட்சம் செலவில் ஆங்கிலமும் தமிழும் கொண்ட ஒரு கதம்ப மலரை வெளியிட்டிருப்பதால் தமிழின் தரம் குறைகிறது. தமிழறிஞர்களின் ஆங்கில மோகத்தைக் கண்டு தமிழ்த் தாய் தலை குனிகிறாள்.

விழாவுக்கான ஆடம்பரங்கள் அளவு மீறி சென்று விட்டன என்று சென்னைச் செய்திகள் கூறுகின்றன.

தமிழுக்கு விழா எடுப்பது சரியே! விழாவின் போது நகரம் விழாக் கோலம் பூண்டிருப்பதும் சரியே! ஆயினும் அளவு மீறிய ஆடம்பரங்களும கொண்டாட்டங்களும் நடவடிக்கைகளும் தமிழாராய்ச்சி கருத்தரங்கின் முக்கியத்துவத்தை மூடி மறைத்துவிடும் என்பதை மாநாட்டு அமைப்பாளர்கள் உணரத் தவறிவிட்டனர். தமிழுக்கு விழா தேவை. பண்டைத் தமிழரின் பண்பாட்டை நினைவூட்ட கொண்டாட்டங்களும் தேவை- ஆனால் அவற்றிலும் அதிகமாக இன்று ஆராய்ச்சி தான் தேவை.

கருத்தரங்கில் விவாதிக்கப்படும் ஆராய்ச்சிகள் தமிழை உலக மொழி அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு உறு துணையாக இருக்குமென்றே நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் இந்தியாவின் ஆட்சி மொழியாவது உறுதி"

## தமிழாராய்ச்சி மாநாட்டில் அண்ணா நிகழ்த்திய தலைமையுரை

"தமிழ் மொழி இந்தியாவின் இணைப்பு மொழி; ஆட்சி மொழி; பொதுமொழி என்று சொல்லும் காலம் வரும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. அந்தக் காலம் அவசரத்தினாலோ ஆத்திர உணர்ச்சியினாலோ வராது. மீன் பிடிப்பவன் தூண்டிலைப் போட்டு விட்டு மீன் வருகின்றவரை பொறுமையுடன் காத்திருப்பதுபோல பொறுமையுடன் காத்திருக்க பழகிக்கொள்ள வேண்டும். கால மறிந்து செய்தல இடமறிந்து செய்தல், வலிவறிந்து செய்தல் என்று திருவள்ளுவர் கூறியது எல்லாவற்றுக்கும் சேர்த்துத் தான்" சென்னையில் நடைபெறும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசிய தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அண்ணா தமது உரையில் மேலும் கூறியதாவது:—

'தமிழுக்கு உரியமரியாதையும் உரிமையும், கொடுக்கப்படாவிட்டால் தமிழகம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. தமிழர்களை அணைத்துச் சென்றால் அகில உலகில் உள்ளவர்களுக்கும் அவர்கள் தோழர்களாக இருப்பார்கள். இதைத் தான் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எடுத்துச் சொன்னார்கள்.



தமிழரின் பண்பாட்டை எடுத்துச் சொன்னவர்கள் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்றும் சொன்னார்கள். நல்லது வர வேண்டும் என்றாலும், கெட்டது வர வேண்டுமென்றாலும் நம்மால் தான் வர வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆகையால் தீது வருமோ என்று ஐயப்பாடுஇருந்தால், தீதும் நன்றும் பிறர் தரவாரா என்பதை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் வேண்டாம் என்றால் தமிழனைத் தீது தீண்டாது. இதைப் போன்றே நன்மையும் பிறர் தரவாரா. நாமேதான் தேடிக்கொள்ள வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இது நமக்குக் கூறப் பட்டிருக்கிறது.

'உலகின் பல்வேறு நாடுகளில் தமிழ் மொழி ஆராய்ச்சியில் வல்லவர்களும், தமிழக வரலாற்று நுணுக்கங்களை அறிந்திருப்பவர்களும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் மகாநாட்டையொட்டி நடைபெறும். கருத்தரங்கில் சொல்லும் கருத்துக்கள் நமக்குப் பயனளிக்கத் தக்கதாகும்.

'நம் தமிழ்மொழி தொன்மையானது; வலிமை மிக்கது. வேறு பல மொழிகளுக்குத் தாயகமாக இருப்பது என்ற பெருமைகளை அவர்கள் எடுத்துச் சொல்ல விருக்கின்றார்கள்.

'தமிழ் மொழியின் மாண்பு உலகெங்கும் பரவி இருந்ததற்கு உலகின் பல்வேறு நாடுகளின் தமிழ் கலாசாரச் சின்னங்களைக் கண்டு பிடித்து ஆராய்ந்தறிந்து இருக்கிறார்கள்.

'ஓரளவுக்கு அறிந்த இந்த உண்மைகளை முழு அளவுக்கு அறிதல் வேண்டும். உலகம் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு அதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற வகையில் கருத்தரங்கு நடைபெறுகிறது.

'முதலாவது உலகத் தமிழ் மகாநாட்டையே சென்னையில் நடத்தியிருக்க வேண்டும். என்ன காரணத்தினாலோ மலேசியாவில் உள்ளவர்கள் முந்திக் கொண்டார்கள்.

'எப்பொழுதுமே அண்ணன் அக்கறை காட்டாவிட்டாலும் தப்பி மிகுந்த அக்கறையுடன் இப்பதைக் குடும்பங்களில் காணலாம். ஆகவே, முதல் மகாநாட்டை இங்கு நடத்துவதற்குக் குந்தகம் ஏற்பட்டிருந்தாலும்கூட, இரண்டாவது மகாநாடு நடப்பது அதன் தொடர்ச்சியே தவிர புதிது அல்ல.

'முதலாவது தமிழ் மகாநாட்டில் இருபது நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். ஆனால், சென்னையில் நடைபெறும் இரண்டாவது மாநாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

'அவ்வளவு நாடுகள் ஆர்வம் காட்டுகின்ற தமிழ்மொழி இந்தியாவிற்குள்ளேயே இன்னும் பல பகுதிகளில் இடம்பெற முடியாமல் இருப்பது எண்ணி வருந்தத்தக்கதாகும்.

'தமிழ் மொழியின் மேன்மையை ரஷ்யப் பேரறிவாளர்கள் பாராட்டுகிறார்கள். செக்கோஸ்லோவேகியா நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இங்கிலாந்து பல்கலைக் கழகங்களிலும், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழி ஆராயப்பட்டு வருகின்றது. அப்படிப்பட்ட தமிழ்மொழிக்கு நாம் சொந்தக்காரர்கள் என்று எண்ணும் நேரத்தில் நாம் எங்கோ இருக்கின்றோம்.

'ஆனால் அதனுடைய நிலைமை என்ன என்று எண்ணும் பொழுது இருக்கின்ற இடத்திற்கே வந்து சேருகின்றோம். அந்தச் சீர்கேடு நீங்கவேண்டும்.

'தமிழ் மொழியின் மேன்மையைப்பற்றி எண்ணிக் கொண்டு எங்கோ இருக்கின்றோமே அந்தக்காலம் எப்பொழுது வரும் என்றால், தமிழ்ப் பண்பாட்டை உணர்ந்த தமிழர்கள், தமிழ் வரலாற்றை அறிந்த தமிழர்கள் உணர்ந்து ஒன்றுபட்டுப் பணியாற்றும் காலத்தில் அப்படிப் பட்ட கட்டத்திற்கு நாம் நிச்சயம் செல்வோம.

'மிகத் தொன்மையும் சிறப்பும் பெற்ற நம் மொழி பெரு மக்களால் ஆராயப்பட்டு புதிய பொலிவையும், வலிவையும் பெறுவதற்கு இந்த மகாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மகாநாட்டைத் தவறான வழியில் பயன்படுத்திக் கொள்ளாமல் தமிழ் மொழியின் வளத்திற்காகவும், தமிழர்கள் நல்வாழ்விற்காகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.'

## 6 லட்சம் மக்களுக்கு தனியாட்சி உரிமை!

ஆறு லட்சம் மக்களைக்கொண்ட மரிடியஸ் தீவு மார்ச் மார்ச் மாதம் 12-ம் திகதி சுதந்திர மடைந்து தனியாட்சி உரிமை பெறுகிறது.

ஆபிரிக்கா கண்டத்துக்கு கிழக்கே இந்து மகா சமுத்திரத்தில் இருக்கும் மரிடியஸ் தீவு இதுவரை பிரிட்டிஷ் காலனி நாடாகவிருந்து வந்தது.

இந்தத்தீவின் பரப்பளவு ஆக 720 சதுர மைல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத் தீவின் மக்கள் தொகை6 லட்சம். அதில் 3-ல் 2 பங்கினர் இந்தியர்கள். அவர்களிலும் பெரும்பான்மையினர் தமிழர்கள். ஆகவே தமிழர்களுக்கு தனி நாடு கிடைக்கிறது என்று கூறலாம்.

மரிடியஸ் சுதந்திரம் சம்பந்தமாக மரிடியஸ் பிரதமர் ராம்கூலம் புதுடெல்லியில் அண்மையில் திருமதி இந்திரா காந்தியை சந்தித்துப் பேசினார்.

## சுதந்திரக்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பது ஆகாதா என்று நமது நிருபர் வினவிய போது மேற்கண்ட பிரமுகர் கூறியதாவது:—


'சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றாலென்ன வேறு எவர் வெற்றி பெற்றாலென்ன எமக்கதில் கவலை கிடையாது. தமிழரசுக் கட்சியை தோல்வியடையச் செய்வதே எமது நோக்கம்.'

இதற்கிடையில் திரு. மாணிக்கம், இடைத் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அவரது வைப்புப் பணத்தை செலுத்த கல்முனையில் இதுவரை யாரும் முன்வரவில்லையென்றும், இதற்கு காரணம் அது திரும்ப கிடைக்குமா என்ற சந்தேகமேயென்றும் கல்முனை வாசியொருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. மாணிக்கத்துக்கு கொழும்பிலுள்ள ஒரு பிரபல இனிப்பு வியாபாரியொருவர் ஒரு தொகைப் பணத்தை கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. குறித்த இனிப்பு வியாபாரி திரு. திருச்செல்வத்துக்கு கிடைத்த மந்திரி பதவி தக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தில், திரு. திருச்செல்வத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எதிராக பொய்ப் பிரசாரம் செய்ய ரூபா இரண்டு லட்சம் தயாராக வைத்திருக்கிறாரென்றும் சொல்லப்படுகிறது.

## கல்முனை இடைத்தேர்தலில் மசூர் தமிழரசு வேட்பாளர்

கல்முனை இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 11-ம் திகதி தாக்கல் செய்யப்படுகின்றன. இவ் விடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் செனட்டர் ஜனாப் மசூர் மவுலானா போட்டியிடுகிறார்.



ஜனாப் மௌலானா சிறந்த பேச்சாளர்; இளைஞர்; கரவாகு வடக்கு கிராம சபையின் தலைவர்; கல்முனைத் தொகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் இரு சாகியத்தாரின் பேரன்புக்கும் இலக்கானவர்; சிறிதுகாலம் செனட்டராகப் பணியாற்றியவர்.

ஜனாப் மவுலானாவை தேசிய அரசாங்கத்திலுள்ள இதர கட்சிகளும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தலில் ஜனாப் மவுலானா தமிழரசு வேட்பாளராக கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு சில நூறு வாக்குகளாலேயே வெற்றிக்கான வாய்ப்பை இழந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

, இலட்சியப் பற்றும் கொள்கைவெறியும் கொண்ட தமிழரசுக் கட்சி நடத்திய தமிழுரிமைப்போராட்டங்கள் பலவற்றிலும் கலந்துகொண்டு சிறைச்சாலை சென்ற பெருமையும் மௌலானாவுக்குண்டு.

## தமிழ்-ஓர் உலக....

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

உலக அறிவின் புனித களஞ்சியமாக விளங்குகிறது குறள். வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும். உலகின் மிகவும் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

அதே போன்று தற்கால இலக்கியமும் செழிப்புற்று விளங்குகிறது. கவிஞர்கள் கதாசிரியர்களின் பட்டியலில் சுப்பிரமணிய பாரதியின் பெயர் குறிப்பிடத் தக்கது. நமது நாட்டு விடுதலைப்போராட்ட கவியான அவர் புதியதொரு சுதந்திர சகாப்தத்தை முன்னரே அறிவிக்கக்கூடிய தீர்க்க தரிசனத்தை பெற்றிருந்தார்.

### பழைய மரபு

தமிழ்மரபு பழைமையானது மட்டுமின்றி பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருப்பதால் அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம்.

சமஸ்கிருத மொழிக்கு பாணினி செய்துள்ளதைப் போன்று, தமிழுக்கும் தொல்காப்பிய ஆசிரியர் திடமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறார்.

ஆனால், தமிழ் சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் தங்களுடைய மொழியை வளப்படுத்தியதும் அதன் சொல்வளம், இனிமை முதலிய பண்புகளை கண்டுபிடித்ததோடு, இந்திய சமயம், தத்துவம் கவிதை ஆகியவற்றின் மொழியாக விளங்கும் சமஸ்கிருதத்தை பயிலுவதன் அவசியத்தையும் அனுகூலத்தையும் உணர்ந்திருந்தார்கள்.

வேறுமொழிகளை அறிந்து தன்னுடைய அறிவாற்றலைப் பல்வேறு விதங்களில் வெளிக்காட்டுவதற்கு தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான்.

### கல்வெட்டு கூறும் உண்மை

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித் திறனைப் பெற்றிருக்கின்றனர். சுகாதார அமைப்புகளைப்பற்றி நாம் இங்கு குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளிகளும், ஸ்தாபனங்களும் இங்கு இருந்தன என்று தமிழ் நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் நாம அறிகிறோம்.

ஆலயம் இல்லா கிராமத்தில் குடியிருக்ககூடாது. ஏனெனில் ஆலயம் பூஜைக்குரிய இடம் மட்டுமன்றி ஒரு கல்வி போதனைக்கான இடமும் ஆகும்.

இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான ஔவை கூறியிருக்கிறார். இலக்கியம், கலை, மதம், சமூக உறவுகள் முதலிய கலாச்சார வாழ்க்கைக்கான அனேகமாக எல்லா அம்சங்களையும் உருவாக்கி ஊக்குவிப்பதில் ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கி வந்தது.

மக்கள்தொகை அதிகமுள்ள பெரிய பட்டணங்களில் இவ் வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது. 'கடிகா' அல்லது பல்கலைக் கழகம் பெரு மதிப்புடன் விளங்கியதுமட்டுமின்றி அரசியல் துறையில் செல்வாக்குப் பெற்றிருந்ததாக நாம் அறிகிறோம்.

சர்வதேசத்தன்மையுடனும் ஒற்றுமை உணர்வுடனும் கூடியதுமான தமிழர்களின் தன்மைபற்றி குறிப்பிட்டு விட்டு, நான் முடித்துக்கொள்கிறேன்.

## மலையகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் தோன்றிய ஒரு காளான் இயக்கத்தின் தலைமைப் பதவியில் தானாகப் போய் ஒட்டிக் கொண்டிருப்பவர் திரு. சுந்தரலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு, இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்ததின் மூலம் தமிழரசுக் கட்சி துரோகம் செய்து விட்டது என்று கூறும் காளான் இயக்கத்தின் தலைவர், மலைநாட்டுத் தமிழர் இலங்கைத் தமிழரே அல்லவென்று குறிப்பிட்டது வேடிக்கையானது மட்டுமலல, விஷமத்தனமும் நிறைந்தது என்று கூறப்படுகிறது.

மலையகத்தில் புதிய தொழிற் சங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோதே திரு. சுந்தரலிங்கம் இக் கருத்தை வெளியிட்டாராம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எட்டுப் பேருக்கு ஒருவரே தமிழர்!

## தபால் திணைக்களத்தில் பாரபட்சம்!!

வேலை வாய்ப்புவிடயத்திலும் சேவையில் பதவி உயர்ச்சி வழங்கப்படுவதிலும் தமிழ் பேசும் சமுதாயத்துக்கு எதிராக எதுவித பாரபட்சமான நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாதென்று பிரதம மந்திரி ஏற்கனவே பலமுறை கூறியிருப்பது தெரிந்ததே.

ஆனால் தபால் திணைக்களத்தில் நடைபெறும் சம்பவங்கள் பிரதமரின் வாக்குறுதிக்கு எதிர்மாறானவைகளாகவே இருக்கின்றன.

இந்தத் திணைக்களத்தில் உயர்தர உத்தியோகத்தர்களாக அண்மையில் 8 அதிகாரிகள் தெரிவுசெய்யப்பட்டனரென்றும் அவர்களில் ஒரே ஒருவர்தான் தமிழரென்றும் அறியப்படுகிறது. அவரும் கூட உயர்தர உத்தியோகங்கள் வகிக்கும் தனது உறவினர்கள், ஓர் யு. என். பி. பிக்கு ஆகியோரின் சிபார்சுகளின்மீதே தெரிவு செய்யப்பட்டனராம்.

தபால் கந்தோர் அதிபர் தரமும், விசாரணை இன்ஸ்பெக்டர் தரமும் உள்ள சிரேஷ்டர் தமிழ் அதிகாரிகள் அந்தப் பதவிகளை வழங்கும்போது போதிய சிபார்சுகள் இல்லாததால் புறக்கணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அனைவருக்கும் பொதுவான நியாயம் இருத்தல் வேண்டுமல்லவா? பொது சேவா ஆணைக்குழுவும் பதவி உயர்வு ஆலோசனைச் சபையும் நியாய அடிப்படையில் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது இவ்விடயத்தில் பிரதம மந்திரி தலையிட்டு தமிழ் ஊழியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று அரசாங்க ஊழியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

1968ம் ஆண்டுக்குரிய லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் வரப் பெற்றோம்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதையரின் வாக்கிய கணிதப்படி தயாரிக்கப்பட்ட இந்நாள் காட்டி வழமைபோலவே சீருடனும் சிறப்புடனும் விளங்குகிறது.

இலங்கையிலுள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ தினங்கள், கோயில், தேவாலய தினங்கள், யாவும் சரிவரத் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு திகதியிலும், 'வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ?' போன்ற உணர்ச்சி ஊட்டும் வாசகங்களும், பொன்மொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

உலகில் வாழ்ந்து மறைந்த பல்வேறு துறையைச்சேர்ந்த அறிஞர்களின் பிறப்பு, இறப்பு தினங்கள் அவர்களின் படங்களுடன் தரப்பட்டுள்ளன.

இத்துடன், இராகு காலம், சுபகாலம், பல்வேறு காரியங்களுக்கு வேண்டிய சுப முகூர்த்த நேரங்கள் ஆகியனவும், இதில் விளக்கமாகத்தரப்பட்டுள்ளதால், இந்துக்களுக்கு இதுஒரு உபயோகமான வழிகாட்டியென்று கூறலாம்.

நாள் காட்டி அட்டையில் பாரதியும், வள்ளுவரும், ரவீந்திரநாத் தாகூரும், ஆபிரகாம் லிங்கனும், மகாத்மா காந்தியும் அலங்கரிக்கின்றார்கள். நடு நாயகமாக மக்கள் திலகம் எம். ஜி. ஆர். காட்சி தருகிறார்.

லீலா நாள் காட்டி நல்லதொரு வழிகாட்டி.

லீலா பஞ்சாங்கத் தினக்குறிப்பு (தமிழ்) ஒரு நாளுக்கு ஒரு பக்கம் தரப்பட்டுள்ளது. விடுமுறை நாட்கள், தபால் தந்தி விபரங்கள், இலங்கை வரலாற்றில் விசேட சம்பவங்கள் நடந்த ஆண்டுகள் போன்ற பல்வேறு உபயோகமான விடயங்கள் தரப்பட்டுள்ளன.

லீலா தினக்குறிப்பில் ஒரு நாளுக்கு அரைப்பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பென்சிலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தயாபரன் இட மாற்றம்!

### வவுனியா எம்.பியின் சேவை எண் - 7

வவுனியா பா. உ.வின் தேர்தல் கால ஏசண்டாக இருந்தவராகக் கூறப்படும் கிராம சேவையாளர் ஒருவருக்கு முல்லைத்தீவு பிரிவுக் காரியாதியாரியாக நேர்மையுடன் கடமையாற்றிய திரு. தயாபரனைப் பிடிக்கவில்லை. இதன் பலன், பொதுமக்களின் வேண்டுகோளுக்கும் மதிப்பளிக்காது திரு. தயாபரன் இட மாற்றம் செய்யப்பட்டதுதான்." இவ்வாறு நமது நிருபரிடம் தெரிவித்தார் முல்லைத்தீவு பிரமுகர் ஒருவர்.

வவுனியா பா. உ.வின் இடமாற்ற சேவைகளை சுதந்திரன் நிருபரிடம் வாராவாரம் வர்ணித்துவந்த குறித்த பிரமுகர் மேலும் தயாபரன் இடமாற்றம் பற்றி கூறியதாவது:—

"எங்கள் முல்லைத்தீவு பிரிவு காரியாதிகாரியாக திரு தயாபரன் என்பவர் கடமையாற்றி வந்தார். அவர் டி. ஆர். ஓ. வாக கடமையாற்ற வந்த சில மாதங்களுக்கிடையில், அவ்வூர் மக்கள் முழுவரது அன்பையும் ஆதரவையும் பெற்றுவிட்டாரென்றே கூறவேண்டும்.

நேர்மை, கண்ணியம், இரக்கம், கடமையுணர்ச்சி போன்ற பல நல்ல குணங்கள் நிரம்பப் பெற்ற அவரில், மக்கள் அன்பைச் சொரிந்தனர்.

இருந்தும், பொறாமையுணர்ச்சி ஒருவரிடம்கொழுந்து விட்டெரிந்தது. அவர் வவுனியா பா. உ.வின் ஆதரவாளரென்று கருதப்படுபவர். தேர்தல் நேரத்தில் அவரது தேர்தல் ஏசண்டாக பணி புரிந்தவர் என்று கூறப்படுபவர். கிராம சேவையாளர். திரு. தயாபரனின் கண்டிப்பும் நேர்மையும் இந்தக் கிராம சேவையாளரை ''தாக்கி''யிருக்க வேண்டும்.

எப்படியாவது திரு. தயாபரனை இட மாற்றம் செய்துவிட வேண்மென்று மனதிற்குள் கறுவிக்கொண்டார்.

ஓடினார் வவுனியா பா. உ. விடம். பா. உ.வை அவரது வீட்டில் சந்தித்தார்.

இதன் பயன்தான் தெரியுமே, சில நாட்களில் திரு தயாபரனுக்கு இட மாற்ற உத்தரவு வந்தது. பொதுமக்கள் எவ்வளவோ எதிர்த்துப் பார்த்தார்கள். எதுவும் நடக்கவில்லை. முடிவில் திரு தயாபரன், இடமாற்றம் செய்யப்பட்டார்.


இதோ ஒரு
தலைசிறந்த வாய்ப்பு!

சு ★ நியாயமான கட்டணத்தில்...
த ★ குறித்த நேரத்தில்...
ந் ★ கவர்ச்சியான அமைப்பில்...
தி ★ திறமையான வேலைப்பாட்டுடன்...
ர ★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து
ன் கொடுப்போம்.

அச்சகம

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை - ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194/a, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.


## ஜீ. ஜீ.க்கு நடேசன் விடுத்த எச்சரிக்கை!

(சென்றவாரத்தொடர்ச்சி)

அப்போது யாழ்ப்பாணத் தொகுதியல் திரு. பொன்னம்பலத்துடன், கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளராக திரு. கார்த்திகேசன் போட்டியிட்டார். பருத்தித்துறைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் சார்பல் மறைந்த திரு. கந்தையாவுடன் திரு. சிவசிதம்பரம் போட்டியிட்டார்.

கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர்களுக்காக செனட்டர் நடேசன் கியூ சி. தீவிரமாகப் பிரசாரம் செய்துவந்தார். பருத்தித்துறையில் திரு.கந்தையாவுக்கு வெற்றிவாய்ப்பு காணப்பட்டது. (பின்னர் திரு. கந்தையா தேர்தலில் வெற்றி பெற்றது தெரிந்ததே.)

எனவே எப்படியாவது திரு. பொன்னம்பலம் பருத்தித் துறைத் தொகுதிக்கு சென்று திரு கந்தையாவுக்கு எதிராக பிரசாரம் செய்யவிடாது தடுத்துவிடவேண்டு மென்று திரு நடேசன் திட்டம்போட்டார்.

### "காரியயூரி"

இதன் பயனாக திரு. பொன்னம்பலத்துக்கு ஒரு எச்சரிக்கையை திரு. நடேசன் விடுத்தாராம்.

அந்த எச்சரிக்கை என்ன தெரியுமா? திரு. பொன்னம்பலம் மறந்தும் (1956ம் ஆண்டு) தேர்தல் பிரசாரத்துக்கு பருத்தித்துறைத் தொகுதிக்கு போகக்கூடாது. மீறி அவர் போனால், யாழ்ப்பாணத் தொகுதியில், கம்யூனிஸ்ட் வேட்பாளரான திரு. கார்த்திகேசனை போட்டியின்று வாபஸ்வாங்கச் செய்வதுடன் கம்யூனிஸ்ட்கட்சியும் திரு. நடேசனும திரு. பொன்னம்பலத்துடன்போட்டியிட்ட தமிழரசு வேட்பாளரான டாக்டர் நாகநாதனுக்காகப் பிரசாரம் செய்வார்கள். இது தான் செனட்டர் நடேசன் விடுத்த எச்சரிக்கை.

இந்த எச்சரிக்கைக்குப் பிறகு தான், திரு பொன்னம்பலம் பருத்தித்துறைத் தொகுதியை திரும்பிக்கூட பார்க்கவில்லையாம். தான்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தனது கட்சி சார்பில் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய பின்வாங்கிய அரசியற் சுயநலம் தான் யாழ்ப்பாண எம். பி.க்கும், உடுப்பிட்டி எம். பிக்குமிடையே மனக்கசப்பை வித்திட்டு வளர்த்ததென்பது எங்கள் ஊரெங்கும் பிரசித்தமாகப் பேசப்பட்டு வந்தது.

திரு. சிவசிதம்பரம் அரசியல் ரீதியாக எப்படி திரு. பொன்னம்பலத்தை பழிவாங்கினார் என்று கேட்கிறீர்களா?

1960ம் ஆண்டுத் தேர்தலில் திரு. பொன்னம்பலம் தோல்வியைத் தழுவ, திரு. சிவசிதம்பரம் ஒருவரே காங்கிரசில் வெற்றிபெற்றார். அதன்பின்னர், 1965 வரை, திரு.பொன்னம்பலத்தை திரு. சிவசிதம்பரம் ஒரு பொருட்டாக மதித்ததாகத் தெரியவில்லை. மாறாக, தமிழரசுக்கட்சியுடன் தீவிரமாக ஒத்துழைத்தார். தமிழரசு மேடைகளில், தமிழரசுக் கொடியின்கீழ் நின்று, தமிழரசு இலட்சியங்களை ஆதரித்து முழங்கிவந்தார். இதனைமூலம், திரு. பொன்னம்பலத்துக்கு பாடம் படிப்பித்தார்.

ஆனால் இப்பொழுது தலைகீழ்ப பாடமாகிவிட்டதென்று கூறப்படுகிறது. திரு. பொன்னம்பலம் இப்போது உடுப்பிட்டி எம். பி.யை 'பழி' வாங்கி வருகிறாராம். இரு சிவசிதம்பரங்களும் பாராளுமன்றத்தில் பேசுவதற்கு கூட திரு. பொன்னம்பலத்தின் தயவை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறதாம். பாராளுமன்றத்தில் தனது 'தொட்டாட்டு வேலை'கள் செய்விக்க இரு சிவசிதம்பரங்களையும் பயன்படுத்துகிறாராம்.

ஒருமுறை பாராளுமன்றத்துக்கு போயிருந்தேன். தமிழ் காங்கிரஸ் தலைவர் இருந்தபடியே தனது சுண்டுவிரலை அசைக்கிறார். இரண்டுபக்கங்களிலும் இரண்டு சிவசிதம்பரங்களும எழுந்து ஓடோடி வந்து நிற்பதை கண்ணாரக் கண்டேன். சித்த மணியகாரனின் பேரனுக்கு இந்த நிலையா என்று என் ஏழைமனம் பெருமூச்சு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு தயாரிக்கும் போது
# சத்துக் கெடாமல்
# எப்படிப் பாதுகாப்பது?

உணவு தயாரிக்கும் பொழுது சத்துக்கள் சேதமாகாத வண்ணம் கவனிக்க வேண்டிய விதிகள்.

1. காய்கறிகளை அவ்வப்போது பறித்து, பறித்தவுடன் உபயோகிப்பது மிகவும் நல்லது. காய்கறிகள் வாடும் போது அவற்றிலுள்ள வைட்டமின் 'சி' யை இழந்து விடுகின்றன.

2. உணவை சமைப்பதற்கு முன் கழுவுதல், நறுக்குதல், உப்பிடுதல், வாட்டுதல் முறைகளில் விரயம் ஏற்படாதபடி பாதுகாக்க வேண்டும். காய்களை நறுக்கிய பின் நீரில் ஊற வைத்தல் ஓர் உதாரணம். கத்தரிக்காய் போன்ற சில காய்கறிகள் கறுத்துப் போகாமல் இருக்க சிறிது நீரில் ஊற வைத்தல் தேவைப்படும். ஆனால், ஊறும் நீரில் சத்துக்கள் கரைந்த விடுகின்றன. ஆகவே, நறுக்கியதும் ஊற வைக்கும் அவசியமில்லாமல் உடனே சமைக்கவேண்டும்.

காய்கறிகளைக் கழுவும் தோரணையில் அதிக நேரம் ஊற வைப்பதால் தாது உப்புக்களும், வைட்டமின்களும் அழிந்து விடுகின்றன அதனால் முழு காய்கறிகளை அரியும் முன்னரே சீக்கிரமாகக் கழுவி எடுக்கவேண்டும். ஊற வைப்பது அவசியமானால் நறுக்குவதற்கு முன்பு ஊற வைக்க வேண்டும்.

3. பழங்களிலும், காய்கறிகளிலும், அவற்றின் தோல்களில் பெருமளவில் வைட்டமின்களும் தாது உப்புக்களும் அடங்கியிருப்பதால் அவற்றைத் தோலுடன் சமைப்பதே தக்கது அவசியமானால் லேசாகத் தோலைச் சீவ வேண்டும்.

4. காய்கறிகள் சமைப்பதற்கோ பரிமாறுவதற்கோ சற்று முன்பாகத்தான் நறுக்க வேண்டும். கூடுமான வரை பெரிய துண்டுகளாக நறுக்குதல் நல்லது. அங்ஙனம் நறுக்கும் போது காற்றாலும் கொதிநீராலும் தாக்கப்படும் மேற்பரப்பின் அளவுகுறைந்து அதிக சேதமடையாதபடி காக்கிறது.

5. கூடியவரை மூடிய பாத்திரத்தில் வேக வைத்தல் வேண்டும்.

6. போதுமான அளவு நீரில் காய்கறி வகைகளையும் பருப்பு தானிய வகைகளையும் சமைப்பதினால் உயிர்ச்சத்துக்களை சேமிக்கலாம். காய்கறிகளை அதிக நீரில் வேக வைக்கக் கூடாது. வேக வைக்கும் நீரை அகற்றக் கூடாது. அப்படி வேக வைத்தால் உணவுச் சத்துக்கள் அழிந்து விடும்.

7. மைதா, வெள்ளைச்சர்க்கரை, வெள்ளை ரவை, போன்ற வெண்மையாக்கப்பட்ட உணவுப் பொருள்களைவிட முழு கோதுமை ரவை, தீட்டப்படாத அரிசி, முழு கோதுமை மாவு, வெல்லம், புழுங்கலரிசி ஆகியவற்றில் உணவுச்சத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

8. நீரை முதலில் கொதிக்க வைத்துப் பிறகு கொதி நீரில் காய்களை வேக வைப்பது நல்லது. காய்களைக் குறைந்த நேரம் வேகவைப்பதால் ஊட்டச் சத்துக்களை ஓரளவு பாதுகாக்கலாம்.

9. சமைக்கும் போது சோடாமாவைச் சேர்ப்பது உணவுகளிலுள்ள 'பி' வைட்டமின்களை அழித்துவிடும். ஆகவே சமைக்கும் போது சோடாமாவை சேர்க்கக் கூடாது.

10. உணவிலுள்ள புரதச் சத்துக்கள் அதிக வெப்ப நிலையில் கெட்டியாகி இறுகித் தன்மை கெடக் கூடியவை. எனவே, புலால், முட்டை போன்ற புரதச் சத்துள்ள பொருள்களை மிதமான வெப்ப நிலையில் வேக வைத்தல் வேண்டும்.

11. உணவைத் தயாரித்த உடனேயே பரிமாற வேண்டும்.

12. காய்கறிகளைக் குளிர்ச்சியான ஈரப்பசையுள்ள இடத்தில் சேமித்தல் வேண்டும்.

ஒரு முறை சமைத்த காய்கறிகளைச் சூடாக்குவதினால் அவற்றிலுள்ள உயிர்ச்சத்துக் அழிந்து விடுகின்றன. எனவே தேவைக்கு அதிகமான உணவைச் சமைக்கக் கூடாது.

("நன்றி: உணவு")

---

## அந்தரங்கம்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இ. தொ. கா. தலைவர் ஒரே சமயத்தில் தோட்ட முதலாளியாகவும் தோட்டத் தொழிலாளர் தலைவராகவும் இருப்பதே!

இங்கு மற்றொரு முக்கிய இரகசியமும் உண்டு,

ரூபாயின் மதிப்பு 80 சதமாகக் (20%) குறைக்கப்பட்டது தெரிந்ததே. ஆகவே 30 சதத்தின் உண்மையான மதிப்பு 24 சதம்தான். உண்மையில் தோட்டத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வு 24 சதம் மட்டுமே!

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளக் கூடியதாகத் தோட்டத் தொழிலாளி இன்று இருக்கிறான் என்பதை இ. தொ. கா. புரிந்துகொள்ள முடியாமலிருப்பது அதன் துரதிர்ஷ்டமே!

---

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

எதிர் வரும் பொங்கல் திருநாளன்று நோர்வூட் இராசா தோட்டம் பனியகணக்கு பாரதி மன்றம் அளிக்கும் ஆறாவது வெளியீடான என். கருப்பையாவின் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற சமூக சீர்திருத்த நாடகம் இராசா தோட்டம் பனியகணக்கு, திறந்த வெளி அரங்கில் 14-1-68, ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணிக்கு அரங்கேற்றப்பட இருக்கிறது.

இந்த நாடகத்தில், எஸ். சூரியநாதன், எம். லெட்சுமன் ஜி. பஞ்சரட்ணம், எம். சலமன், கே. அருணாசலம், ஜே. கணகமுத்து என். கருப்பையா எஸ். பொன்னையா, பி. பாக்கியம், எம். கணபதி, ஏ. முனியாண்டி, அ. ப. முத்து, எஸ். பெரியசாமி, பி முத்தையா, எம். ராமு, எஸ். ராமையா, கே. வேலு, எம். முத்தையா, எம். செபஸ்தியான், நடிக்கிறார்கள். கதை வசனம், டைரக்ஷன், பாடல்கள், தயாரிப்பு நிர்வாகத்தை என். கருப்பையா கவனிக்கிறார்.

---



### கறுப்பு இதயம்!

கறுப்பர் இதயம் வெள்ளையருக்குப் பொருத்தப்பட்டது.

—செய்தி

—கறுப்பர் இதயத்தை ஏற்றுக் கொள்வாரா வெள்ளையர் என்பதே இப்போதைய கேள்வி!

### சோசலிச சமஷ்டி!

முதலாளித்துவ சமஷ்டியால் பிரச்சினைகள் தீராது.

—"சண்"

—அப்படியானால், சோசலிச சமஷ்டி யேற்படுவதை அவர் ஒப்புக்கொள்கிறாரா?

### உயர உயர போகிறது!

கொழும்பில் கடந்த மாதம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

—செய்தி

—அதுதான் கொழும்பில் 'மினிஸ்கேர்ட்' வரவர உயர்ந்து கொண்டு வருகிறதோ என்கிறார். ஒரு குறும்பர்.

### 5 வீதம் இல்லையே!

தமிழ்த் தலைவர்களை 5 வீதம் தமிழர்கள் எதிர்க்கின்றனர்.

—எஸ்.டி.பண்டாரநாயகா

—ஆனால் 5 வீதம் சிங்களவர்களின் ஆதரவு கூட எஸ். டி. பண்டாரநாயகாவுக்கோ, அவரது புதிய குருநாதரான சினதாசருக்கோ இல்லையே!

### கைதிக்கவிதை

தமிழாராய்ச்சி மாநாட்டில் 25 கைதிகள் கவிதை வாசிப்பர்.

—செய்தி

—தித்திக்கும் கவிதைகளால் பல லட்சம் மக்களை கைதிகளாக்க திட்டம் போட்டு விட்டார்கள் போலும் இக் கைதிகள்.

### ஓநாயின் உதவி

சிறுபான்மைத் தமிழருக்கு பௌத்த காங்கிரஸ் உதவி செய்யும்.

—செய்தி

—ஆட்டுக்குட்டிக்கு உதவி செய்ய வந்த ஓநாயின் கதை சிறுபான்மைத் தமிழர்களுக்கு நன்கு தெரியுமே!

---

# திரைவாணன் பதில்கள்

ஐ. சிவானந்தன்
நெல்லியடி

கே: ரவிச்சந்திரனின் முகவரி என்ன?

ப: போக்ரோடுசென்னை-17

கே: சிவாஜி தமிழாராய்ச்சி மகா நாட்டிற்கு வள்ளுவர் சிலை கொடுத்தாரா?

ப: கொடுத்திருக்கிறார்.

கே: சிவாஜி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ப: தில்லானா மோகனாம்பாளில் இரவு பகலாக ஓய்வு ஒளிச்சலின்றி நடித்து வருகிறார்.

ஃ

பொ. சங்கர்
ஆரையம்பதி

கே: எம். ஜி. ஆரின் தோட்டத்தில் அதிகமாக என்ன விளை பொருட்கள் காணப்படுகின்றன?

ப: அன்பு, பண்பு, அடக்கம் பெருந்தன்மை ஆகிய குணங்கள் அங்கு நிறைய விளைகின்றன!

ஃ

லொயிட்—பற்றீசியா
கருக்குப்பனை

கே: திருமணத்தின் பின் நடிகர் நாகேஷ் கிறிஸ்தவரா?

ப: அவர் கிறிஸ்தவ கோயிலுக்கு சென்றதை நான் பார்த்ததில்லை!

ஃ

சிவாஜிப்பிரியன்
புலோலிகிழக்கு

கே: இப்பொழுது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எத்தனை படங்களில் ஒப்பந்தமாகி நடித்துக் கொண்டிருக்கிறார்?

ப: 10 படங்களில்!

ஃ

ப. கலைமணி
மவுன்லெவினியா

கே: சிவாஜி கணேசனுடன் எம். ஜி. ஆர் ஏன் சேர்ந்து நடிப்பதில்லை?

ப: அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க யாரும் முன் வராததால்!

ஃ

ஆனந்த சுப்பிரமணியம்
நீர்கொழும்பு

கே: தங்கவேலுவின் 'கோமாளி' படம் எப்பொழுது வெளிவரும்?

ப; படப்பிடிப்பே இன்னும் ஆரம்பமாக வில்லை...'

கே: கே. ஆர். விஜயாவுக்கு அண்ணன் தம்பி தங்கைகள் உண்டா?

ப: ஒரு தங்கையுண்டு.

ஃ

சீ. த. ஸ்டில்ராம்
ஆரையம்பதி

கே: கே: ஆர். விஜயாவின் இடது கன்னத்தில் இருக்கும் 'மச்சம்' இயற்கையா செயற்கையா?

ப: செயற்கை மச்சம்!

ஃ

ரமேஸ்
கலஹா

கே: 'காவல் காரன்' வெள்ளி விழா கொண்டாடுமா?

ப: கொண்டாட வாய்ப்பில்லை!

கே: எம். ஜி. ஆர் நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் படம் எது?

ப: 'குடியிருந்த கோயில்'

கே: பட்டணத்தில் பூதம்' 100 நாட்கள் ஓடியதா?

ப: இல்லை!

ஃ

நந்தகோபால்
புலோலி

கே: ஜெயலலிதா சிவாஜி கணேசனின் மகள் என்று சொல்லுகிறார்கள் உண்மை தானா?

ப: ஆமாம், மோட்டார் சுந்தரம்பிள்ளை படத்தில்!

ஃ

வறனன்
அச்சுவேலி

கே: மக்கள் ஸ்ரீ எம். ஜி. ஆர். நடிக்கும் விவசாயி வெற்றிப் படமா?

ப: வெற்றிப்படமே!

ஃ

வே. நாதன்
பருத்தித்துறை

கே: இப்பொழுது தமிழகத்தில் புகழ் பெற்ற டைரக்டர்களான ஸ்ரீதர் திருலோகச்சந்தர் கோபாலகிருஷ்ணன் ஆகியவர்கள் சிவாஜி கணேசனை தங்கள் படத்தில் போட சுற்றுவதன் மர்மமென்ன?

ப: இதில் மர்மமென்ன இருக்கிறது? தங்கள் படங்களுக்கு 'புக் செய்வதற்கு என்று நீங்களே கூறிவிட்டீர்களே!

ஃ

ஜெய்தீப்
நுணவியத்த

கே: சிவாஜி—பத்மினி ஜோடியைப் பற்றி தமிழ் — ஹிந்தி சினிமா வட்டாரத்தில் பேச்சு வேறு விதமாக அடிபடுகிறதே?

ப: எப்படி பேச்சு அடிபடுகிறது என்பதை நீங்கள் குறிப்பிடவில்லையே!

கே: பத்மினி சிவாஜியுடன் விஷேஷமாக நெருங்கி நடிப்பதன் மர்மம் என்ன?

ப: நடிப்பு தத்ரூபமாக அமைய வேண்டுமென்பதற்காக.

ஃ

'வாசுகி'
மன்னிங்பட்டினம்

கே: 'பவானி' என்ற படத்தில் ஜெய்சங்கர் தலைமையாக நடிக்கும் அசோகனை அடிப்பதும் தாய் அவனிடம் மன்றாடுவதும் எவ்வளவு அவலட்சணம் டைரக்டர் சிறிது கவனம் செலுத்தியிருந்தால் இப்பிழையை நீக்கியிருக்கலாமல்லவா?

ப: இப்படி சில குடும்பங்களில் சில பிள்ளைகள் நடப்பது வழக்கம்தானே!

ஃ

ஜே. ஈ. ஆர். குரூஸ்
கொழும்பு-13

கே: நடிகர் திலகத்தின் உண்மையான வயதென்ன?

ப: 39 வயது.

கே: சிவாஜி கணேசனுக்கு எத்தனை குழந்தைகள்?

ப: 4 குழந்தைகள்!

ஃ

அ. அ. கிறிஸ்ரி
யாழ்ப்பாணம்

கே: காவல்காரன் படத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்புக் கூறுவீரா?

ப: துப்பாக்கிச் சூட்டின் பின்னர் மக்கள் திலகத்தின் மார்க்கட்டை உயர்த்தி வைத்த காவல்காரன் சிறந்ததொரு வசூல் படம்!

திரைவாணன்,
சுதந்திரன் கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்மோடை இலுமனைட் தொழிற்சாலையில்

# பகற் கொள்ளை! ரூபா 7600!

**"புல்மோடை இலுமனைட் தொழிற்சாலையில் பகற் கொள்ளை! பழுதான கட்டிடங்களைத் திருத்துவதற்கு கொந்தராத்துக் கொடுக்கப்பட்டதில் ரூ. 7600/- தொழிற்சாலைப் பணம் மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றி உடனடியாக நடவடிக்கையெடுங்கள்' இவ்வாறு இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தின் புல்மோடைக் கிளை இலங்கை மணல் கூட்டுத்தாபனத் தலைவரைக் கோரியுள்ளது.**

இ. து. தொ. கழகம் மணல் கூட்டுத்தாபன தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

''கடந்த புயலால் தொழிற்சாலைக்கட்டிடங்கள் பல பழுதடைந்தன. இந்தக் கட்டிடங்கள் திருத்தும் வேலைகள் அனைத்தும் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கொந்தராத்துக்காரருக்கே கொடுக்கப்பட்டன.

இந்தப்பழுதடைந்த கட்டிடங்களைத் திருத்துவதற்கு கொந்தராத்துக் காரரிடம் கையளிச்சு முன்பு அவற்றுக்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதை பற்றி தொழிற்சாலை நிர்வாகம் சொந்தமாக ஒரு திட்டம் வகுக்கவில்லையென்று கூறப்படுகிறது.

கொந்தராத்துக்காரர் கொடுத்த கணக்கே சரியென்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாம்.

கொந்தராத்துக்காரர் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் பின்வருமாறு செலவு சிட்டை கொடுத்திருந்தார் 'ஏ' வகை ரூபா 5000, 'பி' வகை: ரூபா 3700, 'சி' வகை: ரூபா 3000 'டி' வகை: ரூபா 900.

ஆனல் இக்கட்டிடங்களுக்கான செலவுகள் பெரும்பாலும் பின்வருமாறு தான் முடிந்திருக்கக் கூடும் என்று பலரும் கருதுகின்றனர். 'ஏ' வகை. ரூபா 2000, 'பி' வகை: ரூபா 1500, 'சி' வகை: ரூபா 1200, 'டி' வகை: ரூபா 300/-

திருத்த வேலைக்கான பொருட்கள் முழுவதையும் கூட்டுத்தாபனமே கொடுத்துதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே கொந்தராத்து தொகை மிகமிக அதிகமென்று தொழிலாளர்கள் கருதுகின்றனர்.

நாட்டு நலனிலும் தேசிய நலனிலும் அக்கறை கொண்ட எமது கழகம் இந்த அநியாயம் நடப்பதைக்கண்டும் மௌனமாக இருக்க விரும்பவில்லை ஆகவே இது குறித்து உடன் மேல் நடவடிக்கை யெடுக்க கோருகிறோம்.

## நோய் தீர்க்கும்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியாக டாக்டரின் குரல் ஒலிக்கிறது. நோயாளி அதைக் குறைத் தூக்கத்தில் மனோவசியத்தின் மூலம் தூங்க வைத்தாற் போல — காது கொடுத்து உன்னிப்பாக கேட்கிற டாக்டரின் அறிவுரைகளை தன் உள்மனதுக்குள் கொண்டு செல்கிறார்.

தனது மனக் குழப்பத்தை மறந்தவராக, நோயின் கொடுமையை மறந்தவராக உள் மனதில் டாக்டரின் யோசனைகளை மட்டும் சிந்திக்கும்போது உடல் நிலையில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படுகிறது.

படுக்கையில் சிறுநீர் கழிக்கிற குழந்தைகளுக்கும் திக்குவாய் குழந்தைகளுக்கும், தூங்கும்போது இது போன்ற இசைத்தட்டுகளை ஒலிபரப்பினால் குழந்தைகள் குணமடைகின்றனவாம்!

## கொழும்பில்...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

பிறெஸ் பெட்டாரியன் பாடசாலைக்கும், மவுண்ட் லவீனியா பெண்கள் உயர்நிலைப் பாடசாலைக்கும் அனுப்பப்படுவர்.

(3) 'விஞ்ஞானப் பாடங்கள் படிப்பதற்கு தமிழ் பெண் குழந்தைகள் முன் வந்தால், கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளிலும், தமிழ் வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகளிலும், விஞ்ஞானக்கல்வி புகட்ட ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(4) மவுண்ட் லவீனியா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்கும் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் விஞ்ஞானம், அட்சர கேத்திர கணிதம்படிப்பிக்க வசதி செய்து தருவது பற்றி கவனிக்கப்படும்.

(5) விரைவில் கொத்தலாவலை புரம் தமிழ் கலவன் பாடசாலையில், மேலதிக வகுப்பறைகள் அமைத்துத் தரப்படும்.

(6) ஹவ்லக் ரோட்டிலிருக்கும் வெள்ளவத்த மாவித்தியாலயத்தில தொடர்ந்தும் தமிழ் வகுப்புககள் நடத்தப்படும்.

---

### நெடுந்தீவு ச. ச. சங்க ஆண்டுக் கூட்டம்

நெடுந்தீவு சனசமூக முன்னேற்றச சங்க 7ம் ஆண்டுக் கூட்டம் சங்கப்பணிமனையில் நடைபெற்றது.

எட்டாம் ஆண்டு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர் திரு வேல்நம்பி தலைவர்: திரு சி கணபதிப் பிள்ளை, உபதலைவர் திரு. கூ. பாக்கியநாதன், பொதுச்செயலாளர்: திரு சு. கணபதிப் பிள்ளை, உப செயலாளர்: திரு. எல. பிலேந்திரன், பொருளாளர்: திரு ப. பிரான்சிஸ் சேவியர், உப பொருளாளர்: திரு க. [illegible] திரு. [illegible].

## மக்கள் குரல்

### பிழைகளைக் களைய உதவுக

இலங்கை நடுவங்கியில் நிகழ்ந்து வந்த வங்கிப் பெயரீடுச்சிக்கல் தீர்ந்துவிட்டது. இலங்கை மத்திய வங்கி என்று எழுதுவது சரியென்று ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

இதில் பகிடி யென்னவென்றால் அரசகருமமொழித்திணைக்களத்தார் சொன்ன சொல்லுக் காற்றிற்பறக்க விடப்பட்டதுதான். இருந்த போதும் தமிழறிஞன் ஒருவனல் சரிபிழை சொல்லப்பட வேண்டிய அலுவல் சரிபிழை கூறுவதற்கென தமிழரல்லாத ஒரு கொற்றனிடம் ஆற்றப்படுத்தப்பட்டமை வருந்துதற்குறியதே.

இத்தகைய நிலைமை இனிமேல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதிற்றான் தமிழ் மொழியின் எதிர்காலவாழ்வே தங்கியுள்ளது.

தமிழ் மொழி தமிழ்ப் பண்டிதரின் தனியுடைமையென்று கருதக்கூடாது. அது தமிழருடையது, அதில் ஒவ்வொரு தமிழனும் அக்கறை கொள்ள வேண்டும். தமிழ்ச் சொல்லாக்கும் பொறுப்பை எல்லோரும் செய்தல் இயலாது என்பது உண்மையே. ஆனல் தமிழ்ச் சொலலாக்கத்துக்கென அமர்த்தப்பட்ட குழுவினர் ஆக்கும் சொற்கள் தகுந்தனவா என்பதைக் கூறத் தமிழராப் பிறந்த எல்லோருக்கும் உரிமையுண்டு.

சிங்களவரசு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பிறகு மெல்ல மெல்லமாகச் சிஙகளச் சொற்கள் தமிழுள் நுழைகின்றன. தமிழர் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும் ''மகாவித்தியாலயம்'' என்ற சொல் தமிழுள் நுழைந்துவிட்டது. இப்போது தமிழ்க் கல்லூரிகள் எல்லாம மகாவித்தியாலயம் என்று வழங்கப்பட்டு வருகின்றன. ''மகாவித்தியாலயம்'' என்ற சிங்களச் சொல்லை அப்பொழுதே தமிழில் மொழி பெயர்த்துப் ''பெருங்கல்லூரி'' என்று வழங்கியிருக்க வேண்டும்.

கடனெடுக்கும் புத்தி தமிழரைவிட்டுப் போகவில்லை அதனல் சிங்களத்தை மொழி பெயர்க்காமல் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

அண்மையில் ''போயா'' என்றொரு சொல் தமிழுள் நுழைநதிருக்கின்றது. இதையும் நாம் தமிழ்மொழி அகராதியிலிருந்து அகற்றி விடவேண்டும்.

''போயா'' என்பதற்குப்பதிலாக ''நால்வாரம்'' (நான்கிலொரு கூறு) அல்லது ''நோன்மதி'' என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். தமிழ்மக்களுக்கு மொழிப்பற்று மிக வேண்டும். அப்போதுதான் இப்படியான அலுவல்களைச் செய்ய அவர்களுக்குத் துணிவு பிறக்கும்.

''சிறிலங்கா சாகித்தியமண்டலம்'' என்று சிங்களச்சொல் அப்படியே தமிழுட் புகுந்து ''சிறிலங்கா சாகித்தியமண்டலம்'' என்று தமிழில் வழங்குகின்றது. தமிழ்ப் பண்டிதர் எனப்படுவோர் இதைப் பற்றி ஒன்றுமே கூறாது வாளாவிருக்கின்றனர்.

சிறீலங்கா சாகித்திய மண்டலம் என்ற சொற்றொடரில் ஒரு சொல் தானும் தமிழ்ச் சொல்லாயில்லை அப்படியிருக்கவும் நாம் அதை அப்படியே தமிழில் ஏற்றுவிட்டோம்.

தமிழெழுத்தில் எழுதப்படுவன எல்லாமே தமிழ் என்று கருதினல் அது தவறான கருத்தாகும். சிறீலங்கா என்பது ஈழத்தைக் குறிக்கும் சிங்களச் சொல்; சாகித்தியம் என்பது இலக்கியம் என்னும் பொருளது; மண்டலம் என்பது கழகம் என்னும் பொருளது; எனவே ஈழவிழக்கிய கழகம் என்பதே சிறீலங்கா சாகித்திய மண்டலம் என்பதற்கிணையாக தமிழ்ச் சொற்றொடராகும்.

இம்மொழிபெயர்ப்பை நாம் உடனடியாகச் செய்தாக வேண்டும். இது ஒரு நிறுவகத்தின் பெயரல்லவற்றே; இதை எப்படி மொழிபெயர்ப்பது என்று கேட்டுப்பயனில்லை. இதை விட்டுக் கொடுத்தால் நாம் இன்னும் எத்தனையோ செயல்களை விட்டுக்கொடுக்க நேரும்.

இலங்கை நடுவங்கியின் பெயர் பற்றிய சிக்கல் எழுந்த போதும் சிலர் இதைத்தான் கேட்டார்கள். அவர்கள் சொன்னபடி நடந்திருந்தால் ''சிறீலங்க மகா வங்குவ'' என்றுதான் எழுதவேண்டி வந்திருக்கும். எனவே வேற்றுச் சொல் தமிழில் நுழையும் போதெல்லாம் அதை எற்றி எறிதலே தமிழரின் தனிமுதற் கடமையாக இருக்கவேண்டும்.

எனவே பொதுமக்கள் இந்த அலுவலில் சற்று அக்கறை காட்டவேண்டும். மொழி பெயர்ப்பாளர் எனப்படுவோரின் மொழி பெயர்ப்புக்களில் தமிழல்லாத சொற்கள் காணப்பட்டால் அதைச் சுட்டிக் காட்டி அத்தகைய பிழைகளைக் களையும்படி வேண்ட வேண்டும். மொழி பெயர்ப்பாளர்க்குத் தம்மால் உதவ முடியுமாயின் உதவவேண்டும். மொழி பெயர்ப்பாளர்கள் எல்லோரும் வல்லவர் அல்லர். எனவே அவர்க்குதவி அதன் மூலம் தமிழ்க்குதவல் தமிழ் வாசகரின் தனிப்பெருங்கடன்.


— சே. தருமராசா

கீழைப்புலோலி,
பருத்தித்துறை.

---

பார்வெர்கி ஹோஸ்ட் என்னும் ஜெர்மன் இரசாயன ஸ்தாபனம், ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய மருந்து தயாரிப்பு தொழிற்சாலையை தொடங்கியுள்ளது. இங்கு ஒரு நாளைக்கு 120 இலட்சம் முதல் 150 இலட்சம் வரையில் மாத்திரைகள் தயாரிக்க முடியும்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து மன்னராக இளவரசர் சார்ள்ஸ் எப்போது முடி சூடுவார்?

இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸ் இடபோது சோதனைக் களத்தில் விடப்பட்டிருக்கிறார். அவர் இறங்கியுள்ள சோதனைக்களத்தில் எதிர்ப்படும் சிக்கல்களையெல்லாம் வெற்றிகொண்டால்தான் எதிர்காலத்தில் இங்கிலாந்து அரியணையில் அமர முடியும். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சக்ரவர்த்தியாக அவர் முடி சூட்டிக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்காக பல கடுமையான சோதனைகளில் அவர் வெற்றி பெற்றாகவேண்டும்.

பதினெட்டாவது வயதில் அடியெடுத்துவைத்துள்ள இளவரசர் சார்லஸ் முதன்முதலாக வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருங்கலைகளைக் கற்றுத்தேர்வதற்காகப் புறப்பட்டுச் சென்றார்.

முதன்முதலாக அவுஸ்திரேலியாவிலுள்ள கீலாங் இலக்கணப் பள்ளியில் கற்றுத் தேற வேண்டும். அங்கு பொதுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் போதிக்கப்படுகிறது. மிகக் கடுமையான உடலுழைப்பு நல்கக்கூடிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. எனவே இந்தப் பள்ளியில் தேறுவது என்பது அவ்வளவு எளிதல்ல. இதுபற்றியெல்லாம் கேள்விப்பட்டிருந்தும் மிகுந்த உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் தன் பெற்றோரிடமிருந்து சார்லஸ் விடை பெற்றுக் கொண்டார்.

### போர்ப் பயிற்சி

இங்கிலாந்து அரியணையின் மீது ஏறி அமருவதற்கு முன்பு சகல கலைகளையும் தொழில்களையும் கற்றுத் தெரிந்தாக வேண்டும். இப்போது போர்ப் பயிற்சி — தொழிற் பயிற்சி — இசைப் பயிற்சி ஆகியவற்றிலெல்லாம் தேர்வுபெற்றுள்ளார்.

1966 நவம்பர் மாதம் அதிகாரபூர்வமாக இளவரசர் பட்டத்தைப் பெற்றுள்ள சார்லஸ் எதிர்காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சக்ரவர்த்தியாக முடி சூட்டிக்கொள்ளப்போகிறார். ஆனால் அந்தப் பதவியை அவர் பெறுவதற்கு எத்தனை காலம் காத்திருக்க வேண்டும் என்பதுதான் இப்போதுள்ள சிக்கல்.

கிட்டத்தட்ட இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்க வேண்டி வரலாம். ஒருகால் அதற்கு மேலும் காலம் நீடிக்கலாம். இப்போது ராணி எலிசபெத்திற்கு 41 வயதுதான் ஆகிறது. இவர் காலத்திற்குப் பிறகுதான் சார்லஸ் அரியணையில் அமர முடியும்.

பொதுவாகவே இங்கிலாந்து ராணிகள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதுதான் வரலாறு. விக்டோரியா மகாராணி 81 வயது வரை பதவியில் இருந்தார். அலக்சாண்டிரா மகாராணியும் 81 ஆவது வயதில்தான் காலமானார். இப்போதுள்ள ராணி எலிசபெத்தின் தாயாருக்கு 65 வயதாகிறது என்றாலும் இன்னும் இளமையாகவே காணப்படுகிறார்.

எனவே சார்லஸ் இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பு நிறைய உலக அனுபவம் பெற்று விடுவார். திருமணம் செய்துகொண்டு குழந்தை குட்டிகளோடு குடும்பம் நடத்தும்போதுதான் அவர் இந்தப் பதவிக்கு வர முடியும். ஏன்? ஒருகால் அதற்குள் அவர் பட்டனாராக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆகவே அதற்குள் இடையில் ஏற்படும் பல சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

### காதல் விவகாரத்தில் எச்சரிக்கை

கடைசிவரை தனது அரச குடும்ப கௌரவத்தை மிக விழிப்போடு காத்துவர வேண்டும். காதல் விவகாரத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்தாக வேண்டும். வெளிநாடு சுற்றுப்பயணம் செய்து தனது ஒப்பற்ற தன்மையை நிறுவ வேண்டும். பேச்சு வன்மை பெற்றுத் திகழ்வதுடன் வெளிநாடுகளிலிருந்து வரும் அரசாங்கத் தலைவர்களுடனும், அரசியல் தலைவர்களுடனும் பழகுவதில் ஒரு தனித்திறமையைக் காட்ட வேண்டும்.

எந்தக் கணத்தில் பொதுமக்களின் குறைக்கு ஆளாக நேர்கிறதோ அந்தக் கணத்திலேயே அவரது இளவரசுப் பட்டப் ஆட்டம் கண்டுவிடும். அதன்பிறகு சாம்ராஜ்ய சக்ரவர்த்திப பதவியைப் பற்றிக் கனவுகூடக் காண முடியாது.

எனவே நீண்ட காலத்திற்கு தனது உணர்ச்சிகளை அடக்கி வைத்து ஒரு அசாதாரண சூழ்நிலையில் மிக எச்சரிக்கையோடு வாழ்க்கை நடத்தியாகவேண்டும் என்ற கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார் இளவரசர் சார்ல்ஸ்.

சார்ல்ஸுக்கு இளவரசுப் பட்டம் கிடைப்பதற்கு முன்பு அவரது நடவடிக்கைகளைப் பற்றி பலமுறை அவர் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறார்.

### மது அருந்தி பிடிபட்டார்

ஒருமுறை சார்லஸ் ஒரு ஓட்டலுக்குச் சென்று மற்றவர்களுடன் சேர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தபோது பிடிபட்டார்.

ஒருமுறை அவர் பள்ளிக்கூடத்தில் எழுதிய வியாசத்தை வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு விற்றுவிட்டதாகப் புகார் கிளம்பியது. ஆனால் இதனை மறுத்து பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து ஒரு அறிவிப்பு வெளிவந்தது.

பல தடவைகளில் மிகக் கடுமையான பயிற்சிகளில் கலந்து கொள்ளாமல் தப்பித்துக் கொண்டார் என்ற புகார்கள் எழுந்தன இந்தப் புகார்களும் மறுக்கப்பட்டன.

இப்படி சிறு வயதில் பல புகார்களுக்கு தன்னை உட்படுத்திக்கொண்டுள்ள சார்ல்ஸ் இனிமேல் மிக விழிப்போடு இருந்து தனது நிலையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கடைசிவரை உறுதியோடு இருந்து தவறுகளுக்கு இடம் கொடுக்காமல் தனது வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொண்டால்தான் எதிர்காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யசக்ரவர்த்திப்பதவியைப் பெற முடியும்.

ஆனால் அதற்குள் இங்கிலாந்தில் ஏதேனும் புரட்சி ஏற்பட்டு இன்றைய முறை மாற்றப்பட்டு இதர நாடுகளில் உள்ளது போன்ற குடியரசுத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை அமுலுக்கு வந்துவிட்டாலோ என்ற கேள்வியும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

# நோய் தீர்க்கும் இசைத் தட்டுகள்

உங்களுக்குத் தலைவலியா? தூக்கமின்மையால் அவதிப்படுகிறீர்களா? என் இசைத் தட்டுகளைக் கேளுங்கள் தலைவலி பறந்து போகும், தூக்கம் தானாக வரும் என்று இன்னும் சிறிது காலத்தில் டாக்டர்களின் விளம்பரங்கள் வெளிவந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் இசைத் தட்டுக்கள் மூலம் சிகிச்சை அளிக்கக் கூடிய புரட்சிகரமான முறையை மேற்கு ஜெர்மன் டாக்டர் பேராசிரியர் பிராச்லி கண்டு பிடித்திருக்கிறார். நரப்புத் தளர்வினால் மனம் நொந்து, பலவித நோய்களினால் அல்லல் படுகிறவர்களை கிராமபோன் ரிக்கார்டுகளின் மூலம் குணப்படுத்த முடியும். இவ்வழியின் மூலம் 50,000க்கும் அதிகமான நோயாளிகளை அவர் குணப்படுத்தியுள்ளார்.

நரப்புத் தளர்ச்சி, தூக்கமின்மை, தலைவலி, திக்குவாய், தாழ்வு மனப்பான்மை, இரத்த ஓட்டநோய்கள், இரத்த அழுத்தப், சளி மற்றும் வயிறுகுடல், கல்லீரல், சிறு நீரகம் ஆகியவற்றில் ஏற்படுகிற நோய்களை இசைத்தட்டுகள் மூலம் குணப்படுத்த முடியும் என்கிறார் டாக்டர் பிராக்லி. எப்படி?

மனோதத்துவமே இதன் அடிப்படையாகும்.

மனோதத்துவ சிகிச்சை முறையில் அனுபவம் மிக்க டாக்டர் பிராக்லியின் அறிவுரைகள், 16 பாடங்களாக இசைத் தட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### சிகிச்சை முறை என்ன?

நோயாளி ஆடைகளைக் களைந்துவிட்டு, படுக்கையில் கைகளையும் கால்களையும் ஒன்று சேர்த்த வண்ணம் நிம்மதியாகப் படுத்துக்கொள்ள வேண்டும். கண்களை மூடிக் கொண்டு உடலை ஆட்டாமல் அசைக்காமல் நிம்மதியாகப் படுத்திருக்கவேண்டும். இசைத்தட்டிலிருந்து மெல்லிய குரலில் டாக்டரின் அறிவுரைகள் ஒலிபரப்பாகும். 'இதைக் கவனி' மூக்கின் வழியே வந்துபோகிற மூச்சின் சத்தத்தை காது கொடுத்துக் கேள், அதன் வழியாக உன் எண்ணத்தின் போக்கு உடலினுள் செல்கிறது. தற்போது சந்திக்கும் பகுதி தெளிவாக ஓய்வாக இருக்கிறது.

(12-ம் பக்கம் பார்க்க)

# பசியா? இயந்திரத்திடம் பணம் கோட்டால் அது சாப்பாடு வழங்கும்!

மேல் நாடுகளில் பொருள்களை விற்பனை செய்யும் இயந்திரங்கள் பெருகிவருகின்றன.

கடைகளில் மக்கள் 'கியூ' வரிசையில் காத்திராமல், கடைக்காரனிடம் பேரம் பேசி காலத்தை கொலை செய்யாமல் இயந்திரத்திடம் பணம் செலுத்தி தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பழக்கம் அங்கெல்லாம் அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் தெருத் தெருவாக இம்மாதிரி விற்பனை இயந்திரங்களை நிறுவி இருக்கிறார்கள். இந்த இயந்திரங்களில் பணத்தைப் போட்டு சுவைக்கும் பிசின் (சூயிங்கம் சாக்லேட்) கற்கண்டு தக்காளி ரசம், பால் அன்னாசிப்பழம், ஆரஞ்சு ரசம், கோக்கா போன்ற பொருட்களை இரவு-பகல் எந்த நேரத்திலும் பெறலாம்.

நெவார்க் விமான நிலையத்தில் அதிசயமான இயந்திரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு குவாட் நாணயத்தை அதில் போட்டு விட்டு முகத்தைக் காட்டினால் இயந்திரத்தின் மின்சார ரேஸர் அற்புதமாக முகசவரம் செய்து விடுகிறதாம்!

மிடில் வெஸ்ட் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு இயந்திரம் பணத்தைப் பெற்றுக் கொண்டு சாப்பாடு வழங்குகிறது இதில் விசேஷம் என்னவென்றால் நமக்கு அதிகப்படியான கொஞ்சம் சாப்பாடோ, வறுவல், பொரியலோ தேவை என்றால் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி இயந்திரத்திடம் பெற்றுக் கொள்ளலாம்.

அமெரிக்காவில் அமைக்கப்பட்டிருக்கும் சில இயந்திரங்கள் அழகாக பூட்சுகளைத் துடைத்து விடுகின்றதாம்.

பெண்கள் தங்கள் முக அழகைப் பார்க்க எண்ணி 5 செண்ட் சில்லறையைப்போட்டால் ஒரு இயந்திரம் சிறிது நேரம் கண்ணாடியை வெளியே நீட்டுகிறதாம.

டென்மார்க்கில் ஒரு இயந்திரம் புகைப்பட மெடுக்கும் டணியை மிகச் சிறப்பாக செய்கிறதாம். தன் முன் நிற்கும் மக்களை அது புகைப்படம் எடுத்து சிறிதுநேரத்தில் கழுவி ஒரு பிரதியை வெளியே நீட்டுகிறதாம்.

டென்மார்க்கில் வழக்கமாக மாலை ஆறு மணிக்கெல்லாம் கடைகளை மூடி விடுவார்கள். ஆனால் அந்த நேரத்திற்குப் பிறகு தேவைப்பட்ட பொருட்களை வாங்க மக்கள் திண்டாட வேண்டியதில்லை. பூட்டியுள்ள ஒவ்வொரு கடை வாசலிலும் ஒரு இயந்திரம் இருக்கும். அது தேவையான பொருட்களை இரவு பகல் பாராது வியாபாரம் செய்து கொண்டே இருக்கும்.

'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற பத்திரிகையின் நிர்வாகிகள் அமெரிக்காவின் மூலை முடுக்குகள் எல்லாம் விற்பனை இயந்திரங்களை அமைத்திருக்கிறார்கள். 25 செண்ட் நாணயத்தை இயந்திரத்தில் போட்டால் அருகாமையிலிருக்கும் நியூஸ் பேப்பர் கடையிலிருந்து ஒரு பிரதி இயந்திரத்தின் மூலம் நமக்கு வந்து சேரும்.

அமெரிக்காவில் தூங்கும் மனிதர்களை குறித்த நேரத்தில் எழுப்பும் இயந்திரங்களும் உண்டு. அளவுக்கு மீறிச் சோர்வு அடைந்திருக்கும் நேரத்தில் பிராண வாயுவைச் சுவாசிக்கச் செய்து சில இயந்திரங்கள் புத்துணர்ச்சி அளிக்கின்றன.

இவ்வகைப்பட்ட இயந்திரங்களின்பிதா என்று 'ஹீரோ' என்பவரைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். தம்முடைய சொந்த வசதிக்காக இப்படிப்பட்ட இயந்திரங்களை அவர் செய்யத் தொடங்கினாராம். பின்னர் அவை மக்களின் பயனைக் கருதி பெரும் அளவில் செய்யப்பட்டதாம்.

இப்படிப்பட்ட இயந்திர வகைகளை 'ஹீரோ' கண்டுபிடித்த விதம் சுவையானதாகும்.

கிரேக்க நாட்டில் ஒரு புராதன விக்கிரகம் இருக்கிறதாம் முகம் போன்று காட்சி தந்த அந்தச் சிலையின் வாயில் ஒரு நாணயத்தைப் போட்டால் அது கொஞ்சம் புண்ணிய தீர்த்தம் தருமாம். அந்த பூதம் தெய்வீக சக்தியால் இயங்குகிறது என்று முதலில் மக்கள் நம்பினர். ஹீரோ என்பவர் அதை ஆராய்ந்து பார்த்தபோது அது ஒரு இயந்திரம் என்ற உண்மை கண்டு பிடிக்கப்பட்டது...

## அமெரிக்க பெண்ணும் இத்தாலிய பெண்ணும்

அமெரிக்க பெண்மணிகளைப் பற்றி ஒரு இத்தாலியப் பெண்மணி கூறியதாவது:-

அமெரிக்கப் பெண்மணிகளை நான் மிகவும் விரும்புகிறேன். ஒருவகையில் அவர்களைப் புகழ்கிறேன். அவர்கள் அலுவலகங்களில் பணிபுரிந்து விட்டு, வீட்டை அடைந்ததும் குடும்பப் பெண்களாக மாறிவிடுகின்றனர். இவ்வளவு வேலைகளைச் செய்து கொண்டே, அழகு செய்து கொள்வதிலும் அலங்காரத்திலும் சிறந்து விளங்குகின்றனர் அழகுக் கலையில் உலகிலேயே முதன்மை இடம் வகிப்பவர் அமெரிக்கப் பெண்டிரே. இத்தாலிய பெண்கள், அவர்களுடைய கணவன்மார்களுக்கு கீழ் படிந்து நடக்கின்றனர்; கணவனே தலைவன் என்ற உணர்ச்சி எங்கும் நிலவுகிறது. ஆனால் இந்த ஒன்றில்தான் அமெரிக்க மாதர் சற்று தரக்குறைவாக மதிக்கப்படுகின்றனர். அவர்கள் பகிரங்கமாக கணவன்மார்களோடு எல்லா விஷயத்திலும் போட்டிபோடுகின்றனர்.

மேற்கண்ட 'பெண்' மொழிகளை உதிர்த்த அந்த இத்தாலிய மங்கையர் திலகம் யார் தெரியுமா? அவர்தான் பிரபல நடிகை 'ஸோபியா லோரன்.'

—கீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப்பிரச்சினையில் தமிழ் நாடு காங்கிரசும்

# தி. மு. கழகமும் ஒன்றுபட்டுப் பணியாற்றுமா?

## மொழிப் போரில் தோல்வியுற்றால்

## சுப்பிரமணியம் பிரிவினை கோருவார்?

திரு. சி. சுப்பிரமணியம் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, மொழிப் பிரச்சினையில் தமிழ் நாடு காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் இணைந்து செயலாற்றக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகுமா? என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. தி. மு. க. ஒரு பொதுத் திட்டத்தை தெரிவித்தால், தாம் அது பற்றி ஆலோசிப்பதாக திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

தமிழாராய்ச்சி மாநாட்டை யொட்டி டெல்லி அரசு வெளியிட்டிருந்த விசேட முத்திரையில், தமிழ் புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்து அம் முத்திரையை அண்ணா நிராகரித்த செயலை திரு. சி. சுப்பிரமணியம் பாராட்டியுள்ளது, இரு கட்சிகளும் மொழிப் பிரச்சினையில் இணைந்து செயலாற்றுவதற்கு அத்திவாரமாக அமையக் கூடியதொன்றெனப் பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

தென்னகம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால் 10 ஆண்டுகள் கழித்து நானும், திரு. அண்ணாதுரையுடன் சேர்ந்து திராவிட நாடு கேட்பேன் என்று 1957ம் ஆண்டு தமிழ் நாடு சட்ட மன்றத்தில் திரு. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்திருந்தார். இப்போது 10 ஆண்டுகள் கழிந்து விட்டன. தென்னகத்துக்கு எதிரான வெறி வடக்கில் அளவுக்கதிகமாகி விட்டது. மொழிப் பிரச்சினையில், தென்னகத்துக்கு துரோகம் இழைக்கப்பட்டுவிட்டது.

ஆகவே மொழிப் போரில் வெற்றி கிடைக்கத் தவறினால்— இந்தி வெறியர்கள் பணிய மறுத்தால்— திரு. சுப்பிரமணியம் பிரிவினைக் குரல் எழுப்புவாரா என்று அரசியல் அவதானிகள் கேட்கின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக திரு. சி. சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. சுப்பிரமணியம் இப்பதவிக்கு பொருத்தமான நேரத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறாரென்றே கூறவேண்டும்.

காங்கிரசிலுள்ள மற்ற தலைவர்களைவிட திரு. சுப்பிரமணியம் தமிழுணர்வும், மக்களின் உணர்ச்சிகளை மதித்து நடக்கும் போக்கும் கொண்டவர். ஜனநாயக சம்பிரதாயங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுபவர். மொழிப் பிரச்சினையில் இந்தி பேசாத மக்களின்—குறிப்பாக தமிழக மக்களின் நிலையை ஓரளவு ஆதரிக்கும் காங்கிரஸ்காரர் திரு. சுப்பிரமணியம்.

டெல்லி அமைச்சராக திரு. சுப்பிரமணியம் பதவி வகித்த நேரத்தில், மொழிப்பிரச்சினையில் எழுந்த கருத்து வேறுபாட்டால் பதவியிலிருந்து விலகவே துணிந்தவர்.

தமிழுணர்ச்சியும், தென்னாட்டான் என்ற பிரதேச உணர்வும் ஓரளவு நிரம்பப் பெற்ற திரு. சுப்பிரமணியம், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரானது இழந்துபோன செல்வாக்கை காங்கிரஸ் மீண்டும் பெற உதவுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதொன்று.

### முதல் வேலை

காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றதும் அவர்முதன் முதலாக ஒரு விடயத்தை தெரிவித்திருக்கிறார். அரசியல் மேடையிலிருந்து தனிப்பட்ட தாக்குதல்களையும், இழி மொழிகள் ஏச்சுக்கள், கௌரவக் குறைவான வார்த்தைகளை உபயோகிக்கல் போன்றவற்றை அடி[illegible]

தாக அறிவித்துள்ளார். இது வரவேற்க வேண்டியதே.

கடந்த தேர்தல் முடிவடைந்து, தி. மு. க. அரசு கட்டிலேறிய பின்னர் காங்கிரஸ் தி. மு. க. மோதல்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே நடைபெற்று வந்தன இது, தமிழ் நாட்டின் கௌரவத்துக்கு இழுக்காக இருந்து வந்தது. இத்தகைய நிலையைப் போக்க திரு. சுப்பிரமணியம் முயற்சிப்பார் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

### சுப்பிரமணியம் குற்றச்சாட்டும் அண்ணாவின் பதிலும்

திரு. சுப்பிரமணியம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை கூட்டி தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தி. மு. க. மீது இரு கண்டனங்களையும் இக்கூட்டத்தில் திரு. சுப்பிரமணியம் தொடுத்துள்ளார்.

(1) அரசாங்க நிர்வாகத்தில் தி. மு. கழகம் தலையிடுகிறது.

(2) நிதிகள் சேர்ப்பதில் தி. மு. க. அரசு அளவுக்கு மீறிப் போகிறது.

திரு. சுப்பிரமணியத்தின் முதல் குற்றச்சாட்டுக்கு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா உடனடியாக பதிலளித்துள்ளார். தி. மு. க. கட்சி நிர்வாகத்தில் தலையிட்டதை குறிப்பிட்டு தனக்கு கடித மூலமாகவோ நேரிலோ திரு. சுப்பிரமணியம் தெரிவிப்பாரானால் அது சம்பந்தமாக உடன் நடவடிக்கையெடுக்கத் தாம் தயாராக இருப்பதாக அறிஞர் அண்ணா கூறியுள்ளார்.

தி. மு. க. ஆட்சியை விழ்த்[illegible]

கார நடவடிக்கைகளிலும் காங்கிரஸ் ஈடுபடாது என்றும், சனநாயக மரபுகளை மதித்தே காங்கிரஸ் நடக்குமென்றும் திரு. சுப்பிரமணியம் தெளிவாக கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. ஏனெனில் காங்கிரசின் சில பெருந் தலைவர்களே, தி. மு. க. ஆட்சி எத்தனை நாளைக்குத்தான் நடக்கும் பார்ப்போமே என்று 'சவால்' விட்டுக் கொண்டிருந்தனர். திரு. காமராசரே, 'உன்னிடம் பொலீஸ் இருந்தால், என்னிடம் (மத்திய அரசிடம்) ராணுவம் இருக்கிறது' என்று முன்பொரு கூட்டத்தில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் திரு. சுப்பிரமணியம், தி. மு. க. ஆட்சியை வீழ்த்தும் முயற்சி எதிலும் காங்கிரஸ் ஈடுபடாது என்று கூறியிருப்பது சனநாயக உள்ளங்களுக்கு மகிழ்வைத்தரும்.

### மொழிப் பிரச்சினை

மொழிப் பிரச்சினையிலும் திரு. சுப்பிரமணியம் தமது கருத்தை தெளிவாக கூறியுள்ளார்.

மொழிச் சட்டமும், தீர்மானமும் இந்தி பேசாத மக்கள் இந்தி பேசும் மக்களுடன் சம அந்தஸ்துடன் வாழ முடியாத நிலையை உண்டு பண்ணியுள்ளன என்பதை திரு. சுப்பிரமணியம் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தி பேசும் மக்கள் தங்கள் தாய்மொழியான இந்தி மட்டும் கற்றுக்கொண்டு மத்திய அரசாங்க உத்தியோகங்களுக்கு தெரிவுசெய்யப்பட அனுமதிக்கும் அதே நேரத்தில் இந்தி பேசாதவர்களுக்கு மட்டும அவர்கள் தாய்மொழியல்லாத ஆங்கிலத்தைத் திணிப்பதால், இரு பகுதி மக்களுக்கும் உத்தியோகவாய்ப்பு கிடைப்பதில் இடைவெளி ஏற்படலாம் என்று அஞ்சுவதில் நியாயம் உண்டு என்பதை திரு. சுப்பிரமணியம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதை நீக்கக்கூடிய மாற்றுத் திட்டம் ஒன்று தம்மிடம் உண்டு என்றும், அதைத் தக்க சமயத்தில் வெளியிடப்போவதாகவும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

மொழிப் பிரச்சினையில், தி. மு. க.வும், தமிழ் நாடு காங்கிரசும் ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் இணைந்து பணி புரிவது சாத்தியமா? என்று கேட்டதற்கு, மத்தியில் ஆங்கிலம் மட்டும் என்று கோஷிப்பவர்களுடன் இணைவது சாத்தியமில்லையென்றும், தி. மு. க. பக்கத்திலிருந்து பொதுத்திட்டம் ஏதும் வெளிவருமானால், அதைத் தமது கட்சி பரிசீலனை செய்யுமென்றும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

### பொதுத் திட்டம் உருவாகுமா?

ஆனால் மொழிப் பிரச்சினையில் இரு கட்சிகளுக்கும் பொதுவான ஒரு திட்டம் ஏற்படுமா என்பதே இப்போதைய கேள்வி.

மத்தியில் ஆங்கிலமே இப்போது ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றும், 20, 25 வருடங்கள் கழித்தே ஒரு இந்திய மொழி அந்த இடத்துக்கு வரலாமென்றும், தமிழக முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அதே நேரத்தில் இந்தியை இணைப்புமொழியாக்கவேண்டுமென்பதில் காங்கிரஸ் தீவிரம் காட்டி வருகிறது.

இந்தி பேசாத மக்களுக்கு தீமை விளைவிக்கக்கூடிய மொழிப் பிரச்சினையில் தமிழ் நாடு காங்கிரசும், தி. மு. க.வும் ஓரணியில் நின்று போராடக் கூடுமானால், இந்தி வெறியர்கள் ஒன்றில் பின்வாங்க நேரிடும், அல்லது தென்னகம் தனி நாடாகும்.

### அன்று கூறியது

திரு. சுப்பிரமணியம், 1957-ம் ஆண்டு தமிழக நிதியமைச்சராக இருந்தபோது அப்போது எதிர்கட்சித் தலைவராக இருந்த அறிஞர் அண்ணாவிடம் கூறிய ஓர் கருத்து இங்கு நினைவுகூரத் தக்கது.

''நண்பர் அண்ணாதுரை தனது திராவிட நாடு கோரிக்கையை 10 ஆண்டுகள் தள்ளிப் போடட்டும். 10 ஆண்டுகளுக்குப் பின்னும், பிரிவினைக்கான காரணங்கள் இருக்குமானால் - தென்னகம், புறக்கணிக்கப் பட்டுவருமானால், திரு. அண்ணாதுரையுடன் சேர்ந்து நானும் திராவிட நாடு கேட்க தயாராக இருக்கிறேன்.''

இப்படி அன்று சட்ட மன்றத்தில் கருத்து தெரிவித்தார் திரு. சுப்பிரமணியம். இப்போது அவர் குறிப்பிட்ட 10 ஆண்டுகள் மறைந்துவிட்டன. மொழிச் சட்டத்தால் இந்தி இந்தி பேசாத மக்களுக்கு பெருந் தீமைகள் ஏற்படும் என்பதை திரு. சுப்பிரமணியமே ஒப்புக்கொண்டுவிட்டார். ஆகவே எதிர்காலத்தில் திரு. சுப்பிரமணியம் பிரிவினை கேட்குமளவுக்கு சென்றாலும் ஆச்சரியமில்லையென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## கிளிநொச்சி பட்டினசபை தேர்தல்:

# தமிழரசு வேட்பாளர்கள் எழுவரையும் தேர்ந்தெடுங்கள்!

## வாக்காளர்களுக்குஒருவேண்டுகோள்

கிளிநொச்சிப் பட்டின சபையின் முதலாவது தேர்தல் சனவரி 13-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இத் தேர்தலில் பட்டினசபையின் ஏழு வட்டாரங்களிலும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இத் தேர்தலையொட்டி கிளிநொச்சி பட்டினசபை வாக்காளர்களுக்கு கிளிநொச்சி தொகுதி தமிழரசுக்கிளைச் செயலாளர் திரு. பொன்னம்பலம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவ்வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:—

'கிளிநொச்சிப் பட்டினசபை நிறுவப்படுதலை எதிர்த்துப் பிரதம அமைச்சர் வரையும் சென்று போராடிய தமிழ்க் காங்கிரசின் முயற்சியை முறியடித்துப் பட்டினசபையை நிறுவியுள்ளோம். இது எங்கள் கட்சியின் முதல் வெற்றி.

[illegible]

டாவது வெற்றி. வேட்பாளர்கள் எழுவரையும் வெற்றி பெறச் செய்வது மூன்றாவது வெற்றி. இதற்கு உங்கள் உதவியை வேண்டுகின்றோம்.

எங்கள் கட்சி கிளிநொச்சிப் பட்டினசபை ஆட்சியை ஏற்றவுடன் எங்கள் பாராளுமன்ற உறுப்பினரின் உதவியுடன் பின்வரும் பணிகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளது என்பதையும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

குழாய்நீர் வழங்கல், வடிகால்கள் அமைத்தல், பரந்தன், கிளிநொச்சி சந்தைகளைப் புதிய முறையில் அமைத்தல், நகரமண்டபம் அமைத்தல், பூங்கா அமைத்தல், விளையாட்டு அரங்கு நிறுவுதல், திறந்தவெளி அரங்கு அமைத்தல், வீடமைப்புத திட்டத்தைப் பயன்படுத்தல், வீதிகள் செப்பனிடுதல், மின்சாரம் நீட்டித்தல், மத்திய நூலகம் அமைத்தல், தொழிற்கல்வி நிலையம் அமைத்தல், புகைவண்டிக் கடவைகள் அமைத்தல், பரந்தனில் வசந்நிலையம அமைத்தல், பட்டினசபை வட்[illegible]

துப்புதுப் பெயர்களிடல், பொது இடங்களில் மலசலகூடங்கள் அமைத்தல், வசதியற்ற பிள்ளைகளுக்கு இலவச நூல்கள் வழங்கல்

### தமிழரசுக்......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள நிலையின்படி பிரதம மந்திரி இம்மாதத்துள் தமிழரசுக் கட்சி கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்தாக வேண்டும் அத்துடன் நாட்டின் 'அகண்ட ஈழக் கொள்கையையும்' மக்கள் முன்னால் வந்து நிற்கும்.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்த பின்னர் இதுவரை பெற்றுள்ள வகுப்புவாதச் சலுகைகள் கொஞ்சமல்ல.

தமிழரசுக் கட்சி மாவட்ட சபை மசோதாவினுள் மறைந்து கொண்டு வடகிழக்கு மாகாணங்களை ஆக்கிரமிப்பதற்குதயாராகிறது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# யதார்த்தம்

## முனியப்பதாசன்

'குழந்தாய்.'

'குழந்தாய்.'

'குழந்தாய்'—

யாருடைய குரல் இது? தித்திக்கிறதாய்த் தேன் சொட்டச் சொட்ட இனிக்கிற இந்தக் குரல் நிச்சயம் அம்மாவினுடையது தான். தாய்மை கனிந்து கனிந்து கனிந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து குரலாய் வழிகிறதா?

'மகாசக்தித் தாயே, ஆசை அம்மா இது என்ன'? நடு யன்னலின் ஊடே தெரிந்த வெறு வெளியில் தாயின் மகாசக்தித் தாயின் அற்புத உருவம் எழுகிற மாதிரியிருந்தது. என்னவென்று சொல்வது? சிற்றுயிர்கள் ஒவ்வொன்றிற்கும் அது அறிந்தோ அறியாமலோ போகிறதாய் ஊற்றுப் புலர்ந்தபடியே யிருக்கிற இதழ்கள். மனிதன் பிணமாகி அவனுள்ளே தாய்மை மட்டுமே நிரம்பி வழியப் பண்ணுகிற முகம்... ...கண்கள்......

'அம்மா'

'அம்மா'

'அம்மா.'

வெறுமனே குரல் மட்டுமே ஓங்கி ஒலித்தது. யன்னலின் ஊடே தெரிநத தாய்மையின் உருவம் மறைந்து மீண்டும் வெறு வெளியாயிற்று. கண்களில் நீர் தேங்கிற்று. கம கம கம வென்று முலைப்பாலின் மணம் மட்டுமே சூழ்ந்தது. அந்தமணத்தில் கிறங்கிப்போய் நிர்ச்சலனமாய் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தேனோ? மீண்டும் அதே குரல். அதே கனிவு.

'குழந்தை'

'குழந்தை'

'குழந்தை'—

எங்கேயேனும் ஓடிப்போய்ச் செத்துப் போக வேண்டும் போல இருக்கிறது. என்ன மனம்? தாய்மையின் தோற்றத்திலேயே தேங்கிப் பின்ன மற நிற்க முனையாத போது என்ன வேண்டியிருக்கிறது?

'தம்பி'

'தம்பி'

'தம்பி'—

இது அம்மா, என்னைப் பெற்ற இராசம்மாவின் குரல். சினம் மூண்டுவிட்டது. 'சும்மா இரன் சனியன்.'

'போய்ச் சுருட்டொன்று வாங்கியாடா தம்பி.'

அம்மா—இந்த இராசம்மாவில் எனக்கு வெகு பிரியம். கடந்த காலத்தில் இப்போது கூடத்தான் எனக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறாள். என்னை ஏமாற்றிக்கொண்டு பொறுப்பற்ற சந்தோஷங்களோடு வம்பளந்து திரிந்துவிட்டு வருகிறபோதும் கூட அவள் மனம் நோக எதுவுமே பேசியதில்லை. இப்போதும்கூட பின்வளவிற்குப் போகப் பயந்துபோய் வீட்டுமுற்றத்தில் 'கக்கூசுக்கு' இருந்தாலும்கூட எதுவுமே பேசாமல் அதனை விடிய அவள் அள்ளிப்போட்டு விடுவாள். இரவில் தூக்கமின்மை கால் குத்து உளைவு, குடலிறக்கம், பார்வை மங்கல் என்று வியாதிகளோடு போராடியபடியேஇந்தக்குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள். கணகள் குழிவிழுந்து விட்டன. உடம்பு வற்றிப் போய் விட்டது. ஆளே ஒடுங்கிப்போனாள். மூன்று குழந்தைகளைப் பெற்று அதுவும் ஆண் குழந்தைகளாய்ப் பெற்றும் அவள் உழன்று கொண்டிருக்கிறாள். பாவாடையோடு ஒட்டிப்போன இடைதெரிய முன் நெஞ்சின் சதை மங்கித்தெரிய முன்நெற்றியில் வெண்மயிர் அலைய வந்தபடி மீண்டும் அவள் குரல்வைத்தாள்.

கடைக்குப்போய்ச்சுருட்டு வாங்கி வர எழுந்தேன். போகிற போதும் வருகிற போதும் மனம் வேதனையாயிருந்தது.

யன்னலின் ஊடே அந்த வெறு வெளியில் தெரிந்த தாய்மையின் உருவத்தைத் தருவித்துக்கொள்ள முடிந்திருந்தால், அந்த முகத்தை முத்தமிட முடிந்திருந்தால், அணைத்தபடியே அம்மா என்றை அம்மா 'மகாசக்தித் தாயே' என்று குரல் விம்ம அவள் மடி மீது தவழ்ந்து 'அவள் முலையில்வாய் வைத்துச் சுவைக்க முடிந்திருந்தால்...... அம்மா இராசம்மாவின் பேல் மீண்டும் கோபமெழுந்தது 'சனியன் அதால் வந்தது கொஞ்சம் அப்படியேயிருந்திருந்தால்.. ... அந்தத்தாயை......

மீண்டும் வந்து உட்கார்ந்தேன். ஒன்றும் தெரிகிறதாக இல்லை. வெறும் கனவோ என்கிற மயக்கம். அந்த அழைப்பின் சுகத்தை ஒட்டி மனம் நடந்தது.

அப்போது எனக்குக் கடவுள் பைத்தியம் என்கிறதாக உலகம் சொல்லிற்று. அப்படி ஒன்றும் பைத்தியமில்லை. ஒவ்வொரு கோயிலின் கர்ப்பக் கிரகத்தண்டைபோய் கடவுள் தெரிகிறாரோ என்று உற்று உற்றுப் பார்க்கிறது தான். சில மாதங்கள் அப்படி நடந்து போயிற்று. அவரை 'ஐயா' வை, முருகா அவரையும் அந்தத் தாயை மகாசக்தித் தாயையும் எப்படியும் கண்டு கொண்டுவிட வேண்டுமென்ற வெறிமட்டும்பற்றிப் படர்ந்து விட்டது. உண்ணுகிறதில்லை. அம்மாவை இராசம்மாவை தாமோதரம் பிள்ளைஐயாவைக் கண்டால் வெறுப்பு. பழைய புனிதமான தெய்வீகத் தன்மைகளின் வழி தொட்டுப் பிறந்த ஐயாவையே பிடிக்கவில்லை உலகத்துக்குப் பொழுதிருந்தால் பொழுதைப் பாகுபாடு செய்து தான் விரும்புகிறதை அனுபவிப்பானா? இன்னும் பொழுதிருக்கிற தென்று தனக்குப் பிடித்தமானதில் மூழ்கிப் போகானா? உலகத்தின் அடிநோக்குப் பைத்தியம்தான். எனக்குப் பொழுதிருக்கிறது என்று முன்னிலும் அதிகமாய் கோயிலைத் தேடிக் கொண்டிருந்தேன். அப்போதும் அதே குரல்.

'குழந்தாய்'

'குழந்தாய்'

'குழந்தாய்'—

நல்லூர்க் கோயிலின் முன்னால் மூலஸ்தானத்திற்கு நேரே பித்துப் பிடித்தாற் போல அந்தக் குரலைக் கேட்டபடியிருந்தேன். திடீரென்று வேகமெழுந்தது. தாய்மை வெறி, கோயிலில் ஓடி ஓடிப் பார்த்தேன். அவவை அம்மாவை அந்தத் தாய்மையின் மடியில் ஒரு கணமேனும் உட்கார்ந்து விட வேண்டுமென்கிற வெறி, அவரை முருகா அவரைப் பிடித்து 'இந்த அறியாத குழந்தையை எதற்காக உலைக்கிறாய் இது உனக்கு நியாயமோ' என்று கேட்க வேண்டும் போலவும் ...... எங்கேயென்று தேடுவது? யாரைக் கேட்பது? கொஞ்சக் காலம் கோயிலிலேயே தவம் கிடந்து பார்த்தேன். காணத்தான் இல்லை. 'முருகா' அவரை யாருக்கு வேணும்? அன்பேயுருவான அவரைவிடத் தாய்மை மேலானது அல்லவா? என்கிற எண்ணம், வீடு வந்து விட்டேன்.

இரவில் தூக்கம் இல்லை. சந்தோஷம் இல்லை; எதுவுமே இல்லை. ஓயாத ஒழிவேயில்லாத தாகம் தான். எங்கேயென்று பார்க்கிறது? எங்கே? எங்கே? எங்கே? 'அம்மா மகாசக்தி த்தாயே முருகா—நீ எங்கே எங்கே'— என்ற பிதற்றல்.

அன்று இரவு. தூக்கம் பிடிபடாமல் புரண்டபடியிருந்தேன். அம்மா பக்கத்தில் படுத்திருந்தாள்; இருந்திருந்தாற் போலிருந்தது அந்தக் கதையைச் சொன்னாள்.

சுற்றமும் அயலும் பிரமித்துப் போக அவள் பார்வதி பத்து வயதில் பூப்பெய்தி விட்டாள். நேற்றுப் போட்ட விதை இன்று பூத்து நிற்கிறமாதிரி என்று அம்மா உவமானம் சொன்னார். ஊருக்கெல்லாம் விடுகாலி ஒருத்தன் அவளுக்கு ஒரு துண்டுக் காகிதம் போட்டான். அவள் அரிவரிக்கு மேல் படித்ததில்லை. பெண்கள் கதைக்கிற கதைகளிலே ஏதாவது அறிவைப் பெற்றிருப்பாளோ என்னவோ? எப்போதோ அருமையாக மட்டுமே படம் பார்ப்பாள். அம்மா தன் நினைவில் வைத்திருந்து அந்தக் காகிதத்தை அப்படியே ஒப்புவித்தாள்.

'பார்வதி... நீ அறியாத பெண்ணா? என்னைத்தான் உனக்குத் தெரியுமே? பிறகென்ன. பின்னால் உள்ள பனை வளவுள். என்னை இரவில் சந்திக்க தவறாதே?' பார்வதி அந்தத் துண்டை யாருக்கும் காட்டவில்லை வெளியே பாயப்பார்க்கிற நீர் போல இருந்தாள். இரண்டொரு சந்திப்புக்கள் கூட நடந்து விட்டன.

அன்று மத்தியானம் பார்வதி பின் கொட்டிலுக்குப் போகிறபோது மாடொன்று அவளது பசுத்தான் கீழே கிடந்தபடி...... பார்வதியின் கண் கலங்கிற்று. பதினொரு வயது கூட நிரம்பாத அந்தச் சிறுமி விம்மி அழுதாள். 'அம்மா மாடு கஷ்டப்படுகிறது. கண்டு போடப் போகுது. ஓடிவா'—என்று உரக்கக் கத்தினாள். பிறகு ஓடிப்போய்த் தன்மடியில் சொருகியிருந்த காகிதத் துண்டைக் கசக்கி எறிந்தாள். பின்பு அதைக் கிழித்துக் காறித் துப்பினாள். எப்படியோ கிடந்த பென்சில் ஒன்றை எடுத்துக் கோணல் மாணலாய்... 'இனிச் சந்திக்க ஏலாது. ஓ வாழ்க்கை என்பது தாய்மை அதனால்' வீட்டின் பின்பகுதியில் அவன் வந்து நிற்கிற இடத்தில் அதனைப் போட்டாள். சிரித்தபடியே தாயோடு கொட்டிலில் நின்றபடி அலுவல் பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

கதை முடிய முன்னமே 'அம்மா' என்றேன்.

'என்ன'?

'அம்மாவை மகா சக்தித் தாயைத் தேடுகிறதைவிடப் போகிறேன். இந்த நிமிடத்திலிருந்து' என்றேன்.

அம்மா சந்தோஷத்தோடு 'ஏன்' என்றாள்.

'நீ யதார்த்தம். பார்வதி யதார்த்தம். ஆடும், மாடும், நாயும், பூனையும், புழுவும் எல்லாமே யதார்த்தமான தாய்மைதான். பிறகேன் பிரமையில் உழலுவான்.'

'புரியேல்லையடா'

'மனம் இந்த உலகத்திலேயே தாய்மையைக் கண்டு திருந்தும்'—என்றேன்.

'அம்மா சிரித்தாள். இராசம்மாதான்.

## பின்தங்கிய நாடுகளுக்கு உதவி

கைத்தொழில் வளம் பொருந்திய ஒவ்வொரு வல்லரசும் வறுமைப்பிடியில் வாடும் பின்தங்கிய நாடுகளுக்கு பொருளாதார உதவி அளித்துவருகிறது செல்வம் கொழிக்கும் நாடுகள் உலகத்தின் வறுமைப் பிரச்சினையைப் போக்குவதற்கு கடமைப்பட்டுள்ளன. இந்தத் தார்மீக கடைப்பாட்டுணர்ச்சியால் பிறந்த நல்லெண்ணமாகவே இந்த உதவிகள் கொடுபடுகின்றன. பின் தங்கிய நாடுகளின் பொருளாதார சீர்கேட்டைப் போக்கி சுபீட்சமான ஒரு உலக சமுதாயத்திற்கு வழி கோல இந்த உதவிகள் பயன் பெறுவது திண்ணம்.

பின்தங்கிய நாடுகளுக்கு உதவியளிக்கும் பணியில் பிரிட்டன் நீண்டகாலமாக ஒரு பிரதான பாகத்தை வகித்துவருகிறது. பின்தங்கிய உலகத்தின் சகல தேவைகளையும் சமாளிப்பதற்கு பிரிட்டனிடம்போதிய நிதிவளம் இல்லை. எனினும் சுமார் 100 நாடுகள்வரை பிரிட்டனிடமிருந்து உதவி பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிசய பந்தயம்

பத்து இட்லி சாப்பிடுவதே பலருக்கு மலைப்பாக இருக்கிறது. ஆனல் ஆஸ்திரேலியாவில் உள்ள ஒருவர், ஒரு காரையே தின்று விடுவதாக பந்தயம் கட்டியிருக்கிறார்.

அந்த அதிசய பயில்வானின் பெயர், லியோன் சேம்சன். இவர் இதற்கு முன்பு சவரப்பிளேடுகள் ஆணிகள், பல்புகள் ஆகியவற்றை 'முறுக்கு' 'மாதிரி சாப்பிட்டு இருக்கிறார். காரை சாப்பிடப் போவது இதுதான் முதல் தடவை.

## ரூபா ஒன்றரை லட்சம் பந்தயம்

காரை தின்று விட்டால் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் கொடுத்து விடுவதாக, ஜான் காத்த பொடீஸ் என்பவர் பந்தயம் கட்டியிருக்கிறார். முழுக் காரையும் தின்று முடிக்க, சேம்சன் 4 ஆண்டுகள் தவணை கேட்டு இருக்கிறார்.

அதற்கு ஜான் காத்த பொடீஸ் சம்மதம் தெரிவித்து விட்டார். சட்டப்படி எழுதப்பட்ட அந்த ஒப்பந்தம், சாட்சிகளின் முன்னால் கையெழுத்தாகிவிட்டது.

## ஒரு நாளைக்கு இரண்டு பவுண்டு

சேம்சன், இன்னும் சில வாரங்களில் காரைத் தின்னத் தொடங்குவார். சராசரி அளவுள்ள ஒரு காரை 4 ஆண்டுகளுக்குள் அவர் தின்று தீர்க்க வேண்டுமானல், ஒரு நாளைக்கு 2 பவுண்[illegible]ளே தள்ளவேண்டும்.

காரின் ஒவ்வொரு துண்டையும் அவர் தின்னும் போது அதை சாட்சிகளின் முன்னிலையில் செய்ய வேண்டும். ஸ்டீயரிங், சக்கரம் போன்ற பாகங்களை வாய்க்கு தகுந்தபடி சிறு துண்டுகளாக அவர் வெட்டிக் கொள்ளலாம்.

## டாக்டர்கள் எச்சரிக்கை

இந்த பந்தயத்தில் சேம்சன் வெற்றி பெற மாட்டார் என்ற கருதப்படுகிறது. 'பாதி காரைத் தின்பதற்குள் அவர் பரலோகம் போய் விடுவார்' என்று ஆஸ்திரேலிய டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இப்பொழுது சிலோன் என்டடெயின் மென்ட்ஸ் தாபனத்தார்

**எழிலுடன தந்திருக்கும் தெய்வம்**

இயகுநர் திலகத்தின் உயரிய படைப்பு!

இணைபிரியா அன்புச் சகோதரர் இருவர் இவர்களின் ஒற்றுமைக்கு வேற்றுமை காண விழைகிறார் ஒருவர். இதனால் அக்குடும்பம் நிலை குலைந்ததா? சீரழிந்ததா? அண்ணனிடம் அடக்கம், மனைவியிடம் கெஞ்சல், குழந்தைகளிடம் பாசம் — இவை எல்லாம் ஒன்று சேர்ந்த குடும்பத்தலைவன் என்ன வானான்? விடைகாண





கே. எஸ் கோபாலகிருஷ்ணனின்


# கண்கண்ட தெய்வம்

சென்ட்ரல் (மருதானை) திரையில் விருந்தளிக்கிறது.

★ பத்மினி ★ எஸ். வி. ரங்கராவ் ★ எஸ். வி. சுப்பையா ★ நாகேஷ் ★ நாகையா ★ சிவகுமார் ★ ஓ. ஏ. கே. தேவர் மற்றும் பலர் நடித்தது

பொங்கல் விருந்தாக ராணி (யாழ்ப்பாணம்) சிகிரி (பண்டாரவளை) ஜோதி (மட்டுநகர்) ராஜேஸ்வரி (திருமலை) லிபர்ட்டி (ஹட்டன்) ஆகிய திரைகளில் 11ந் திகதி முதல் எதிர்பாருங்கள்!

---



ஜனத்திரள் மிகுந்த திரைகளில்!!

## 2-வது வெற்றி வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்சி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜி கணேசன் பத்மினி சௌகார்ஜானகி ★ நாகேஷ் ★ சகஸ்ரநாமம் ★ சுந்தரிபாய் ★ சகுந்தலா ★ எஸ். வி. ரங்கராவ் ★ ஜெயபாரதி நடிக்கும்

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# பேசும் தெய்வம்

---

## மகத்தான தைப்பொங்கல் வெளியீடு

**செல்லமகால் ஈரோஸ் மற்றும் 5 திரைகளில்**

முத்துராமன் பாரதி நாகேஷ் ஏ. வி. எம். ராஜன் பி. ஆர். பந்துலு நடிக்கும்

# நம்ம வீட்டு லட்சுமி

---

## வெற்றிகரமான கடைசிவாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (அட்டன்)

முத்துராமன், ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா ★ சுந்தரராஜன் ★ நாகேஷ் நடிக்கும்

ஏ. வி. எம். அளிக்கும்

# மேஜர் சந்திரகாந்த்

## 2-வது வாரமாக காட்சி தருகிறது

கெப்பிட்டல் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) சந்தியா (கம்பளை) தாஜ்மகால் (கல்முனை) அயன் (மன்னார்) கிறசென்ட் (புத்தளம்)

**எஸ். எஸ். ஆர். தேவிகா காஞ்சனா நடிக்கும்**

# மறக்க முடியுமா

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ... கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் ... ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org